www.padippakam.com

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

புதிய பூமி

புதிய பூமி

வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

PUTHIYA POOMI

சுற்று 09 | ஏப்ரல் 2002 | பக்கம் 12 | விலை 10/- | சுழற்றி 46

# அரசாங்கமும் புலிகள் இயக்கமும் பயணிக்கப் போகும் பாதை எது?

ரசாங்கமும் புலிகள் இயக்கமும் சய்து கொண்ட புரிந்துணர்வு பந்தமும் அதன் அடிப்படையில் ன்னெடுக்கப்பட்டு வரும் யுத்த றுத்தமும் சமாதானத்தை விரும்பும்



னைத்து மக்களாலும் வரவேற்கப் ]கிறது. மேற்படி ஒப்பந்தத்தின் கீழ் தகமான நடவடிக்கைகள் ஒவ்வொன் ம் நியாயமான செயற் பாடுகளேயாகும்.

வெற்றின் அடுத்த கட்டமாக அரசியல் ர்வுக்கான பேச்சுவார்த்தை இடம் பெற்று நியாயமான தீர்வுக்கு வழிவகை காணப்படுவதே சரியான செயற் பாடாகும். ஆனால் அத்தகைய ஒரு பேச்சுவார்த்தை உடனடியாக இடம் பெறும் என எதிர்பார்க்க முடியவில்லை. ஏனெனில் வடக்கு கிழக்கு இணைக்கப் பட்டு தமிழர்களின் பாரம்பரிய தாயகப் பிரதேசத்திற்கு சுயநிர்ணய அடிப்படை யில் சுயாட்சியை வழங்குவதற்கு ஒற்றை யாட்சிக் கோட்பாட்டை உறுதியாகப் பின்பற்றி நிற்கும் பேரினவாத பெரு முதலாளித்துவ ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் தயாராக இல்லை. இதனை பிரதமரும் அவரது அரசியல் யாப்பு விவ கார அமைச்சர் பீரிசும் நேரடி யாகவும் மறைமுகமாகவும் எடுத்துக் கூறி வருகின்றனர்.

எனவேதான் இடைக்கால சபை ஒன்றை ஏற்படுத்தி புலிகள் இயக்கத் தின் ஊடாக நடைமுறைக்கு கொண்டு வர முடிவு செய்யப்பட்டுள்ளது. இவ் இடைக்கால சபையை ஏற்கும் படி புலிகள் இயக்கம் நிர்ப்பந்திக்கப்பட் டுள்ளது. இன்றைய தேசிய சர்வதேசிய சூழலிலும். அரசியல் பொருளாதார. ராணுவ யதார்த்த அடிப்படைகளிலும் புலிகள் இயக்கம் இடைக்கால சபையை ஏற்றுக்கொள்வதற்கு இணங்கி உள்ளார்கள். கடுமையான அழிவு களுக்கு உள்ளாகி நிற்கும் வடக்கு கிழக்கை மீளக் கட்டியெழுப்புவதற்கும் மக்களுக்கு நிம்மதியை வழங்குவதற்கும் இடைக்கால சபையை ஏற்கப் போவதாகப் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரன் ஊடவியலாளர் சந்திப்பில் கூறியுள்ளார்.

அத்துடன் அவ் இடைக்கால சபையின் அமைப்பு முறை அதன் அதிகாரங்கள். அதில் அங்கம் பெறுவோர் பற்றிய பேச்சு வார்த்தையே தாய்லாந்தில் நடைபெற இருக்கின்றன என்றும் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. இவ் இடைக்கால சபை தோற்றுவிக்கப்படுவது இன்றைய சூழலில் தேவையானதேயாகும். ஆனால் இச்சபையின் தோற்றமும் செயற்பாடும் நீண்டகாலப் பிரச்சினை யாகவும் கொடிய யுத்தமாகவும் உள்ள தேசிய இனப்பிரச்சினை இன்றைய அமைப்பிற்குள் தீர்வு காணக் கூடிய வழிவகைகளைத் தட்டிக் கழித்துக் கொள்வதாக அமைந்து விடக் கூடாது. நிலைத்து நிற்கக் கூடிய நியாயமான தீர்வு காணப்படாது விடின் மீண்டும் யுத்தமும் அழிவுகளும் ஏற்படவே செய்யும். பேரினவாத சக்திகளினதும் அவர்களுக்கு வழிகாட்டும் அந்நிய மேலாதிக்க சக்திகளினதும் புதிய வகை இழுத்தடிப்பாகவும் காலம் கடத்தலாக வும் இவ் இடைக்கால சபை அமைந்து விடக்கூடாது என்பதில் உரிய கவனம்



செலுத்தப்படல் வெண்டும்.

இடைக்கால சபை நிர்வாகத்தின் கீழ் வடக்கு கிழக்கின் பொருளாதாரக் கட்டமைப்பு எந்த அடிப்படையில் முன்னெடுக்கப்படப் போகிறது. தேசிய சுய பொருளாதார மீள் கட்டியெ ழுப்புதலே தேவைப்படுகின்றது. ஆனால் அன்டன் பாலசிங்கம் ஊடகவியலாளர் சந்திப்பில் திறந்த சந்தைப் பொருளாதார மாகவே வடக்கு கிழக்கின் பொருளா தாரம் இருக்கும் எனக் கூறிஉள்ளார். இது முற்றிலும் ஏகாதிபத்திய உலக மயமாதல் நிகழ்ச்சி நிரலை உள்வாங்கிக் கொண்டமையை எடுத்துக் காட்டு கின்றது. இதன் மூலம் வடக்கு கிழக்கு விவசாயிகள்.

12ம் பக்கம் பார்க்க

## மலையக மக்கள் ஒரு தேசிய இனம்
## சந்திரசேகரன் கதை மாற்றுகிறார்

லையகத் தமிழ் மக்கள் ஒரு ற்படுத்தப்பட்ட சமூகம் என்று அரசியல் மைப்பில் குறிப்பிடப்பட்டு அவர்களுக் கன விஷேட சலுகைகள் வழங்கப்பட வண்டும் என்ற ம.ம.முன்னணியின் லைவரும் அமைச்சருமான ப.சந்திரசேகரன் கூறுகிறார். இதன் லம் மலையக அரசியலில் இன்னும் லகாலத்திற்கு அவரது இருப்பை துகாத்துக் கொள்வதற்கு புதிய ழிதேடிக் கொண்டுள்ளார்.

லையகத் தமிழ் மக்கள் ஒரு தனியான தசிய இனம் என்று கூறிக் கொண்டே ந்திரசேகரம் அரசியலில் பிரவேசித்தார். லையகத் தமிழ் மக்களுக்கு தனியான ாகாணசபை வேண்டுமென்று காரிக்கையும் விடுத்தார். அவர் பொது ன ஐக்கிய முன்னணி, ஐ.தே.கட்சி ரசாங்கங்களுடன் நெருக்கமாகி அமைச்சர் பதிவிபெற்றவுடன் மெல்ல மெல்ல அக்கோரிக்கைகளை கை கழுவிக் கொண்டார். அவ் அரசாங்கங்க ளுடன் பகைக்காமல் தனது இருப்பை பாதுகாத்துக் கொள்ள விரும்பியே மேற்படி கோரிக்கைகளை கைவிட்டார்.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை க்கு அரசியல் தீர்வு காண்பதற்கான அக்கறைகள் தென்படுகின்றன. இவ் வேளையில் மலையகத் தமிழ் மக்களின் தேசிய அபிலாஷைகளை உறுதிசெய் வற்கான தீர்வுகள் பற்றியும் கேள்வி எழுப்பப்படுகிறது. அம்மக்களையும் ஒரு தேசிய இனமாக அங்கீகரித்து அரசியல் அதிகாரத்தில் அவர்களுக்குரிய பங்கை உறுதிசெய்து அவர்களின் சுயாட்சியை உறுதிசெய்ய வேண்டும் என்று கேட்பதே நியாயமானதாக இருக்க முடியும்.

12ம் பக்கம் பார்க்க....

## ஐ.தே.கட்சி ஆட்சியின் சுயரூபம் வெளிப்பட ஆரம்பித்து விட்டது!

நாட்டு மக்கள் மிகுந்த எதிர்பார்ப்புட னேயே ஐக்கிய தேசிய முன்னணிக்கு வாக்களித்தனர். முன்னணி என்று பெயரிடப்பட்டிருந்தாலும் அரசாங்கத்திற் கான கொள்கை வகுப்பதும், வழி நடாத்துவதும், தலைமை தாங்குவதும் ஐக்கிய தேசியக் கட்சியேயாகும். இக் கட்சி இலங்கை அரசியலுக்கு புதிய கட்சியுமல்ல அதன் தலைமை இந்நாட்டு மக்களின் அடிப்படை அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் ஒரு தலைமையும் அல்ல. அது முற்று முழுக்கவே நிலவுடமை முதலாளித்துவ அந்நிய ஏகாதிபத்திய விசுவாசமிக்க மேட்டுக் குடி ஆளும் வர்க்க வழி வந்த கட்சியும் தலைமையும் தான்.

பாராளுமன்ற அரசியல் களத்தில் மாறி மாறி ஆண்டு வந்த வரிசையில் அக்கட்சி மீண்டும் ஆட்சி அதிகாரத் திற்கு வந்துள்ளது. மக்கள் வீணான நம்பிக்கையுடனும் நிர்ப்பந்த அரசியல் சூழலிலும், அப்பாவித்தனமான எதிர்பார்ப் பிலும் வாக்களித்தனர். தங்களை வாட்டி வதைத்த வரிச்சுமைகளும், வாழ்க்கைச் செலவு அதிகரிப்புகளும், வேலைவாய்ப் பின்மைகளும் ஏனைய பிரச்சினைகள் நெருக்கடிகளும் மாற்றமடைந்து ஆறுதல் பெறலாம் என எதிர்பார்த்தனர்.

ஆனால் ஏமாற்றத்தின் ஆரம்ப அடையாளங்களையே மக்கள் காண ஆரம்பித்துள்ளனர். வரவு செலவுத் திட்டத்தில் ஐக்கிய தேசியத் கட்சி தனது சுயரூபத்தை வெளிப்படுத்திவிட்டது. தொழிலாளர்கள் விவசாயிகள் அரசாங்க தனியார் ஊழியர்கள் மற்றும் உழைக்கும் மக்களுக்கு வரவு செலவுத் திட்டத்தின் மூலம் எதையும் அரசாங்கம் வழங்க வில்லை. அதேவேளை மக்களுடைய சுமைகளையும் வாழ்க்கை செலவு களையும் அதிகரிக்கச் செய்யும் நடவடிக் கைகளையே ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் கொண்டு வந்திருக்கிறது.

வரவு செலவுத் திட்டத்தைத் தொடர்ந்து மின்சாரக் கட்டணம் 30 வீதத்தாலும் தொலைபேசிக் கட்டணம் 15 வீதத்தாலும் உயர்த்தப்பட்டுள்ளன. விரைவில் எரி பொருட்களின் விலை உயர்வுகள் இடம் பெறலாம் என எதிர் பார்க்கப்படுகிறது. முன்னை ஜி.எஸ்.ரி. பாதுகாப்பு வரி என்பன இல்லாமல் செய்யப்பட்டு வாற் (VAT) என்ற பெயரில் ஒட்டு மொத்த வரி

12ம் பக்கம் பார்க்க

## பலாலியில் படைத்தளம் கடற்தளம் திருமலையில்

லாலியில் அமெரிக்காவின் படைத்தளம் றுவுவதற்கான கால்கோள் குறித்தாகி ிட்டது. ஏற்கனவே அமெரிக்க ாஜாங்க உதவிச் செயலாளரும் கடற் ட கட்டளைத் தளபதியும் பிரதமர் திதம் சென்று பார்வையிட்டு ஆலோச னைகளும் நடாத்தி வந்துள்ளனர். தன் உத்தேசக் கட்டமாக கண்ணி வடியகற்றும் ராணுவக் குழு வந்து றங்கி விட்டது.

தேவேளை திருகோணமலை துறை கத்தின் கடற்படைத் தளப் பகுதியும் மெரிக்க கடற்சமருக்கான கட்டளைத் ாபதியினால் பார்வை யிட்டுச் செல்லப் டுள்ளது. இதற்கு முன்பாக ஏற் னவே இலங்கைக்கான அமெரிக்கத் துவர் ஆஷ்லி வில்ஸ் திருகோண மலைக்கும் யாழ்ப்பாணத்திற்கும் பயன் மிக்கப் பயணம் செய்து பார்க்க வேண்டி யவர்களையும் இடங்களையும் உரிய வாறு பார்த்து வந்துள்ளார். அமெரிக்கா இப்போது இலங்கை விவகாரத்தில் மிக மிக வேகமாகச் செயல்பட்டு வருகிறதை உணர முடிகிறது.

இச் சூழலைப் புரிந்துகொண்ட காரண த்தினாலேயே இந்தியத் தூதுவர் திரு கோணமலை சென்று தமது நோக்கில் பார்க்க வேண்டிய இடங்களைப் பார்த்து உள்ளார்ந்த திட்டங்களுடன் திரும்பி யுள்ளார். நிலத்தடி எண்ணெய் குதங்களில் பதினைந்தைப் பெற்றுக் கொள்ளவும் முடிவுசெய்யப்பட்டுள்ளது. இங்கே அமெரிக்க - இந்திய ஆதிக்கப் போட்டி நடைபெறுவதைக் காண முடிகின்றது.

உலகப் பயங்கரவாதம் என்ற பெயரில் அமெரிக்கா தனது தேவை கருதி எந்த மூன்றாம் உலக நாடுகளுக்குள்ளும் வரக் கூடிய சர்வதேசச் சூழல் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. அண்மையில் பிலிப்பீன்சில் அமெரிக்கப் படை முஸ்லீம் போராட்ட இயக்கத்தை நசுக்குவதற் கென்றே சென்றுள்ளது.

அவ்வாறே நாளை இலங்கையிலும் அமெரிக்கா நடந்து கொள்வதற்கான ஆரம்ப செயல்பாடுகளில் இறங்கி யுள்ளது. அதற்கு உகந்த இடமாக பலாலியில் படைத்தளமும் திருகோண மலையில் கடற்தளமும் அமைக்க உள்ளார்ந்த வேலைகளுக்கு ஆலோச னைகள் கலந்து பேசப்பட்டும் வருகின்றது. அமெரிக்க ஆதிக்கத்தை ஏற்றுக்கொள்வதில் சிங்கள தமிழ் முஸ்லீம் தலைமைகளுக்கு தயக்கம் இருப்பதாகத் தெரியவில்லை.

இவ் அபாயம் பற்றிப் பரந்துபேசப்பட வில்லை என்பது உண்மையேயாகும். இத்தகைய படைத்தளத் தளத்திற்கான முயற்சிகள் மக்களது தூரநோக்குடைய எதிர்ப்புகளாலேயே தடுத்து நிறுத்தப்பட முடியும். அதற்கான முன்னெடுப்புகள் இடதுசாரி ஜனநாயக சக்திகளால் மட்டுமே முன்கொண்டு செல்ல இயலும்.

படிப்பகம்

www.padippakam.com



# வவுனியாவில் காணப்படும் அவலங்கள்!!

## யாரொடு நோவோம்? யார்க்கெடுத்துரைப்போம்?

வடக்குக்கும் தெற்கிற்குமான தொடர்பில் வவுனியா பெரிதும் முக்கியத்துவம் வாய்ந்த இடமாக இருக்கிறது. இடப்பெயர்வின் காரணமாக குடித்தொகைப் பெருக்கம் குத்தாக உயர்ந்துள்ளது. பிற மாவட்டங்களில் இருந்து இவ் 'விடுவிக்கப்பட்ட' பிரதேசத்தில் பல்வேறு காரணங்களினால் மக்கள் குடியேறி இருக்கிறார்கள். விடுவிக்கப்படாத பகுதிகளில் கிடைக்காத பாதுகாப்பு இங்கு கிடைக்கும் என்றும். அரசியல் காரணமாக. உத்தியோகம் காரணமாக, தொழில் வாய்ப்புக் காரணமாக இன்னும் அகதிகளாக பல்லாயிரக் கணக்கானோர் இங்கு குடியேறினர்.

இந்தத் திடீர் உயர்வுக்கு ஈடு கொடுக்கும் வகையில் வவுனியா நகரும் புறநகர் பகுதிகளும் இருக்க வில்லை. இதன் காரணமாக இருப்பிடப் பிரச்சினை, சுகாதாரப் பிரச்சினை, போக்குவரத்துப் பிரச்சினை, நீர்ப் பிரச்சினை போன்ற பல பிரச்சினைகள் வவுனியாவை ஆட்கொண்டு நிற்கின்றன.

வவுனியா நகர் நிர்வாக மையமாகவும் போக்குவரத்து மையமாகவும் வர்த்தக மையமாகவும் இருக்க புறநகர்ப்பகுதிகள் குளநீர்ப்பாசனத்தை மையமாகக் கொண்ட விவசாயப் பிரதேசமாக இருக்கிறது. இந்த குளத்துக்கும் குடியிருப்புக்குமான தொடர்பை நிர்வாக மையத்தோரும் பொது நிறுவனங்களும் மறந்துவிட்டதும் பொதுமக்களிடம் விழிப்புணர்வு குன்றிவிட்டதும் முக்கிய பிரச்சினையாகத் தலையெடுத்துள்ளது.

வவுனியா நகர்ப்புறத்தை அண்டியுள்ள குளங்கள் களவாடப்பட்டு குடியிருப்புக்களாக மாற்றம் பெற்றுள்ளன. மக்களுக்கு குடியிருப்புக்கள் அவசியமானவை. அவற்றைவிட அப்பகுதியில் நீர் கிடைக்க வேண்டியது அத்தியாவசியம். குடியிருப்புக்களை அரசாங்கம் அமைக்கும் போது நகர்ப்புறத்தை விட்டு தூர இடங்களில் அமைத்துவருகிறது. ஆனால் இயக்கங்களின் அனுசரனையுடனும் அதிகாரிகளின் அனுசரனையுடனும் பல குளங்களை இயக்க ஆதரவாளர்களும் உயர் நிர்வாகிகள் போன்றோர் கபளீகரம் செய்துள்ளார்கள். குடியிருப்பில்லா தோர்க்கு காணிவழங்க பொது இடமான அலைகரைப் பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. இவை கொஞ்சங் கொஞ்சமாக நடுக்குளம் வரையும் வந்துள்ளன. இப்படி வந்துள்ள காரணத்தினால் குளத்தில் நீரைத் தேக்க முடியாது தேக்கினால் குடியேறியவர்களின் வீடுகளுக்குள் நீர் புகுந்துவிடும். குளத்தில் நீர் தேக்காவிட்டால் பயிர் செய்ய முடியாது போய் விடும். இதனால் குடியேறிகளுக்கும் விவசாயிகளுக்கும் இடையில் பெரும்பகை மூண்டுள்ளது. இந்த குடியேற்றத்தில் காணியற்றவர்கள் மாத்திரமல்ல எற்கனவே காணி வீடு வைத்திருப்போர்க்கும் வசதியான இடத்தில் காணியும் கிடைத்துள்ளது. அதுமட்டுமல்ல இவற்றைத் தட்டிக் கேட்டு நடவடிக்கை எடுக்க வேண்டிய அரச அதிகாரியோ குளத்துக் காணியில் வீடுகட்டி அரச செலவில் வீதி அமைத்து அருகில் குடியேறிய அடாத்துக், குடியேறிகளுக்கும் ஆசி அருளியுள்ளமை வேதனைக் குரியது, நகரத்தில் உள்ள வைரவப்புளியங்குளம் பண்டாரிக்குளம், பட்டாணிபுளியங்குளம், வவுனியாக்குளம், கோயிற்குளம் இப்படி அடுக்கிக் கொண்டு போகலாம். இப்படி அடாத்துக் குடியேற்றத்தால் சீரிய வடிகாலமைப்பு இன்றி குளங்கள் நீரின்றி வரண்டு போகின்றன. இதனால் குடிநீரின்றி நகரப்பகுதி மக்கள் குடியெழும்ப வேண்டிய காலம் விரைவில் ஏற்படுமோ என அஞ்சவேண்டியுள்ளது. ஆகவே வீடமைப்புக்கு அனுமதி வழங்குவோர் வடிகாலமைப்பு துண்டிக்கப்படாமல் உரிய கவனம் செலுத்தவேண்டும்.

**வவுனியாவிலிருந்து நமது விஷேட நிருபர்**

அடுத்து வன்னிப்பகுதியில் இருந்து வருவோர் தங்கிச் செல்வதற்கான ஏற்ற விடுதி வசதிகள் இல்லை. பயணிகள் தாங்கள் தங்கிச் செல்வதற்கு ஒரு இடம் கிடைத்தால் அதுவே பெரிய காரியம் என நினைக்கின்றார்கள். இந்த அத்தியாவசியத் தன்மையை வியாபாரம் தெரிந்த கனவான்கள் வசதியற்ற தங்குமிடங்களை வழங்கி பணத்தைக் கறந்து கொள்கிறார்கள். முக்கியமாக. ஏற்ற மலசல கூட வசதிகள் இல்லை. சில விடுதிகள் இக் கழிவுகளை குளத்துக்கான வடிகாலில் இறக்கி விடுகின்றன. இக்கழிவுகள் வவுனியாக் குளத்தில் சங்கமமாகின்றன. இத்தன்மை இருந்த போதிலும் இக்குளத்தில் நீராடுதல் மீன் பிடித்தல் சலவை செய்தல் முதலான பொதுமக்கள் சுகாதாரம் சார்ந்த கருமங்கள் நடைபெறுகின்றன. பூந்தோட்டம் பகுதி நலன்புரி நிலையத்தில் இருக்கும் மக்களில் பலர் உட்பட வேறு பலரும் இம்மலம் கலக்கும் இக்குளத்திலே நீராட வேண்டியவர்களாக இருக்கின்றனர். இது மாத்திரமல்ல இந்நீரிலே தான் உடைகளும் துவைக்கப்படுகின்றன. இக் குளத்து மீன்கள் உணவாகின்றன, இங்கே வளர்கின்ற தாமரை இலைகள் உணவு, பரிமாறுவதற்கும் பயன்படுத்தப்படுகின்றன. இதனால் தொற்று நோய்களின் சொர்க்கபுரியாக வவுனியா திகழ்கின்றது. தனியார் விடுதிகள் கழிவகற்றுவதில் சீரிய முறையைக் கடைப் பிடிக்காதது போலவே பஸ் நிலையம். சந்தை, கச்சேரி நலன்புரி நிலையங்கள் போன்ற பொது இடங்களின் மலசல கூட வசதி மிகவும் கேவலமான நிலையில் காணப்படுகின்றன. பஸ் நிலையம். சந்தை என்பவற்றின் மலசல கூடங்கள் நோய்கள் விநியோகம் செய்யும் களஞ்சியங்களாக இருக்கின்றன. இவற்றின் பெண்கள் பகுதி மிகமோசம். துப்புரவாக்கும் ஊழியர்களை காண்பது அரிது, உண்டியல் பெட்டியை மாத்திரம் காணலாம். நீர்வசதியைக் காணமுடியாது. நகரசபை ஊழியர்களை நியமிப்பதில்லையா? மேற்பார்வை செய்வதில்லையா? மக்களிடம் வரிப்பணம் அறவிடுவதில்லையா? கச்சேரிக்கு அலுவலுக்காக பெருந்தொகையான மக்கள் வருகின்றனர். இவர்கள் இருப்பது துப்பரவு செய்யப்படாத மலசல கூடம்தான். இன்னும் பொதுமக்கள் பாவனைக்கான மலசல கூடங்கள் மறைவிலுள்ளன. அவற்றை பொதுமக்கள் பாவிப்பதற்கு வழிகாட்டிப் பலகை மூலம் அறிவிக்க முடியும். அவை அப்படிச் செய்யப்பட்ட பின்பும் அவற்றை துப்புரவு செய்வதில் அசமந்தப் போக்கு காட்டப்படும் என நம்பலாம்.

நலன்புரி நிலையங்கள் மக்கள் தொகை கூடுதலாகவும் நெருக்கம் மிகுந்ததாகவும் இருப்பது கண்கூடு. ஆகவே இங்கு இருக்கும் பொது மலசலகூடங்கள் கூடிய விரைவில் நிரம்பக் கூடியவையாக இருப்பது தெட்டத் தெளிவு. நீர்த் தட்டுப்பாடு. அறியாமை என்ற காரணத்தைக் காட்டி அவற்றை சுத்தம் செய்விப்பவர்கள் கரிசனையின்றி இருக்கின்றார்கள். மந்திரிமார், மற்றும் பெரியவர்கள் வந்தால் மாத்திரம் இவை துப்புரவாக்கப் படுகின்றன. இதனால் அடிக்கடி இப்பெரியவர்கள் வரவேண்டுமென இம்மக்கள் சாமிக்கு நேர்த்தி வைக்கிறார்கள். இங்கிருந்து துப்பரவாக்கப்படும் இக்கழிவுகள் சிதம்புரப் பகுதியில் மக்கள் பாவனைக்குரிய இடங்களில். கொட்டப் படுவது பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போலவாகும்.

இவற்றையெல்லாம் யாரோடு நோவோம். யாருக்கெடுத்துரைப் போம். உரியவர்கள் எல்லோரும் நேரடியாகவும் மறைமுகமாகவும் மக்களை உறுஞ்சுவதில் அல்லவா கண்ணும் கருத்துமாக இருந்து வருகின்றனர்.

# கூட்டு ஒப்பந்தத்தில் மலையகத் தலைமைகளின் நிலை என்ன?

எதிர்வரும் யூன்மாதம் புதுப்பிக்கப்படவுள்ள தோட்டத் தொழிற்சங்கங்களுக்கும் தோட்டக் கம்பனிகளுக்குமிடையேயான கூட்டு ஒப்பந்தத்தின் மூலம் நூற்றுக்கு பத்து சதவீதத்திற்கு மேற்படாத சம்பள உயர்வை வழங்கவே தோட்டக் கம்பனிகள் தயாராக இருப்பதாகத் தெரிகிறது அத்துடன் தொழிலாளர்கள் மீது சில கடுமையான வேலை நிபந்தனைகளை விதிக்கவிருப்பதாகவும் அறியமுடிகிறது.

தோட்டத் தொழிற்சங்கங்களின் சார்பில் புதிய கூட்டு ஒப்பந்தத்துக்கான எந்தவொரு ஆயத்தமும் இன்னும் செய்யப்படவில்லை. அவ்வளவு தொகை யை சம்பள உயர்வாக கேட்பது போன்ற அடிப்படையான விடயங்கள் தொடர்பாக எவ்வித முடிவோ. வரைவோ இல்லாமலே தோட்டத் தொழிற்சங்கங்கள் பேரப் பேச்சுக்கு போகவிருக் கின்றன.

முன்பு எல்லோருக்கும் வழங்கப்பட்ட இரண்டு சம்பள உயர்வுகள் தோட்டத் தொழிலாளர்களுக்கு இன்னும் வழங்கப் படவில்லை. மாதாந்தம் 400 ரூபாவும் பின்னர் மாதாந்தம் 1200 ரூபாவும் அரசாங்க ஊழியர்களுக்கும் தனியார் ஊழியர்களுக்கும் வழங்கப் பட்டன. 400 ரூபா சம்பள உயர்வை பெற்றுத் தந்து விட்டதாக ஆறுமுகமும் சந்திரசேகரனும் நாடகமாடினார்கள். 1200 ரூபா சம்பள உயர்வை பற்றி அவர்கள் கதைப்பதாகவே இல்லை பொதுத் தேர்தலில் வெற்றியடைந்த பிறகு சம்பள உயர்வு பற்றி பார்க்கலாம் என்றும் கூறினார்கள். இன்று உள்ளுராட்சி சபைத் தேர்தலிலும் வெற்றிபெற்று விட்டார்கள். பொங்கு தமிழ் எழுச்சியிலும் சமாதான எழுச்சியிலும் வீரவசனம் பேசிக் கொண்டு திரிகிறார்கள்.

ஐ.தே.மு. அரசாங்கத்தின் வரவு செலவு திட்டமும் நிறைவேற்றப்பட்டுவிட்டது அதிலும் மக்களுக்கு எவ்வித நன்மையும் இல்லை. தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப் படாதது மட்டுமல்ல வரவுசெலவு திட்டத்தில் மலையகத் தமிழ் மக்களுக்கென விசேட அபிவிருத்தி திட்டங்கள் எதுவும் முன்வைக்கப்படவும் இல்லை. இருந்தும் மலையக எம்.பீக்களின் ஆதரவுடன் அது நிறைவேற்றப்பட்டது.

இன்று உயர்ந்து செல்கின்ற விலைவாசிகளால் வாழ்க்கை செலவு உயர்ந்து கோண்டே போகிறது. எந்தவொரு உணவுப் பொருளும் கொழும்பிலிருந்து செல்ல வேண்டியிருப்பதால் தோட்டத் தொழிலாளர் கள் ஏனையோரைவிட பிரத்தியேகமாகவுப் பாதிக்கப்படுகின்றனர். இவ் வாறான சூழ்நிலையில் மக்களுக்கு வழங்கப்படுகின்ற எந்த நிவாரணமும் தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்டுவதில்லை.

அமைச்சர் சந்திரசேகரன் வடக்கு கிழக்கில் நடைபெற்ற பொங்குதமிழ் நிகழ்வுகளில் கலந்துகொண்டு தமிழர் ஒற்றுமை பற்றியும், விடுதலை பற்றியும் கதைத்து வருகின்றார். அமைச்சர் ஆறுமுகம் கிழக்கு மாகாணத்தில் அவரின் வீடமைப்பு அமைச்சினூடாக வீடுகளை கட்டிக்கொடுப்பதில் அக்கறை காட்டி வருகிறார். அதற்காக மட்டக்களப்பிற்கும், திருகோணமலைக்கும் விஜயம் செய்த அவர் புலிகள் இயக்கத் தலைவர்களின் விருந்துபசாரங்களிலும் கலந்து கொண்டு விடுகிறார். மலையகத் தமிழ் மக்களை விட வடக்கு கிழக்கு மக்களே அதிகம் பாதிக்கப்பட்டு கஸ்டப்படுவதாகவும் புதிய கண்டுபிடிப்பை செய்துள்ளார். இன்று வழங்கப்படுகின்ற நாளாந்த சம்பளம் நாளாந்த வாழ்க்கையை சமாளிக்க போதுமானதாக இல்லை என்பதை அவர் கண்டு கொள்ளாது இருப்பது வேடிக்கையானது.

தொடர்ச்சி 11ம் பக்கம்

# நாலு நடக்கும் உலகிலே நற்குணன்

## கேளுங்கள் தரப்படும், சும்மா இல்லை

வடக்கு - கிழக்கில் உள்ளுராட்சித் தேர்தலைப் பின்போடுவதில் நாலுகட் கூட்டணிக்கு ஒரு தற்காலிக வெற்றி கிட்டியுள்ளது. இந்த ஆனந்தம் எவ்வ காலம் நிலைக்குமோ என்பது இன்னொரு விடயம். பாராளுமன்றத் தேர்தலுக் தடையாக இல்லாத ஒரு போர்ச் சூழல் இப்போது அமைதி நிலவுகிற சூழல மாறியுள்ளது. அப்போது இல்லாத என்ன பிரச்சினை இப்போது வந்துள்ளது என தமிழ்க் கட்சித் தலைமைகள் உள்ளுராட்சித் தேர்தலைப் பின்போட வேண் கொண்டன. தங்களுக்குள் உள்ள குத்து வெட்டை விடக் காரணம் ஏதும் உண்

இதற்காகப் பிரதமர் ரணிலைக் கெஞ்சி மன்றாடிப் பெற்ற இச் சலுகைக்கு இவர் பிரதியாக எதைக் கொடுக்கப் போகிறார்கள்?

## பிச்சை எடுத்ததாம் பெருமாள், அதைத் தட்டிப் பறித்ததாம் அனுமார்

பொதுசன முன்னணி அரசாங்கக் காலத்தில் இரண்டு வருடமாகப் படாதபா பட்டு நோர்வே அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் சமர செய்ய எடுத்த முயற்சிகளைச் குழப்ப அரசாங்கம் கையாண்ட ஒ தந்திரத்தையேனும் அமெரிக்கா தட்டிக் கேட்டதில்லை. பேச்சுவார்த்தைகளை குழப்பிய போதெல்லாம் அரசாங்கத் தரப்பில் நின்று பயங்கரவாதத்தை எதிர் அமெரிக்கா இப்போது தன்னுடைய தலைமையில் தான் சமாதானம் என்ற விதம அதிகாரம் பண்ணத் தொடங்கிவிட்டது.

இஸ்ரேல் - பலஸ்தீன உடன்படிக்கை 1992ல் கைச்சாத்திடப்பட்ட போதும் அதற்கு அமெரிக்கா நாட்டாண்மைத்தனம் புகுந்தது. அதன் விளைவை இன்னமும் பலஸ்தீன அனுபவிக்கிறது இங்கேயும் அமெரிக்காவின் குறுக்கீட்டால் என்ன நடக்கு என்பது பற்றிக் கவலைப்படாமல் இருக்க முடியுமா?

## நாலு முதலாளிக்காரன் பாடு!

இரண்டு பெண்டாட்டிக்காரன் பாடு என்பார்கள். தமிழ்த் தேசியக் கூட்டணி பார்க்கும் போது இரண்டு பெண்டாட்டிககாரன் பாடு பரவாயில்லை போல தெரிகிற இவர்களுக்கு நாலு எசமானர்கள். உள்ளூரில் யூஎன்.பி.யும் விடுதலைப் புலிகளு வெளியூரில் இந்தியாவும் அமெரிக்காவும். எல்லாரும் ஒரே ராகத்தில் பாடினா இவர்களால் வாலை ஆட்டலாம். நாலு எசமானர்களும் வேறு வேறு பாட்டுக்கு பாடினால் என்ன செய்வார்கள். ஏற்கனவே அமெரிக்கக் குறுக்கீடு அமெரிக்கா இந்தியாவா என்ற பிரச்சனையை உண்டாக்கப் பார்க்கிறது.

ஒன்று செய்யலாம் நாலு கட்சிகளும் ஆளுக்கு ஒரு எசமானுக்கு ஒத்துப்பாடலா அதிலும் கூட யார் யாருக்காகப் பாடுவது என்பதில் ஆளுக்காள் சண்டை வராம இருக்கும் என்றால்!

## பொங்கு தமிழரும் போலித் தலைவர்களும்

பொங்கு தமிழ் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கும்பலில் கோவிந்தா போடுகி தமிழ்த் தலைவர்கள் ஆளுக்கு ஒரு சுருதியில் தங்கள் தாகமும் தமிழ்ழத் தாயக என்று பாடிவிட்டு வருகிறார்கள். அது சரி. ஆனால் அமெரிக்கா தமிழ்ழம். சுயநிர்ணய என்ற பேச்சுக்கே இடமில்லை என்று கட்டளை போட முன்வைத்திருக்கிறதே அதற்கெதிராக இவர்கள் பொங்கி எழுவார்களா அல்லது "கட்டுண்டோ பொறுத்திருப்போம் காலம் போகும்" என்ற அடுத்த தேர்தல் வரை காத்திருப்பார்களா

## ரி.என்.எல். இனவாத விஷமம்

ரி.என்.எல். தொலைக்காட்சியின் மாலை நிகழ்ச்சிகளில் ஒழுங்காக அமைதி பற்றி பிரசாரம் நடைபெறுகிறது இதிற் பெரும்பகுதி தமிழ் மக்களை இலக்காக கொண்டது. ஆயினும் அதன் சிங்கள ஆங்கில நிகழ்ச்சிகள் அனைத்திலும் சிங்கள பேரினவாதமே ஓங்கி நிற்கிறது.

மார்ச் மாத நடுவில் ரி.என்.எல். நடத்திய க்றொஸ்றோக் நிகழ்ச்சியில் அரசு புலிகள் உடன் படிக்கை பற்றிய கலந்துரையாடல் ஒன்று நடந்தது. அந்த நிகழ்ச்சியி பேச அழைக்கப்பட்ட ஒரு தமிழர் எதையுமே முழுமையாகப் பேச விடாமல் சிங்கள பேரினவாதிகள் குறுக்கிட்டபடியே இருந்தனர். பேரினவாதிகளுக்கு வால்பிடிக்கா போனால். எந்தத் தமிழருமே புலி ஆதரவாளர்கள் என்ற சந்தேகத்துடனே நோக்க படுவார்கள் என்பதையே ரி.என்.எல். நிறுவியது. தமிழ் மக்களுடைய நியாயமான கோரிக்கைகள் பற்றிய அக்கறையை ரி.என்.எல். நிறுவனமோ அதன் வார ஏடான சண்டே லீடரோ பேச்சுவார்த்தைகளுக்குக் குழிபறிக்கச் செய்கிற காரியங்க மூலம் மீண்டும் நிறுவியுள்ளனர்.

## மஹா ராஜவாஹினி

யூஎன்.பி. அரசாங்கம் பதிவியேற்ற நாள் முதல் பல அரசாங்கச் சிறப்பு நிகழ்ச்சிகளி மஹாராஜா நிறுவனத்தின் தொலைக்காட்சிப் பிரிவினருக்குச் சிறப்புச் சலுகை காட்டப்படுகிறது. பிரதமரின் யாழ்ப்பாண விஜயம் உட்படப், பலவேறு சந்தர்ப்பங்களில் அரசாங்கத்தின் பிரதான செய்தி ஊடகமாக சக்தி/எம்.ரி.வி./சிரச தொலைக்காட் அமைப்புக்களே செயற்பட்டன. ரூபவாஹினி ஏன் ஓரங்கட்டப்பட்டது?

மஹாராஜா நிறுவனத்தின் ஒளிபரப்பு நிலையம் தீப்பிடித்த போது ரூபவாஹினி ஐ.ரி.என். நிறுவனங்களின் பூரண ஆதரவும் வழங்கப்பட்டது. ரூபவாஹினியை ஒதுக் மஹாராஜா நிறுவனத்தை உயர்த்துவது நன்றிக் கடனா அல்லது தனியா மயமாக்கலின் இன்னொரு அம்சமா?

## நந்த வனத்திலோர் ஆண்டி

*வன்னி கொழும்பென்று நோர்வே - தூதன்*
*நாலாறு மாசமாய் இங்கங்கும் ஓடி*
*கண்டு வந்தானொரு தீர்வே - அதை*
*நாட்டாண்மை அமெரிக்கன்*
*குலைக்கிறான் தேடி!*

படிப்பகம்

www.padippakam.com



# கொடுத்தவனும் எடுக்கிறவனும் அவன்தான்

ழ் குடா நாட்டில் கண்ணி வெடிக
ளைக் கண்டு பிடித்து அகற்றுவதற்
கென அமெரிக்கர்கள் வந்துள்ளனர்.
ாப்ப நாய்கள். நவீன உபகரணங்கள்
தம் இந்தக் குழு பலாலியில் வந்து
ங்கியுள்ளது. இதற்கான அழைப்பை
ழ் விஜயத்தின் போதே பிரதமர்
லாலியில் வைத்து ராஜாங்க அமைச்சர்
ராக்கா மூலம் விடுத்தார். இந்த
ுணர் குழு ஏற்கனவே பொஸ்னியா,
சாவோ போன்ற நாடுகளில் பணி
ந்தவர் களாம். 'மேற்படி நாடுகளில்
டம்பெற்ற உள்நாட்டுப் போர்களில்
மெரிக்கா வகித்த பாத்திரம் உலகறிந்
தே. உண்மையில் இன்று மனிதாபி
மானப் பணி புரியவந்துள்ளள அமெரிக்கா தான் இக்கண்ணி வெடிகளை இலங்கைக்கு பல்லாயிரக் கணக்கில் விற்று காசாக்கியவர்கள் என்பதை எவரும் மறந்துவிட வில்லை. தனது தேவைக்கும் நோக்கத் திற்கும் கொடுத்தவனும் அவன்தான். இப்போது எடுப்பதாகக் கூறிக் கொள்ப வனும் அவன்வதான். இவ்வேளை மற்றொரு விடயமும் நினைவிற்கு வருகிறது. முன்பு கண்ணி வெடி கண்டுபிடித்து எடுக்க வந்த தூதுக் குழுவினர் யாழ்ப்பாணத்தில் எயிட்ஸ் கிருமிகள் பரப்பிச் சென்றனர் என்றும் கூறப்பட்டது. ஆனால் அமெரிக்கர்கள் அதைவிடக் கொடியவற்றைத் தமது மேலாதிக்கத் திற்காகப் பரப்பவார்கள். எச்சரிக்கை.

# கொழும்பு தமிழ்ச் சங்க வைர விழாவில்..!

நமது பரமார்த்த குருவானவருக்கு ஒரு வயித்தெரிச்சல் கன காலமாகவே இருக்குது பாருங்கோ. அங்க அங்க நவீன இலக்கியகாரர நக்கலடிச்சு வந்தார். அவரின்ட பாணியிலேயே ஒரு எழுத்தாளர் அவர ஒரு நூல் வெளியீட்டில் மடக்கிப் போட்டார். குரு வானவர் அண்டைக்குச் சொன்னார் 'ஆரெண்டாலும் இலக்கியத்தோட தொடர்பு உள்ளவன் மனித சமூகத்தில மேம்பட்டவன்,' என்று ஒரு சறண்டர் போட்டார்.

இப்ப தன்னால ஏலாத வேலைக் கெண்டு பரமார்த்த சீடர்களை ஏவி விட்டிருக்கிறார். கிட்டடியில எங்கட கொழும்புத் தமிழ்ச் சங்கம் வைரவிழாக் கொண்டாடினது பாருங்கோ. அதில 'சுருத்துக்களம்' எண்டொரு நிகழ்ச்சிய ஒழுங்கு செய்தினம். 'மரபு இலக்கியத்தில் காப்பியங்கள் நவீன இலக்கியத்தில் நாவல்கள்' எண்டு மட்டும் தலைப்பு வைச்சு ஒலி பரப்பு மேதாவி அம்மாவை நடுவர் எண்டு வைச்சினம் பாருங்கோ. இதில பங்கு பற்றுவோர், எண்டு நாலு பேரின்ட பெயர் போட்டவை. இதில இரண்டு பேர் ப.சீடர்கள் மற்ற இரண்டு பேர் இப்ப பத்திரிகை ஆசிரியர்மார்.

காப்பியங்கள் பற்றியும், நாவல்கள் பற்றியும் தோற்றம், வளர்ச்சி, வடிவம், பரம்பல், தேவை, பாதிப்பு சமூக மாற்றம் என்று அதப் பற்றி பேசத்தானாம் நிகழ்ச்சி ஒழுங்கு படுத்தின ஆக்கள் பேசக் கூப்பிட்டவையாம்.

நிகழ்ச்சி தொடங்க ஆயத்த மாகேக்க நடுவர் அம்மணியோடு பேசி ப. சீடர்கள் தலைப்பில் ஒரு மாற்றம் செய்திச்சினமாம் 'எது மேம்பட்டு நிற்கிறது?' என்று ஒரு பின்னீடு சேர்த்து விட்டார்கள். அப்பதான் சபை கலகலப்பில் இருக்கும் எண்டு.

மேடை ஏறினதும் குரவானவரின் வயித் தெரிச்சல் எல்லாம் சீடர்மாற்ற வாயால வந்தது. பிறகென்ன 'காப்பியம் படைச்ச புலவரெல்லாம் கடவுளக் கண்டார்கள், இப்ப புத்தகம் எழுதுற ஆக்கள் எல்லாம் வியாபாரிகள், மரபு இலக்கியத்தில் எல்லாம் சொல்லிட முடிஞ்சுது. இனிச் சொல்ல ஒண்டுமில்ல.... என்டு ஒரே மொட்டை வாழ் வெட்டுத்தான்.

நவீன இலக்கியம் பற்றிய பேச வந்தவை ஏதும் ஆயத்தப்படுத்தி வந்திருப்பினம் தங்கட கருத்தச் சொல்ல. இஞ்ச பட்டிமண்டபம், விவாதம் எண்ட உடன் அவை தடுமாறி விட்டினம். அவை சொன்னதையும் ப. சீடர்கள் திருப்பித் திருப்பிப் போட்டு மட்டம் தட்டி கேவலப் படுத்தப் மாத்தினமே ஒழிய இலக்கியம் பற்றிப் பேச விடயில்லை.

மரபு இலக்கியத்தைக் கட்டிப்பிடிச்சுக் கொண்டு அதுண்ட ஆலாவண்ணத்தைப் பேசுற சீடர்கள் ஆரெண்டாலும் காவியம்பாடின சரித்திரம் இல்ல. அப்படி எழுதினாலும் புதுக்கவிதை தான். பிறகேன் ஒரு இலக்கிய வடிவத்தை வைச்சுக் கொண்டு மற்ற இலக்கிய வடிவத்தை மட்டம் தட்ட முனைய வேண்டும்? பரமார்த்த குருவானவரின் போதாமையும், பொறாமையும் சீடர்கள் வழியால் வளர் கிறது. வாழ்க பாராம்பரியக் குருகுலக் கல்வி முறை.

~ பட்டணத்தடிகள் ~

# கன்னை மாறி வரும் கனவான்கள்!

ிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் புலிகள்
ாழ்ப்பாணம் வந்துவிட்டார்கள். என்ன
டக்குமோ ஏது செய்வார்களோ எனச்
லருக்கு அச்சம். வேறு சிலருக்கு தமது
ுள்ளடக்கி வைத்துக் கொண்டவற்றை
வளிக் கொணர்ந்து வெருட்டவும்
ரட்டவும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாக
ள்ளுர மகிழ்ச்சி. ஆனால் புலிகள்
வ்வாறு நடந்து கொள்ளப் போகிறார்
ள் என்பதைப் பொறுத்திருந்து தான்
ார்க்க வேண்டும். அதேவேளை 1996
ு பின் கடந்த தேர்தல்வரை ஸ்ரான்லி
வீதி, ஆஸ்பத்திரி வீதிக் கட்டிடங்களில் புகுந்து தத்தமது ஈடேற்றங்களுக்கும், இருப்பிற்கும், தேட்டங்களுக்கும் அலுவல் பார்த்து வந்தவர்கள் தறுபுறு என முழுசத் தொடங்கி விட்டனர். இந்த இடங்களுக்கு மக்கள் ஒருபகுதியினர் சென்றது தங்களது இல்லாமை இய லாமை காரணமாகவே ஆகும். ஆனால் சில கனவான்கள், கல்வி மான்கள், புத்தி ஜீவிகள், கொள்ளை லாபம் வியாபாரப் புள்ளிகள் போன்றோர் இப்போது இராகத்தையும் தாளத்தையும் மாற்றிப் பாடவும் போடவும் ஆரம்பித்து விட்டனர். இவர்களில் பலர் வரிந்து கட்டிக் கொண்டு கன்னை மாறத் தொடங்கி யுள்ளனர். சிகப்பு மஞ்சள் கொடிக ளுடன் ''விடாதை பிடி'' என்றும் ''எங்கடை பெடியளின்றை வீரம் விவேகம் என்ன?'' என்று புளுகவும் செய்கின்றனர். காலத்திற்குக் காலம் கன்னை மாறுவதில் இவர்கள் புத்திக் கூர்மையுடைய புத்திஜீவிகளேயாவர்.

# வேலையற்ற பட்டதாரிகள் போராட்டம்

இம் மாதம் முற்பகுதியில் யாழ் செயலகம் முன்பாக நூற்றுக் கணக்கான வேலையற்ற பட்டதாரிகள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். 1990ம் ஆண்டிலிருந்து பல்கலைக்கழகங்களி லிருந்து பட்டம் பெற்று வெளியே வந்த குடாநாட்டு பட்டதாரிகளே இவர் களாவர். இவர்களின் எண்ணிக்கை இரண்டாயிரம் பேர்வரை உள்ளனர். இவ்வாறு வடக்கு கிழக்கு மாவட்டங்கள் அனைத்திலும் வேலையற்ற பட்ட தாரிகள் இருந்து வருகிறார்கள். இவர் களது கல்விக்கும் பெற்ற பட்டத்திற்கும் உரிய வேலை வழங்க வேண்டியது அரசின் கடமையாகும். ஆனால் அரசாங்கம் வேலையற்ற பட்டதாரிகள் விடயத்தில் முழு நாட்டிலும் அக்கறைப் படாது தட்டிக் கழிப்பதையே செய்து வருகின்றது.

வடக்கு கிழக்கில் பாடசாலைகளில் பாரி யளவில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவு கிறது. ஆனால் அரசாங்கம் நிய மனங் களை வழங்க மறுத்து வருகிறது. சம்பள த்திற்கு பணம் இல்லை எனக் கை விரிக்கிறது. அதேவேளை கல்வித் துறை யை படிப்படியாகத் தனியார் மயப் படுத்தி விட்டால் வேலை வழங்க வேண்டிய பொறுப்பில் இருந்தும் விடுபட்டுக் கொள்ள முடியும் எனவும் நம்புகிறது.

அண்மையில் கொழும்பு கோட்டைப் புகையிரத நிலையம் முன்பாக இரண்டு வாரங்கள் வரை வேலையற்ற பட்டதாரிகள் தொடர் உண்ணாவிரதம் இருந்தனர். இறுதியில் பொறுக்க முடியாது பிரதமரது அலரிமாளிகைக்குச் சென்று ஆர்ப்பாட்டம் சத்தியக்கிரகம் செய்து மனுக் கொடுத்தனர். அதனைப் பற்றி இப்போதைக்குப் பேச முடியாது என்றும் பிரதமர் உறுதிபடக் கூறி இருந்தார்.

25,000 ஆயிரம் வேலையற்ற பட்டதாரி கள் பிரச்சினை முழு நாட்டினதும் வேலை இன்மை என்ற பாரிய பிரச்சி னையின் ஒரு பகுதி யாகும். இது நமது சமூக அமைப்பினதும் சுரண்டலும் ஏற்றத் தாழ்வும் மிக்க பொருளா தாரத் தினதும் விளைவான தாகும். தொடர்ந்தும் இப்பிரச்சினை பூதாகரமாக வளரவே செய்யும். எனவே வேலையற்ற பட்டதாரிகள் தாம் ஏன் வேலையற்று இருக்கின்றோம் என்பதை பரந்த அடிப்படையில் சிந்திப்பது அவசியம். அவ்வாறு சிந்திக்கும் போது பல்வேறு பிரச்சினைகளுக்குமான போராட்டங் களுடன் இணைந்து நிற்பது அவர்களது கடமையாகிறது.

# கொழும்பும் குங்குமப் பொட்டும்

ப்பொழுது கொழும்பிலும் புறநகர்ப்
குதிகளிலும் தமிழ்ப் பெண்கள்
ராளமாகக் குங்குமப் பொட்டுகளும்
லி சேலை தலையில் பூமாலைகள்
ன அமர்க்களம் காட்டுகின்றனர்.
ஆனால் இவற்றை அணிவதற்கு பல
மிழ்ப் பெண்கள் அச்சப்பட்டு தவிர்த்து
ந்த நாட்கள் அண்மையில் தான்
ில்லாமல் போயின. ஆனாலும் அந்த
வல நாட்கள் மீண்டும் வரமாட்டாது
ன்பதற்கு உறுதியான உத்திரவாதம்
ில்லை என்பது மட்டும் உண்மையான
ாகும்.

ிவ்வேளை மூன்று வருடங்களுக்கு
ந்திய சம்பவம் நினைவுக்கு வருகிறது.
வள்ளவத்தையிலிருந்து 102 இலக்க
ஸில் நானும் நண்பர் ஒருவரும் வந்து
காண்டிருந்தோம். பிரயாணிகளால் பஸ்
ிரம்பியிருந்தது. கொம்பனித் தெரு
ாதனைச் சாவடியில் எல்லோரும்
ிறக்கப்பட்டு படையினரால் சோதனை
செய்யப்படுகின்றனர். இளம் வயதுடைய
மிழர் கடுமையான கேள்விகளுக்கு
உட்படுகின்றனர். சேலை உடுத்தி பொட்டுகள் வைத்திருந்த மூன்று தமிழ்ப் பெண்கள் கடுமையாக விசாரிக்கப்படு கின்றனர். பஸ்சும் காத்து நிற்கின்றது. என்னுடன் வந்த நண்பர் புறுபுறுக்கிறார். மெதுவாக ஏசுகிறார். இந்தப் பொம்பிளைகளுக்கு இவை தேவையா? பொட்டும்பிறை, தாலிக்கொடி, இவற்றை போடாமல் வந்தால் குறைந்தா போய்விடும். வீணாக நேரமும் போகுது. எனக்கு வெளிநாட்டு கோலும் வரப் போகுது. இப்படி அப் பெண்கள் மீதான அர்ச்சனை தொடர்ந்து கொண்டே போனது. அவரது பேச்சில் சுயநலம் அப்பி நின்றதைக் கண்டு எனக்குள் சிரிப்பு. சிறிது நேரத்தில் அப் பெண்கள் உசாராக வந்து பஸ்ஸில் ஏறிக் கொண்டனர்.

நண்பர் தனது அபிப்பிராயம் பற்றி என்னிடம் கருத்துக் கேட்டார். அவ்வாறு அப் பெண்கள் வந்ததில் எவ்வித தவறும் இல்லை என்றேன். நீர் நிலைமை தெரியாமல் பேசுகிறீர் என்றார். படையினருக்குப் பயந்து பொட்டு பூ சேலையை நமது பெண்கள் மறைக்கவோ மாற்றவோ வேண்டுமா? பேரினவாத ஒடுக்குமுறையின் ஒரு வடிவம் தான் பொட்டு சேலையை வைத்து மிரட்டுவது. இதற்குப் பணிந்து போவது ஒடுக்கு முறையை ஏற்றுக் கொள்வதாகும் என்றேன்.

மேலும் நான் கூறினேன், சமாதான காலத்தில் எல்லாம் எல்லாரும் செய்து கொள்ளலாம். ஆனால் ஒரு ஒடுக்கு முறைச் சூழலில் எந்த அடையாளத்திற் காக அடக்கப்படுகின்றோமோ அந்த அடையாளத்தைத் துணிந்து வெளிக் காட்டுவதிலும் ஒரு வகைப் போர்க் குணம் எதிர்ப்புக் குணம் உள்ளடங்கி யிருக்கிறது என்பது தான் எனது கருத்து என்றேன். ஓம் ஓம் நீ கொம்யூனிஸ்ட் இப்படித்தான் கூறுவாய் எனக் கூறிக் கொண்டு அவசர அவசரமாய் எதிர்பார்த்த வெளிநாட்டுக் கோலுக்கு சென்று கொண்டிருந்தார் நண்பர்.

# தேர்தல் குறும்பாக்கள்

1. பேதமெலாம் வென்ற தமிழ்க் கூட்டு!
வீதிவழி ஊர்வலமாய், வோட்டு
வென்றுவர, ஒவ்வொருவர்
சென்றனரே தத்தமது
சாதியினர் ஆதரவு கேட்டு!!

2. செந்நிறத்துச் சட்டை தொப்பிக் காரர்,
முன்னமவர் செம்புரட்சி வீரர்,
பாராளுமன்று புகப்
போராட்டம் கைகழுவி
இன்று வெறும் இனவாதச் சோரர்.

3. காற்றாடும் திசையெதெனக் கண்டால்
மாற்றிடுவார் கூட்டணியைத் தொண்டர்.
மந்திரியாய் ஆவதற்குத்
தந்திரங்கள் செய்கிறதில்
தாத்தா போல் பேரன் போல் உண்டா?

4. சம்மந்தர் சந்திரிகா பக்தர்
சங்கரியார் ரணில் மீது பித்தர்
வாக்குறுதி தந்திடுவர்
வாக்குகளை வாங்கிடுவர்
எம்மவரை ஏய்ப்பதில் சமர்த்தர்

5. எக்காலும் பதவியிலே பாசம்,
விக்கிரம வாகு செய்கை மோசம்.
முன்னம் ஜே.வி.பியிடமும்
பின்னம் ரீ.ஏயிடமும்
சிக்கியதால் கழன்றதுவே வேசம்.

வில்லூண்டிக் குறும்பாவாணர்

# சந்திரசேகரத்தின் புதிய வேடம்

ிதுவரை மலையக மக்களை
மாற்றுவதில் வேடமிட்டு வந்தார்களில்
ிறப்பானவர் சந்திரசேகரனை யாரும்
ிஞ்சிவிட முடியாது. 15 லட்சம் மலையக
க்களின் பிரச்சினை பற்றி புலிகள்
ியக்கத் தலைவர் பிரபாகரனுடன்
பசப் போவதாக அமைச்சர் சந்திர
சேகரன் கூறியுள்ளார். அடி சக்கை
ன்றானாம். மலையக மக்கள் எதிர்
நோக்கும் பிரச்சினைகள் யாவும் பேரின
வாத முதலாளித்துவ அரசாங்கங்க ளுடன் உள்ளவையாகும். அதே அரசாங்களில் மாறி மாறி அமைச்சர் பதவிகள் பெற்று சுகம் காணும் சந்திரசேகரம் பிரச்சினைகள் எங்கோ இருக்க பிரபாகரனோடு பேசப் போகிறேன் என்பது வேடிக்கையானது அல்ல. இன்றைய புலிகள் - பிரபாகரன் அலையை வைத்து தன்னைக் காத்து மலையக மக்களை ஏமாற்றுவதற்கே யாகும். தோட்டக் கம்பனிகளுக்கு பால் வார்த்து சம்பள உயர்வை மறுப்பதற்கு பக்கபலமாக இருக்கும் அரசாங்கத்திடம் பேச முடியாத சந்திரசேகரம் பிரபாகரனுடன் எதைப்பற்றிப் பேசப் போகிறார். சந்திரசேகரன் - ஆறுமுகம் ஆகி யோரது சுயரூபம் அடுத்த மாதங்களில் சம்பள உயர் பற்றி கூட்டு ஒப்பந்தத்தின் போது அம்பலமாகி விடும்.

# வயது வந்தவர்களுக்கு மட்டும்

மது நாட்டின் சமூக கலாச்சாரச்
ழிவுகள் எவ்வளவு உச்சத்திற்கு
சென்றுள்ளமைக்கு நாளாந்த செய்தி
டகங்களில் வரும் அதிர்ச்சி தரும்
ம்பவங்கள் சாட்சியமாகும். இவற்றுக்கு
டிப்படைக் காரணமாக அமைந்துள்ள
வ சினிமா, சஞ்சிகைகள், தொலைக்
ட்சி, செய்தி பத்திரிகைகள், நூல்கள்
ன்பனவற்றில் தொடர்ச்சியாகவும்
க்கியத்துவத்துடன் வரும் விடயங்க
ாயாகும். வன்முறை, ஆட்கடத்தில்,
காலைகள், கொள்ளை, பாலியல்
க்கிரங்கள், உட்பட சீரழிந்த வாழ்க்கை
முறைகள் அனைத்தும் நம்மீது திணித்து
ற்றிக்கொள்ளப்படுகின்றன.
இவையனைத்தும் வணிக அடிப்படை யில் பெருலாப நோக்கில் மக்களிடம் பணம் கறக்கும் அதே வேளை அவர்களது மூளைகள் இக்குப்பைக ளாலும் வக்கிரங்களாக நிரப்பப்படு கின்றன. பின்பு அவை அன்றாட வாழ்வில் பிரயோகித்தும் பார்க்கப் படுகிறது. இப்போது பகிரங்கமாகவே பெரிய திரைகளில் வயது வந்தவர்களுக்கு மட்டும் என்ற தலைப்பில் திறந்த பாலியல் சினிமா படங்கள் தாராளமாகக் காட்டப் படுகின்றன. அவ்வாறே சஞ்சிகைகளும் கிளர்ச்சியூட்டும் படங்களுடனும் விளக்க விபரங்களுடனும் வெளியிடப்படுகின்றன. இவற்றுக்கு ஒலி ஒளி பரப்பு ஊடகங்களும் செய்திப் பத்திரிகைகளும் விளம்பரம் செய்கின்றன. இவற்றுக்கும் திறந்த பொருளாதார - கலாச்சார ஊடுருவல், பணம் பண்ணுதல் - இளைய தலைமுறையைச் சீரழித்தல் ஆகியவற்றுக்கும் உள்ள தொடர்பையும் ஆழத்தையும் எத்தனை பேர் இணைத்து சிந்திப்பார்கள். எல்லாம் உலக மயமாக்கலின் விளைவு தான் என்பதை அறிஞர் பெருமக்கள் எழுத்தாளர்கள் என்போர் தீவிரமாக சமூகத்திற்கு விளக்குவார்களா?

படிப்பகம்

www.padippakam.com



# மலையகத் தேசிய இனத்தின் வளர்ச்சிக்கு படித்த சமூகத்தினரின் பங்களிப்பு என்ன?

மலையகத் தமிழ் மக்கள் ஒரு தனியான தேசிய இனம். அதற்குரிய தேசிய அபிலாஷைகள் உறுதி செய்யப்பட வேண்டும் என்பதை உச்சரிக்க பல தொழிற்சங்கத் தலைவர்களும் தயங்குகின்றனர். ஒரு சில தலைவர்கள் தேசிய இனம் என்ற பதத்தின் ஆழ அகலங்கள் புரியாது மேலோட்டமாக உச்சரிக்கின்றனர். இவ்வாறான ஒரு சூழ்நிலையில் மலையகத் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை வென்றெடுப்பதற்கு அடிப்படையான விடயங்களில் கவனம் செலுத்தி முன்னேறுவதற்கான பலமான அரசியல் போக்கை மலையகத்தில் அவதானிக்க முடியவில்லை எனலாம். சமாதான தீர்வுகள், பேச்சு வார்த்தைகள் என்பனபற்றியெல்லாம் பேசப்படுகின்ற இன்றைய சூழ்நிலையில் கூட மலையகத் தமிழ் மக்களின் இனஉரிமை கள், மொழியுரிமைகள், அதிகாரப்பங் கீட்டில் அவர்களுக்கு கிடைக்க வேண்டியவை போன்ற விடயங்கள் பற்றி கூட கலந்துரையாடல்கள் நடப்பதாக தெரியவில்லை.

மலையகத் தமிழ் மக்களுடைய தேசிய அபிலாஷைகளுக்கான வெகுஜன இயக்கங்கள் குறிப்பிடக் கூடியதாக கட்டிவளர்க்கப்படவில்லை. ம.ம.மு.யின் தலைவர் சந்தரசேகரன் மலையகத் தமிழ் மக்கள் தனியான தேசிய இனமொன்று தற்போது கூறுவதில்லை. அவர்களை இந்தியத் தமிழர் என்றழைப்பதா மலையகத் தமிழ மக்கள் என்று அழைப்பதா என்ற விவாதம் தற்போது தேவையற்றதென கூறியுள்ளார். மலையகத் தமிழ மக்களுக்கு தனிமாகாண சபை தேவையென்று முன்பு கூறிய அவர் தற்போது மௌனம் சாதிக்கிறார். மலையகத் தமிழ் மக்களை வடக்கு கிழக்கிற்கு வெளியில் வாழும் தமிழ் பேசுகின்ற இந்தியவம்சாவளி மக்கள் என்றே அவர் கூறுகின்றார்.

வடக்கு கிழக்கு அமைப்புகள் மலையகத் தமிழ் மக்களை இலங்கைத் தமிழ் தேசிய இனத்தின் ஒரு பகுதியாகவே பார்க்கின்றனர். வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினை களையும் மலையகத் தமிழ் மக்களின் பிரச்சினைகளையும் ஒன்றாகவே பார்கின்றனர்.

இன்னும் தன்னை ஒரு இடதுசாரி என்றே காட்டிக்கொள்ளும் செங்கொடிச் சங்கத்தின் ஓ.ஏ. இராமையா மலையகத் தமிழ் மக்கள் என்று அழைக்கப்படுவதும், அவர்களை ஒரு தனியான தேசிய இனம் என்று கூறுவதும் அம்மக்களை கொச்சைப் படுத்துவதாகும் என்ற மீண்டும் மீண்டும் உரத்து கூறிவருகிறார்.

மலையகத் தமிழ் மக்களின் தேசிய தன்னடையாளங்களை உறுதிப்படுத்தி வளர்த் தெடுப்பதிலும் தேசிய அபிலாஷைகளை வெளிப்படுத்து வதிலும் கவனம் செலுத்த வேண்டிய மலையகத் தமிழ் புத்திஜீவிகள் பெரிதளவில் அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை. ஆசிரியர் களும், புலமைசார்ந்தோரும், அரச உயர் பதவிகளில் இருப்போரும் கல்வியாளர் களும் 1960கள் 1970 கள் 1980களில் காட்டிய அக்கறையும், வழங்கிய உழைப்பும் இன்றும் மதித்து நினைவு கூரப்பட வேண்டும். இன்று தன்னடையாளங்களை நிலைநிறுத்துவதாகக் கூறிக்கொண்டு தம்மைதாமே அடையாளப்படுத்திக் கொள்ளும் மலையகப் படித்தவர்கள் சுயஈடேற்றத்திற்கான வரையறைக்குள் மட்டுமே செயற்படுகின்றனர். சுயநலத்திற்காக மலையகம் என்பதை பாவிக்கவும், கைவிடவும் தங்களை தாங்களே தயார்ப்படுத்திக் கொள்கின்றனர். மலையகத் தமிழ்த் தேசிய இனம் என்ற கருத்தியலை விருத்தி செய்வதில் இதய சுத்தியுடன் ஈடுபாடு கொண்டவர்களாகஇல்லை. மலையகத் தமிழ் மக்களின் சுயமரியாதை சுயகௌரவம் என்பவற்றை பரந்தளவில் நிலைநிறுத்த வேண்டு மென்பதை சுயநல நோக்கத்துடன் தவிர்த்து வருகின்றனர்.

இன, மத, சாதி அடையாளங்களுக்கு அப்பால் மனிதர்களாக வாழ்வது உண்னதமானதுதான். சுயநலத்திற்காக கௌரவ குறைவாக எண்ணி

## சுயநலத்தை முதன்மைப் படுத்தாது சமூக மாற்றத்திற்கு சிந்திப்பது அவசியம்

மலையகத் தேசிய இன அடையாளத்தை கைவிட்டு வேறொரு அடையாளத்தை திணிக்க எடுக்கின்ற மலையகப் படித்தவர்கள் இருக்கின்றனர். குறிப்பாக இந்தியர் என்ற அடையாளத்தை எடுப்பவர்களும் இருக்கின்றனர்.

இவ்வாறானவர்கள் ஒரு புறமிருக்க மலையகத்திலேயே வாழ்கின்ற படித்தவர்களில் பலர் 'வேடிக்கை மனிதர்களாக' வாழ்கின்றனர். தங்களது பதவிகள் பட்டங்கள் சேர்க்கைகள் சொத்துக்கள் என்பனவற்றின் மூலம் திருப்தியடைகின்றனர். மலையகத் தமிழ் மக்களை மேய்ப்பதையே அரசியலாகக் கொண்ட தொழிற்சங்கங்கவாதி களிடம் சுயநலத்திற்காகவும் இருப்பிற்காகவும் சோரம் போகிறவர்களாக இருக்கின்றனர்.

முதலாளித்துவ பேரினவாத அரசாங்கங்களுடன் இணங்கிப் போகின்ற தொழிற்சங்கவாதிகளை விமர்சிக்கும் அரச சார்பற்ற நிறுவனங்களில் தொழில்புரியும் மலையகப் படித்தவர்கள் சமூக அசைவியக்கம் பற்றி பெரிதும் கவலை கொள்ளாதவர்கள். அதனால் அவர்களும் மலையக தேசிய இன அடைளாளம் பற்றி உறுதியான நடவடிக்கைகளை எடுப்பதாக இல்லை.

மலையக இலக்கியம் பற்றி பேசுபவர்களும் எழுதுபவர்களும் கூட, ஏனையவர்களைப் போன்று மலையகத்தவர்கள் கவிதை, கதை, கட்டுரை எழுதினார்கள் நாடகங்கள் நடத்தினார்கள் என்றும் மலையகத்தவர்களுக்கென தனியான கூத்துக்கள் உண்டு என்றும் கூறி பெருமைப்படுவதுடன் நின்று வருகின்றனர். இன்றும் பல மலையகத்தவர்களால் எழுத முடியுமென்றும் காட்டுகின்ற போதும் மலையக தேசிய இன அடையாளத்துடன் தொடர்புபட்டதான பண்பாட்டு வளர்ச்சி பற்றிய ஆழமான முன்னெடுப்புகளை காண முடியவில்லை.

புதிய ஜனநாயக கட்சியினரும் சில புத்திஜீவிகளும் மலையகத் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப்பற்றி குரல் கொடுத்து வருகின்றனர். அவ்வுரிமைக் கோரிக்கையுடன் தொடர்புடைய புதிய விடயங்கள் பற்றி அக்கறை செலுத்துகின்றனர்.

மலையக பட்டதாரிகள் ஒன்றியம் மலையக தேசிய இனக்கோரிக்கை தொடர்பாக சில முன்னெடுப்புகளை செயதுவருகிறது. அதைவிட தனிப்பட்ட புத்திஜீவிகளும், ஆக்கபூர்வமான பங்களிப்புகளை செய்துவருகின்றனர். இவை தேவைக்கு ஏற்றதாக இல்லை.

மலையகத் தமிழ் மக்களின் பெரு பான்மையானோர் தோட்டத் தொழி ளர்கள். அவர்கள் வர்க்கரீதியா சுரண்டப்படுகின்றனர். முதலாளித்து அடக்குமுறை வடிவங்களில் ஒன்றா இனரீதியான அடக்கு முறைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியவர்களா இருக்கின்றனர். அவ்வின அடக் முறைகளுக்கு எதிராக தேசி இனத்துவம் என்ற தளத்தில் இருந் மலையகத் தமிழ் மக்கள் அணிதிர வேண்டியவர்களாக இருக்கின்றன இந்த அணிதிரட்டுதலுக்கு ஆதரவா செயற்படும் படித்தவர்கள், புத்திஜீவிகளே ஜீவமுள்ளவர்களாக கொள்ள படக்கூடியவர்களாவர்.

மலையகத் தமிழ் தேசிய இ உரிமைகளை வென்றெடுப்பதற்கா பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்ப வேண்டும். பலமான கருத்தியில், தீர் கள் அவற்றை வென்றெடுப்பதற் கா ஸ்தாபனம், எதிர்க்கப்படவேண்டி சக்திகள், ஐக்கியப்படவேண்டிய சக்திக என்பனபற்றி யெல்லாம் கவன செலுத்தப்பட வேண்டும். இது பற் அக்கறை கொள்வோர் பலரு அவரவரின் ஆற்றங்களுக்கு ஏற் பங்களிப்பை செய்ய முடியும். அரசிய பொருளாதார, சமூக பண்பாட் ரீதியாக பல வழிகளில் செயற்ப முடியும். பல்வேறுப்பட்ட கருத்து களையும், வித்தியாசங் களையு கொண்டவர்களும் பொது வா உடன்பாடுகளை காண்பதன் மூல ஐக்கியப்பட்டு செயற்பட முடியும். ஒ சில அமைப்புகளுக்கும், ஒரு சிலருக்கு மட்டும் உரிய விடயமாக தேசிய இன பிரச்சினையிலிருந்து ஒதுங்க கொள்ளாமல் ஆகக்கூடிய வர்க பங்களிப்புச் செய்வதே சிறந்ததாகும் அதன் மூலமே மலையகத் தமிழ்த் தேசி இனம் என்பது தன்னை திடமுட வெளிப்படுத்தி அதன் அடிப்படை உரிமைகளை வென் றெடுத்து நிலை நிறுத்து... செல்லமுடியும்.

**பிரகாஷ்**

# மேல் கொத்மலை நீர்த் தேக்கத் திட்டம் மீண்டும் நடைமுறையாகும் அபாயம்!

தலவாக்கொல்லை நகரமும் அதற்கு அன்மையிலுள்ள சில தோட்டப்பகுதிகளும் நீரில் மூழ்கடிக்கப்படும் அபாயம் மீண்டும் தலைதூக்கியுள்ளது. மேல் கொத்மலை நீர்த் தேக்கத் திட்டத்தை ஆரம்பிக்க விருப்பதாக நீர்மின் சக்தி அமைச்சர் கரு ஜயசூரிய அறிவித்துள்ளதை அடுத்து மேற்படி அச்சம் தலை தூக்கியுள்ளது. தற்போது நிலவும் மின்சார நெருக்கடியைப் போக்குவதற்காக மேற்படி திட்டத்தை செய்து முடிக்கப் போவதாக அவர் அறிவித்துள்ளார்.

பாரிய மகாவலி திட்டத்தில் மேற்படி மேல் கொத்மலைத் திட்டம் அடங்கியிருக்கிறது. 1977 இல் பதவிக்கு வந்த ஐ.தே.கட்சி அரசாங்கம் அதில் சிலவற்றை தேர்ந்தெடுத்தது. எனினும் அக்காலத்தில் மகாவலிக்கு பொறுப்பாகவிருந்த அமைச்சர் காமினி திஸாநாயக்க துரிதமகாவலி திட்டத்தில் உள்ளடக்கப்படாத சில திட்டங்களையும் முன்னெடுத்தார். அந்த வகையிலேயே மேல் கொத்மலைத் திட்டத்தையும் முன்னெடுக்க அவர் உறுதி பூண்டிருந்தார்.

மலையகப் பகுதிகளில் அபிவிருத்தி வேலைகளை முன்னெடுக்கும் போது மலையகத்தமிழ் மக்களின் குடிசனச் செறிவை குலைக்கும் வகையில் நடவடிக்கைகளை எடுத்தவர் காமினி திஸாநாயக்க. தோட்டப் பொருளாதாரத்தை இல்லாமலாக்க வேண்டும் என்பதிலும் தோட்டக் காணிகளில் சிங்களக் குடியேற்றங்களை செய்வதிலும் அவர் அதிக அக்கறைக் கொண்டு செயற்பட்டார். மலையகத் தமிழ் மக்களின் வாக்குப்பலம் அப்பகுதியில் வாழும் சிங்கள மக்களை விட உயராது இருக்க வேண்டும் என்பதற்காக தேர்தல் தொகுதி எல்லைகளை கூட மாற்றியமைக்க வேண்டும் என்று வெளிப்படையாகவே அவர் கூறிவந்தார் என்பது நினைவு படுத்தப்பட வேண்டியதாகும்.

அந்த அடிப்படையிலேயே மேல் கொத்மலை திட்டத்தையும் ஏற்படுத்தி அதன் விரிவாக்க திட்டமாக தலவாக்கொல்லை தொடக்கம் டயகம வரை பிரதான பாதையின் இருபக்கமும் தோட்டக்காணிகளை சுவீகரித்து சிங்களக் குடியேற்றத்தை ஏற்படுத்த திட்டம் கொண்டிருந்தார். அதற்கான முயற்சிகளை 1979 முதல் அவர் மேற்கொண்டு வந்தார்.

தலவாக்கொல்லை நகரை ஊடறுத்துப் பாயும் கொத்மலை ஓயாவின் கிளை நதியான நானுஓயா நதிக்கரையில் ஹொலிரூட் பணியஸ்கல்பா தோட்டத் தொழிலாளர்கள் விவசாயம் செய்யும் காணிகள் மேல் கொத்மலை ஓயா திட்டத்தின் ஒன்றான தலவாக் கொல்லை நீர்த்தேக்கத் திட்டத்தினால் நீரில் மூழ்கும் என்று 1979 இல் அறிவிக்கப்பட்டது. விவசாயம் செய்பவர்கள் அந்நிலங்களை கைவிட வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.

அவ்வேளை பணியஸ்கல்பா தோட்ட மக்கள் நடத்திய போராட்டத்தினால் தொடர்ந்து அக்காணிகளில் விவசாயம் செய்யும் உரிமையை நிலைநாட்டிக் கொண்டனர். அப்போராட்டத்திற்கு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) (தற்போது புதிய ஜனநாயக கட்சி) தலைமை கொடுத்தது. அத்தோட்டத்தை சேர்ந்த தோழர் எஸ்.சிங்கராயர் அப்போராட்டத்திற்கு தலைமை தாங்கி அதனை வழி நடத்தினார்.

விவசாயம் செய்யும் காணிகளை கைவிட மாட்டோம் என்று தொழிலாளர்கள் எதிர்ப்பியக்கங்களை நடத்தினர். கையெழுத்தியக்கம் கூட்டங்கள் போஸ்டர் இயக்கங்கள் நடத்தப்பட்டன. மலையக பாராளுமன்ற உறுப்பினர்கள் தொழிற்சங்கத் தலைவர்கள் கண்டுக் கொள்ளாது

## மலையக தமிழ் அமைச்சர்கள் மௌனம் தொழிற்சங்கத் தலைவர்கள் நித்திரை

இருந்தபோதும், தொழிலாளர்களின் போராட்டத்தினால் சம்பந்தப்பட்ட அமைச்சர்களிடம் கலந்துரையாடப்பட்ட பின்னர் அத்திட்டம் கைவிடப்படும் என்று கூறப்பட்டது.

ஆனால் மீண்டும் 1985 ஆண்டு மேல் கொத்மலை திட்டத்தை முன்னெடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. யப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு முகாமை நிறுவனம் நிதியுதவியை செய்வதென ஒத்துக்கொண்டிருந்தது. இத்திட்டத்தை 1988 ஆண்டிற்கும் முன்னர் முடிப்பதென தீர்மானிக்கப்பட்டது. மக்கள் எதிர்ப்பு காரணமாக காலஞ்சென்ற அமைச்சர் சௌமிய மூர்த்தி தொண்டமானும் எதிர்த்தார். இதனை அடுத்து நீர்த்தேக்க அணையின் உயரம் குறைக்கப்பட்டு தலவாக்கொல்லை நீரில் மூழ்காமலிருக்கும் வகையில் அத்திட்டத்தை முன்னெடுப்பதாக அமைச்சர் காமினி திஸாநாயக்க தெரிவித்தார். 1989இல் ஜனாதிபதியாக பிரேமதாஸ பதவியேற்றப் பிறகு காமினி திஸாநாயக்கவுடன் அவருக்கிருந்த முரண்பாடு காரணமாக அத்திட்டங்களை முன்னெடுக்க முடியவில்லை.

1991 இல் மீண்டும் அத்திட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்ட போது மீண்டும் கைவிடப்பட்டது. 1993இல் பிரேமதாஸ கொலை செய்யப்பட்ட பிறகு ஜனாதிபதியாக பதவியேற்ற விஜேதுங்க மீண்டும் அத்திட்டத்தை முன்னெடுக்க முயற்சித்திார்.

பொதுஜன ஐக்கிய முன்னணி பதவிக்கு வந்தப் பிறகு 1996 இலும் மேல்கொத்மலை திட்டத்தை முன்னெடுக்கப் போவதாக அறிவிக்கப்பட்டது.

தற்போது நிலவும் மின்சார நெருக்கடியை காரணம்காட்டி மீண்டும் அத் திட்டத்தை காலஞ்சென்ற மகாவலி அமைச்சாராக இருந்த காமினி திஸாநாயக்க வின் சம்பந்தியாகவும் தற்போதைய மின்சார அமைச்சராகவும் இருக்கின்ற கரு ஜயசூரிய முன்னெடுக்கப்போவதாக அறிவித்துள்ளார்.

தலவாக்கொல்லை திட்டம் கலிடோனியா திட்டம் என்பவற்றை உள்ளடக்கிய மேல் கொத்மலை திட்டம் ஒரு பாரிய திட்டமாகும். அதனால் தலவாக் கொல்லை பகுதியில் வாழும் மக்கள் நேரடியாக பாதிப்புக் குள்ளாகி இடம்பெயர வேண்டிவரும். அத்திட்டத்தினால் பாதிப்பகப்படும் சிங்களமக்களுக்கு அப்பகுதி தோட்டக் காணிகள் பிரித்து கொடுக்கப்பட்டு அவர்களின் குடியேற்றங்கள் அமையவி ருக்கின்றன. இதனால் அப்பகுதியில் மலையகத் தமிழ் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள்.

இத்திட்டத்தினால் பாரிய நீர் வளம், மண் சூழலில் பாதிப்பு ஏற்படும் என்று பல சூழலியலளார்கள் அறிவுறுத்தியுள்ளனர். Environment Foundation Limited என்ற அமைப்பும் எதிர்ப்பை காட்டிவருகிறது. தற்போதைய புதிய ஆய்வுகளின்படி பாரிய நீர்த்தேக்கத் திட்டங்கள் மிகவும் பாதிப்பானவை என்றே கூறப்படுகிறது.

எனவே மக்களுக்கும், இயற்கைக்கும் பாதிப்பை ஏற்படுத்தப் போகின்ற மேல்கொத் மலைத்திட்டம் கைவிடப்பட வேண்டும். அதனை மேற்கொள்ளாமல் தடுத்து நிறுத்த பல பக்கங்களி லிருந்தும் எதிர்ப்பியக்கங்கள் கட்டி வளர்க்கப்பட வேண்டும்.

**- சிவன் -**

படிப்பகம்

புதியபூமி
புதிய பூமி REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA PUTHIYA POOMI
சுற்று 09 ஏப்ரல் 2002 பக்கம் 12 விலை 10/- சுழற்சி 46
எஸ்.47. 3ம் மாடி. கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி. கொழும்பு 11. இலங்கை. தொ.பே.: 435117, 335844 பாக்ஸ்: 01-473757

## அமைச்சர் பீரிசின் குழப்பம்

பிரிட்டிஷாரின் ஆட்சிக்கு கீழிருந்த போது 1931 இல் அறிமுகம் செய்யப்பட்ட டொனமூர் அரசியலமைப்பின் முக்கிய விடயங்களை அடிப்படையாக கொண்ட அரசியலமைப்பொன்றை எற்படுத்துவதன் மூலம் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படும் என்று அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் கூறுகிறார். அவ்வரசியலமைப்பு பிரிட்டிஷ் காலனித்துவப் பிடியை வைத்துக்கொண்டு இலங்கையர்களுக்கு இலங்கையின் சட்டவாக்கத்திலும், அரசியல் நிர்வாகத்திலும் பங்கெடுக்க வழிவிட்டுக்கொடுத்தது. அவ்வரசியலமைப்பின் மூலம் இலங்கைக்கு தன்னாட்சி கிடைக்க வில்லை. அதனாலேயே 1947இல் சோல்பரி அரசியலமைப்பு அறிமுகம் செய்யப்பட்டது. என்பது குறிப்பிடத்தக்கது.

அமைச்சர் பீரிசின் கருத்தை ஆழ்ந்து கவனிக்கின்றபோது பிரிட்டிஷ் காலனித்துவபிடியை விட்டுக்கொடுக்காத டொனமூர் அரசியலமைப்பு போன்று பேரினவாத, பெரு முதலாளித்துவப் பிடியை விட்டுக்கொடுக்காத அரசியலமைப்பொன்றை அரசியல் தீர்வுக்கான அரசியலமைப்பு திருத்தம் என்றபேரில் தமிழ் மக்கள் மீது திணிக்கப்படவிருப்பதாகவே தெரிகிறது.

இலங்கையின் இனமுரண்பாட்டை தீர்ப்பதற்கான பேச்சுவார்த்தைகளின் முடிவில் எய்தப்படும் உடன்பாடு அரசியல் அமைப்பில் இணைக்கப்பட வேண்டியதுடன். அவை நடைமுறைப்படுத்தப்படவும் வேண்டும். எனவே அரசியல் தீர்வை உறுதிசெய்வதில் அரசியலமைப்பு ஏற்பாடு முக்கியமான அடிப்படை யாகும். அரசியல் தீர்வை உள்ளடக்கக்கூடிய அரசியலமைப்பு தமிழ் மக்களின் ஆகக்குறைந்த தேசிய அபிலாஷைகளையாவது உறுதிசெய்வதாக அமைய வேண்டும்.

அந்த எதிர்பார்ப்பில் சந்தேகங்களை ஏற்படுத்தக் கூடியவாறு ஐ.தே.மு. அரசாங்கத்தின் சில அமைச்சர்கள் பேசி வருகிறார்கள். சிங்கள மக்களுடன் ஒப்பிடுகின்றபோது அவர்களை விட சமச்சீரற்ற அதிகாரப் பங்கீடு தமிழ் மக்களுக்கு வழங்கப்பட முடியாது. "ஒற்றையாட்சியின் அடிப்படைகளை தகர்க்காத வகையிலேயே தீர்வு காணப்படும்." "காணப்படும் தீர்வுத் திட்டத்தை அரசியல் அமைப்பில் இணைப்பதற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படும்." இவ்வாறு ஜீ.எல்.பீரிஸ் பேசிவருகிறார். இக்கருத்துக்களை அவர் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் அமைச்சராக இருந்து காலத்திலிருந்து பேசிவருகிறார்.

சட்டப் பேராசிரியர் என்ற அடிப்படையிலும் தனிமனித சுதந்திரத்தை விட பொதுநலன் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் அரசிடம் கூடுதலான அதிகாரம் இருக்க வேண்டும் என்பதே அவரின் பொதுவான நிலைப்பாடாகும். குற்றச் சாட்டொன்று நிரூபிக்கப்படும் வரை குற்றஞ் சாட்டப்பட்டவர் நிரபராதி என்பதே பொதுவாக ஏற்றுக்கொள்ளபட்ட வழக்கம். அதற்கு விதிவிலக்காக குற்றஞ்சாட்டப்பட்டவர் அவர்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்கள் பற்றி விளக்கமளிக்க வேண்டும் என்றும் குற்றச்சாட்டுக்கள் பற்றி குற்றஞ்சாட்டப்பட்டவர் மௌனம் சாதிக்க கூடாது என்பது போலவே அமைச்சர் பீரிசின் நிலைப்பாடாகக் காணப்படுகிறது. அரசிடம் அதிகாரம் யாவும் குவிந்திருக்க வேண்டும் என்ற மேற்படி கோளாறான சட்ட நிலைப்பாடும், பேரினவாத, முதலாளித்துவ அரச கட்டமைப்பில் எவ்வித மாற்றமும் ஏற்படக் கூடாது என்ற பழைய பஞ்சாங்க நிலைப்பாடு தான் அமைச்சர் பீரிஸைக் இனப்பிரச்சினை தீர்வு தொடப்பாக எதிர்மாறையாகப் பேசவைக்கிறது.

அரசியல் தீர்வை அரசியலமைப்பில் இணைப்பதற்கு சர்வஜன வாக்கொடுப்பு நடத்தப்பட வேண்டும் என்றுதும். ஒற்றையாட்சி முறைமைக்குள்ளேயே தீர்வு காணப்படும் என்பதும் டொனமூர் அரசியலமைப்பின் கீழிருந்த சட்ட நிர்வாக சபை போன்ற சபையொன்று ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்ஹவின் அடிமனக் கருத்துத்தான் என்பது விளங்கிக்கொள்ளப்பட வேண்டும். இவை முதலாளித்துவ சட்டக்கட்டமைப்பையும், பேரினவாதத்தையும் இறுக்கமாக வைத்திருக்கும் நிலைப்பாடுகளாகும்.

தற்போது வடக்கு கிழக்கில் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் இறுக்கமான சட்டக்கட்டமைப்பையும் பேரினவாதத்தையும் நெகிழ்வாக்குவனவாகவே இருக்கின்றன. இனப்பிரச்சினை தீர்வு காண்பதற்கு பேச்சுவார்த்தைகளும் கூட மேற்படி நெகிழ்வான நடவடிக்கைகளின் அடுத்தக் கட்டமாகவே அமையவேண்டும்.

அவ்வாறெனில் அரசியல் தீர்வு மட்டும் முதலாளித்துவ சட்டக்கட்டமைப்பையும் பேரினவாதத்தையும் இறுக்கமாக வைத்துக்கொண்டு காணப்படக் கூடியதல்ல என்பதை அமைச்சர் ஏன் விளங்க மறுக்கிறார்.

இதற்கு மாறாக இலங்கையில் ஏற்கனவே இருந்துவருகின்ற அரச கட்டமைப்பில் எவ்வித மாற்றம் ஏற்படுத்தாமலேயே தீர்வுகாணப்பட வேண்டும் என்று ஜீ.எல்.பீரிஸ். போன்றவர்கள் பேசிவருவது குழப்பகரமான கருத்துக்களை பரப்புரை செய்வதன் ஆரம்பமோ என்று சிந்திக்க வேண்டியுள்ளது.

இவ்வாறு பேசிப் பேசித்தான் 1995இல் பொதுஜன ஐக்கிய முன்னணி முன்வைத்த அரசியல் தீர்விற்கான அடிப்படைகளேயே தகர்த்து மிகவும் தாழ்ந்த நிலையிலான தீர்வுப் பொதியாக அரசியலமைப்புத் திருத்தத்தை முன்வைத்தார். அவர் 1998 இல் வடக்கு கிழக்கு இணைப்பை மறுத்தது மட்டுமல்ல கிழக்கையே மூன்றாக துண்டாடும் ஏற்பாடுகளையும் உள்ளடக்கியிருந்தார்.

எனவே ஜீ.எல்.பீரிஸ் போன்றவர்களின் குழப்பகரமானதும் முன்னேற்ற கரமற்றதுமான பேச்சுக்கள் தான் பேச்சுவார்த்தைக்கான அடிப்படைகளாயின் தீர்வும் சமாதானமும் கண்ணுக்கு எட்டாத தூரத்திலேயே இருந்து கொள்ளும் என்பதை உணர்ந்து கொள்ளல் அவசியமானதாகும்.

— ஆசிரியர் குழு —

# அந்நிய ஆதிக்க சக்திகளும் மேட்டுக்குடி அடிமை விசுவாசமும்

**வெகுஜனன்**

இலங்கைத் தீவு இந்து சமுத்திரத்தின் அழகான ஒரு நாடு என்றே வர்ணிக்கப் படுகின்றது. நில நீர் மனித வளங்கள் நிறைந்த இலங்கை நாடு சுதந்திரம் பெற்று விட்டதாகக் கூறி வருடா வருடம் கொண்டாட்டங்களும் நடாத்தப் பட்டு வருகின்றன. ஆனால் நாட்டினதும் அனைத்து மக்களினதும் வாழ் நிலை தான் என்ன? அபிவிருத்தியும் சுபீட்சமும் தேசிய இனங்கள் மத்தியில் ஐக்கியமும் ஒருமைப்பாடும் காணப்படுகின்றதா? இல்லவே இல்லை. இழிவுகளும் அழிவுகளும் நிறைந்து மக்கள் அவலங்களுடன் வாழும் ஒரு இலங்கையைத் தான் இன்று காணமுடிகின்றது.

ஒரு புறத்திலே இன முரண்பாடு முற்றி யுத்தமாக வெடித்து ரத்தமும் கண்ணீரும் ஓடிக்கொண்டிருக்கிறது. உயிரிழப்புகளும் உடமை அழிவுகளும் இடப் பெயர்வுகளும் மக்களை மீளாத் துயரில் ஆழ்த்தி நிற்கிறது. இருபது வருட கொடிய யுத்தத்திற்கும் பின்பும் தேசிய இனப்பிரச்சினைக்கு உரிய நியாயமான தீர்வை சமகால அரசியல் சமூக யதார்த்தங்களின் அடிப்படையில் தேடிக் கொள்ள முடியாத நிலை தான் நீடித்து வந்துள்ளது.

மறுபுறத்தில் நாட்டின் பொருளாதாரம் சீரழிக்கப்பட்டு சின்னாபின்னமடைந்து நிற்கின்றது. நாட்டின் வளங்களை உரியபடி பயன்படுத்தி அபிவிருத்திக்கும் சுபீட்சத்திற்கும் உரிய ஒரு பொருளாதாரக் கொள்கை பின்பற்றப்படவில்லை. அதனால் நாட்டு மக்கள் உணவு உடை இருப்பிடம் வேலை வாய்ப்பு கல்வி சுகாதாரம் போன்ற அடிப்படைத் தேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியாமல் வாழ்க்கை நெருக்கடிகளோடு மல்லாடிக் கோண்டே வாழ வேண்டியுள்ளது. இல்லாமை. பற்றாக் குறை. கடன்பழு. திருப்தி காண முடியாமை போன்றவற்றுடன் வாழுமாறு மக்கள் நிர்ப்பந்திக்கப் படுகின்றனர். சமூகத்தின் அடிநிலை நோக்கிச் சென்று பார்த்தால் உழைப்பிலே மக்கள் ஈடுபட்டிருந்த போதிலும் வறுமை நோய்கள், சூழல் பாதுகாப்பின்மை போன்றவற்றால் வாடி வதங்கி நிற்கின்றனர். ஜனநாயகம் சுதந்திரம் மனித உரிமைகள் என்பனவெல்லாம் ஏட்டுச் சுரக்காய் நிலையில் தான் கடுதாசிகளிலேயே இருந்து வருகின்றன.

இவற்றையெல்லாம் உற்று நோக்கிய பார்ப்போமானால் நமது சமூக அமைப்பிலே காணப்படும் மிக மோசமான ஏற்றத் தாழ்வுகளையும் அநீதி அக்கிரமங்களையும் மக்கள் விரோத செயற்பாடுகளையும் கண்டு கொள்ளலாம். சுரண்டலும் அரசியல் அடக்கு முறைகளும் நீதி நெறி முறைகளாக வகுக்கப்பட்டு அரசியல் சாசனத்தாலும் ஏனைய சட்டங்களாலும் அவற்றுக்குரிய அரச நிறுவனங்களாலும் பாதுகாக்கப் படுகின்றன. சட்டத்தின் முன் சகலரும் சமம் என்றும் ஜனநாயக அடிப்படையிலேயே தேர்தல்களும் ஆட்சிகளும் தீர்மானிக்கப்படுகின்றது என மீண்டும் மீண்டும் ஓதப்படுகின்றது. ஆனால் யாவும் வெறும் வேடங்கலேயாகும். சுரண்டல், அரசியல் அடக்கு முறை என்பனவற்றைப் பாதுகாத்து சொத்து சுகம் பெற்ற வர்க்கங்களின் தேவைகளையும் நலன்களையும் பாதுகாப்பதற்கான மறைப்புக்காகப் போடப்பட்ட திரைகளாகவே அவை இருந்து வருகின்றன.

இலங்கையின் ஆளும் வர்க்க சக்திகளாக இருந்து வருவோரின் ஊற்று மூலங்களையும் தோற்று வாய்களையும் தேடிச் சென்றால் அவர்களின் மேட்டுக்குடி வர்க்க வரலாற்றைக் காண இயலும். இன்று வரை ஆட்சி அதிகாரத்திற்கு வந்தவர்களின் பரம்பரைத் தொடர்ச்சியை வரலாற்றோடு இணைத்துப் பின்நோக்கிப் பார்த்தால் உயர் வர்க்க, உயர் சாதிய மேட்டுக் குடிகளின் ஆதிக்க அரசியலாக இருந்து வந்ததைத் தெளிவாக அடையாளம் காண இயலும்.

இத்தகையவர்கள் நிலவுடமை வழி வந்தவர்கள். முதலாளித்துவ வளர்ச்சிக்குள் தம்மைப் புகுத்திக் கொண்டவர்கள். நூனூற்ற ஐம்பது வருடகால அந்நியர் ஆட்சியின் கீழ் பட்டங்கள் பதவிகள் நிர்வாக உத்தியோகம் பெற்று அந்நிய வெள்ளைத்துரைத் தனத்திற்கு விசுவாசம் மிக்க அடிமைகளாக சேவகம் செய்து வந்தவர்கள். அதனாலேயே இவர்கள் பெரும் தொகை நிலங்களையும் சொத்து சுகங்களையும் உள்ளூர் ஆதிக்கக் கூறுகளையும் பெற்றுக் கொண்டனர். இதனால் இம் மேட்டுக் குடிகளின் அந்நிய விசுவாசமும் அடிமைச் சேவகச் சிந்தனையும் நீடித்து நிலைபெற்றதாக இருந்து வந்துள்ளது.

இத்தகைய ஆதிக்க எசமான் மேட்டுக் குடி அடிமை விசுவாச உறவானது இன்று வரை பாராளுமன்ற ஆட்சி முறையின் ஊடாகவும் தொடரப்படுகின்றது. இந்த உறவு கெட்டியாக இருந்த காரணத்தினாலேயே இந்திய சுதந்திரப் போராட்டம் போன்றதொரு பரந்த போராட்டம் நமது நாட்டில் இடம் பெறவில்லை. தேச பிதா என்றும் சுதந்தரத்தை மீட்ட தலைவர்கள் என்றும் கூறப்படுவது வெறும் போலித் தன்மானதேயாகும். என்றென்றும் விசுவாசமாக அடிமைச் சேவகம் செய்யக் கூடியவர்களிடம் நீண்ட காலத்தில் தமக்கு பங்கமில்லாதவாறு ஆட்சியதிகாரத்தைக் கைமாற்றிக் கொடுத்துச் சென்றதே சுதந்திரம் எனப்படுவதாகும்

இவ்வாறு கைம்மாற்றிப் பெற்ற ஆட்சி அதிகாரத்தின் மூலம் பிரத்தானிய அமெரிக்க மற்றும் மேற்குலக நாடுகளுக்கு விசுவாசமாக இருந்து வந்ததில் சிங்கள தமிழ் முஸ்லீம் மேட்டுக்குடித் தலைமைகள் எச் சந்தர்ப்பத்திலும் எதிர்ப்பு நிலையை எடுத்ததில்லை. ஓரிரு சந்தர்ப்பங்கள் ஏற்பட்ட போதிலும் எசமானர்களின் சீற்றத்தினால் இறுதியில் பணிந்து போக வேண்டியதாயிற்று.

> **இலங்கையின் நிலவுடமை முதலாளித்துவ மேட்டுக்குடி ஆதிக்க சக்திகளே அரசியல் அரங்கிலும் ஆளும் வர்க்க நிலையில் இருந்து வருகின்றன. இவர்களே அந்நிய ஏகாதிபத்திய சக்திகளின் அடிமைச் சேவகர்களாகவும் இருந்து வருகின்றனர்.**

தெற்கிலே இதுவரையில் சேனநாயக்கா, பண்டாரநாயக்கா, ஜெயவர்த்தனா குடும்பங்களே மேட்டுக்குடி ஆதிக்க அரசியலின் தலைமைப் பாத்திரத்தில் இருந்து வந்துள்ளன. தமிழர்கள் மத்தியிலும் குமாரசுவாமி, பொன்னம்பலம் இராமநாதன், ஜீ.ஜீ:பொன்னம்பலம் போன்றோரது மேட்டுக்குடிக் குடும்பங்களும் அவற்றின் வாரிசுகளும ஆதிக்க அரசியல் சக்தியாக இருந்து வந்துள்ளன.

அந்நிய கொலனித்துவ ஏகாதிபத்திய சக்திகளுக்கு சேவகம் செய்வதில் சிங்கள தமிழ் மேட்டுக்குடியினர் வர்க்க ரீதியில் இணைந்திருந்தனர். மாட்சிமை தங்கியதாக வர்ணித்துக் கொண்டே பிரித்தானிய அரச பரம்பரைக்கும் பிரபுக்களுக்கும் முன்னால் தமது விசுவாசத்தைக் காட்டிக் கொண்டனர். அத்தகைய பணிவும் அடிமை விசுவாசமும் தான் பின்னாட்களில் அமெரிக்க வெள்ளை ஆதிக்க வெறியர்களுக்கு முன்னாலும் கூனிக் குறுகி நிற்கவைத்தது. இத்தகைய மேட்டுக்குடி ஆளும் வர்க்க சிந்தனை தான் இந்திய ஆளும் வர்க்கத்திடம் தமிழர் தலைமைகளைச் சரணடைய வைத்தது.

தமிழர்களுடைய அரசியல் தலைமைகளின் நீண்ட வரலாற்றைத் திரும்பிப் பார்க்கும் போது நிலவுடமை மேட்டுக்குடி வழிவந்த தலைமைகளே ஆதிக்க அரசியலைக் கொண்டிருந்தமையைக் காண முடியும். பிற்காலங்களில் பாராளுமன்றத் தளத்தில் வந்த தலைமைகளும் முன்னோர்களின் மேட்டுக்குடிச் சிந்தனை மரபையே அடியொற்றி நின்றன. போராட்டத்தலைமைகளில் கூட தமிழ் மேட்டுக்குடி ஆதிக்க சிந்தனையின் அரசியல் வெளிப்பாட்டை அவ்வப்போது காணமுடிந்தது.

இவர்கள் அனைவரும் அந்நிய ஆதிக்க சக்திகளின் முன்னால் கைகட்டி சேவகம் செய்பவர்களாகவே இருந்து வந்துள்ளனர். புலிகள் இயக்கம் மட்டுமே விதிவிலக்காக இந்திய மேலாதிக்கத்தை எதிர்ப்பதில் தனது முழுப் பலத்தையும் காட்டி நின்றது என்பது வரலாற்றில் பதிவாகி உள்ளது.

இன்றைய உலகமயமாதல் சூழல் அந்நிய ஏகாதிபத்திய சக்திகளின் ஆதிக்க விரிவாக்கத்தை வலுப்படுத்தி வருகின்றது. அவ்வாறே இந்திய மேலாதிக்கத்தின் ஆதிக்கத்திற்கும் இடமளிக்கப்பட்டு வருகின்றது. இவ் அந்நிய ஆதிக்கங்களை எதிர்த்து நிற்பதற்கு ஆளும் வர்க்க சக்திகள் தயாராக இல்லை. அவர்கள் முழு நாட்டையும் நாட்டின் பொருளாதாரத்தையும் அதன் மூலம் சகல தேசிய இனங்களையும் அந்நியர்களுக்கு அடிமையாக்குவதில் தான் முன்நிற்கிறார்கள்.

இலங்கையின் ஆளும் வர்க்க மேட்டுக்குடி சக்திகள் அன்றும் சரி இன்றும் சரி அந்நிய ஆதிக்க சக்திகளை எதிர்த்து நின்றதில்லை. தமது பாரம்பரிய அடிமை விசுவாசத்தையே தெரிவித்து நிற்கிறார்கள். இந்த நிலையை அவர்கள் மாற்றுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. ஆளும் வர்க்க மேட்டுக்குடி ஆதிக்க அரசியல் சக்திகளே தத்தமது இனங்களையும் மொழிகளையும் மதங்களையும் காப்பாற்ற வந்த மீட்பர்களென மக்கள் நம்பிக் கொள்ளும் நிலை இன்றும் நீடிக்கின்றது. அவர்களுடைய வர்க்க உள்ளடக்கத்தையும் மக்களைச் சூறையாடி ஒடுக்கும் அரசியல் ஆதிக்கத்தையும் முறியடிக்க சமூக மாற்றத்திற்கான புரட்சிகர வெகுஜனப் போராட்டங்கள் முன்னேறிச் செல்லுவது அவசியம். அத்தகைய போராட்டங்களாலேயே அந்நிய சக்திகளையும் முறியடிக்க முடியும்.

• • • • • •

www.padippakam.com



# அமெரிக்கத் தலையீடு ஆரம்பித்து விட்டது!

## சரணடைந்து கொள்வதா அல்லது எதிர்த்து நிற்பதா?

**அ. பூபதி**

அமெரிக்க ஏகாதிபத்தியம் பற்றிக் கூறினால் அது மார்க்சிய வாதிகளின் வாய்ப்பாடு என்பார்கள். சி.ஐ.ஏ. யின் சதி என்றால் அது கம்யூனிஸ்டுகளின் கற்பனை என்று எழுதுவார்கள். அமெரிக்கத் தலையீடு பற்றி முன்னறிந்து கூறினால் இடதுசாரிகளின் உளறல் எனத் தட்டிக் கழிப்பார்கள். இவ்வாறு கூறிக் கொண்டே அமெரிக்காவின் செல்வச் செழிப்புப் பற்றியும் அதன் ஜனநாயக சுதந்திரம் சம்மந்தமாகவும் புகழ்மாலை சூடி நியாயங்கள் கற்பித்து வக்காலத்து வாங்கும் பிரகிருதிகள் நமது நாட்டிலும் இருக்கிறார்கள். இத்தகையோர் நமது நாட்டில் அமெரிக்க ஏகாதிபத்தியத் தலையீடு ஆரம்பித்திருப்பதையிட்டு என்ன நியாயம் கூறப் போகிறார்கள். அப்படி ஒன்றும் ஆகவில்லை என்று சொல்லப் போகிறார்களா? அல்லது அமெரிக்கக்காரர்கள் செய்வதெல்லாம் நல்லதிற்கே என்று வாதிடப் போகிறார்களா?

அமெரிக்கா இலங்கையின் மீது நீண்ட காலமாகவே கண்வைத்து அதற்குரிய வகையில் செயலாற்றி வந்திருக்கிறது. இதுவரை பொருளாதார உதவிகள், கடன்கள், அவற்றுக்குரிய வழிகாட்டல் செய்து வந்ததுடன் ஆயுத-ராணுவத் தளபாட விற்பனையையும் ஆலோசனை பயிற்சிகளையும் வழங்கி வந்துள்ளது. இவற்றின் உச்ச கட்ட வளர்ச்சியாகவே இன்று நேரடித் தலையீடு என்ற நிலைக்கும் வந்துள்ளது.

இலங்கையில் அன்று பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகள் தங்களுடைய நீண்டகால நலன்கருதி இனங்களுக் கிடையிலான முரண்பாட்டிற்கும் பகை நிலை வளர்ச்சிக்கும் வித்திட்டுச் சென்றனர். அதுவே கடந்த நூற்றாண்டில் வளர்ச்சி பெற்று கொடிய யுத்தம் என்னும் வடிவத்தைப் பெற்றுக் கொண்டது. இத்தகைய யுத்தத்தை தீவிரமாக்கி கொண்டதில் அமெரிக்காவின் பங்கும் பணியும் முதன்மையானது, தனது தென்னாசியப் பிராந்தியத்தின் இருப்புக்கு இலங்கையை ஒரு வலிய தளமாக்குவது அமெரிக்காவின் உலக மேலாதிக்க மூலோபாயத்தின் ஒரு பகுதியாகும். அதற்குரிய வழிகளில் செயல்பட்டு வந்துள்ள அமெரிக்கா இன்று அதற்குரிய இலக்கை அடைந்து கொள்வதில் வேகமாகச் செயல்படுகிறது. முன்பு யுத்தத்தின் மூலம் தனது இலக்கு நோக்கி நடந்து வந்த அமெரிக்கா இப்போது சமாதானப் பாதை என்பதன் ஊடாகச் சென்று கொண்டிருக்கிறது.

தென்னாசியப் பிராந்தியத்தின் கட்டுப் பாட்டை யார் கையில் வைத்திருப்பது என்பதில் இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் எப்பொழுதும் கடுமையான போட்டி இருந்து வந்திருக்கிறது. 1983ல் இருந்து இந்தியா இலங்கை விடயத்தில் நேரடியாக இறங்கி 1987ல் படைகளை வடக்கு கிழக்கில் இறக்கிக் கொள்ளும் வரை சென்றது. ஆனால் விரைவாகவே அது சகப்பான பாடங்களைப் படித்துக்கொண்டு பின்வாங்க வேண்டியதாயிற்று. அத்துடன் இந்தியப் பிரதமராக இருந்து இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்கு காரண கர்த்தாவாக விளங்கிய ராஜீவ் காந்தியின் கொலையும் இலங்கையின் இனப் பிரச்சினை பற்றிய இந்திய விரக்தியையும் ஒதுங்கிக் கொள்வதையும் சாத்தியமாக்கியது.

இத்தகைய சூழலிலேயே 1994ல் பொதுசன முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்து தான் வழங்கிய வாக்குறுதியான சமாதானத்தை தூக்கி வீசி விட்டு யுத்தத்தை வேகமாக முன்னெடுத்தது. அதற்கு வாய்த்தது போன்று வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அமெரிக்காவின் காலடிக்கு சென்று நிற்க பிரதிப் பாதுகாப்பு அமைச்சரான அனுருத்த ரத்வத்த இதோ புலிகளை முடித்துக் காட்டுகிறேன் எனக் கூறி குடா நாட்டைக் கைப்பற்றி 'தேசிய வீரன்' என ஜெனரல் விருது பெற்று நின்றார். இதற்குப் பின்னால் அமெரிக்கா நின்று சகல உதவி களையும் செய்து 'சமாதானத்திற்கான யுத்தத்தை' நடாத்த வழிகாட்டியது. இவ்வாறு பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்திற்கு யுத்தத்தை நடாத்தி நிற்க அமெரிக்கா ஏன் மும்மரமாக நின்றது என்பதை சந்திரிகா அரசாங்கத்தின் கொள்கை வகுப்பாளர்களால் விளங்கிக் கொள்ள இயலவில்லை.

சந்திரிகா அரசாங்கத்தின் ஏழாண்டு கால ஆட்சியில் நடாத்தப்பட்ட யுத்தம் ராணுவத்திற்கு பலமுனைகளில் பின்னடைவுகளைக் கொண்டு வந்ததுடன் பாரிய பொருளாதார இழப்பையும் நெருக்கடியையும் தோற்றுவித்தது. கட்டுநாயக்கா விமான நிலையத்தின் மீதான தாக்குதல் அந்த அரசாங்கத்தின் யுத்தக் கொள்கை மீது வீழ்ந்த மிகப்பெரிய அடியாகியது. யுத்தத்தால் புலிகளை ஒழிக்க முடியாது என்பதை அரசாங்கத்திற்கு மட்டும்மன்றி சிங்கள மக்களுக்கும் உணர்த்தியது.

அதற்கு முன்பாக புலிகள் இயக்கம் இயக்கச்சி முகாமைத் தகர்த்து கைப்பற்றிய பின் யாழ்ப்பாணத்தைப் பிடிப்பதற்கு எடுத்த முயற்சி தடுத்து நிறுத்தப்பட்டமையானது தற்செயலானது மட்டுமன்றி புலிகளின் பக்கத்தில் பலவீனத்தை ஏற்படுத்த எடுக்கப்பட்ட ஒரு முடிவும் ஆகும். அதாவது அரசாங்கமும் புலிகளும் யுத்தத்தில் ஒருவரை ஒருவர் வெல்ல முடியாது என்னும் ஒரு இக்கட்டான நிலை தோற்று விக்கப்பட்டது. அதன் பின்னால் அமெரிக்காவின் கைகளே பலமடைந்து ஓங்கி நின்றது. இந்தியாவின் மிரட்டலும் அதற்குப் பயன்படுத்தப்பட்டது.

இவ்வாறான ஒரு சூழலிலேயே கடந்த வருடம் செப்டம்பர் 11ம் திகதி அமெரிக்க நகரங்கள் மீதான அமெரிக்கா உட்பட உலகை உலுக்கிய தாக்குதல் இடம் பெற்றது. அதன் மூலம் அமெரிக்கா உலகின் உள்ள தனது நலன்களுக்கு குறுக்கே நிற்கும் நாடுகளை 'பயங்கரவாத எதிர்ப்பு' நடவடிக்கை என்ற பெயரில் குறிவைத்து செயல்பட ஆரம்பித்தது. அதற்கு உலக நாடுகளின் ஆதரவை பெறுவதாகவும் காட்டிக் கொண்டது. இந்தியா இந்த 'பயங்கரவாத எதிர்ப்பு' வலையில் சிக்கிக் கொண்டது. இலங்கை விடயத்தில் இந்தியா ஒதுங்கி நின்று வந்த நிலையை அமெரிக்கா பலவழிகளிலும் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டது. இந்தியாவிற்குள் உலக மயமாதல் திட்டங்களைப் புகுத்திக் கொண்டும் பாகிஸ்தான் விடயத்தில் இந்திய ஆதரவு போன்று நடித்துக் கொண்டும் இலங்கை விவகாரத்தில் இந்தியாவை ஓரம்கட்டிக்கொண்டது. புலிகள் இயக்கத்திற்கும் இந்தியக் கொள்ளை வகுப்பாளர்களுக்கும் உள்ள பிளவைப் பெரிதாக்கி ஒருவரை ஒருவர் கிட்ட நெருங்காதபடி ஆக்கிக் கொண்டது அமெரிக்கா.

அத்துடன் புலிகள் இயக்கத்தை செப்டம்பர் 11க்குப் பின் கழுத்தில் பிடிப்பது போன்று பிடிக்குள் கொண்டுவர சகலவற்றையும் செய்த கொண்டது. இத்தகைய சூழலில் தான் அமெரிக்கா சமாதான வேடத்தை அணிந்து கொண்டது. யுத்தத்தால் மக்களின் வெறுப்புக்குரியதாகி நின்ற பொதுசன முன்னணி அரசாங்கத்தை வீழ்த்த அமெரிக்கா பல முனைகளின் ஊடாக செயல்பட்டது. உலக வங்கி சர்வதேச நாணய நிதியம் என்பனவற்றின் திட்டங்களை அவர்கள் எதிர் பார்த்த துரித வேகத்தில் நடைமுறைப் படுத்தத் தயங்கிய பொதுசன முன்னணி அரசாங்கம் வீழ்வதை அமெரிக்கா விரும்பியது. இலங்கையின் மிகப் பெரும் முதலாளிகளையும் ஏனைய சக்திகளுக்கும் தனது சைகையைக் காட்டிக் கொண்டது. மக்கள் விரக்தி வெறுப்புடன் இருந்த நிலையில் பாராளு மன்றத்திற்கு புதிய முகங்களின் வரவை அமெரிக்கா விரும்பியது.

தெற்கில் ஐக்கிய தேசியக் கட்சியும் வடக்கு கிழக்கில் தமிழர் கூட்டமைப்பும் வெற்றி பெறுவதை அமெரிக்கா சாத்தியமாக்கிக் கொண்டது. அந்த வெற்றிக்குப் பின்னால் இருந்த' ஒவ்வொருவரது பேச்சுக்கள் அறிக்கைகள் இறுதி நேர வேண்டு கோள்களை நோக்கும் போது அவற்றில் அமெரிக்காவின் விருப்பங்களும் உள்ளார்ந்த நோக்கங்களும் படிந்திருந்ததை அவதானிக்க முடியும். அது இன்று நிருபனமாகியும் உள்ளது.

அதுமட்டுமன்றி இனிமேல் இலங்கை மக்கள் மத்தியில் யுத்த வேடமணிந்து செயல்பட முடியாது என்பதை மிகவும் தெளிவாக்கிய நிலையில் அமெரிக்கா சமாதான வேடத்தை மாற்றிக் கொண்டது. எந்த வேடத்தை அணிந்து நின்றாலும் அமெரிக்கா ஆற்றிவரும் பணிகள் எனப்படுபவை தனது தேவைக்கும் நோக்கிற்கும் உரியதே அன்றி இலங்கை மக்களுக்கு உரிய ஒன்றல்ல. முழு இலங்கையையும் தனது உலகமயமாதல் திட்டத்திற்குள் கொண்டு வந்து பொருளாதார ராணுவ அரசியல் தளங்களில் மட்டுமன்றி சமூக கலாச்சார முனைகளிலும் தனத பிடியை இறுக்கிக் கொண்டு வருவதே அதன் நோக்கமாகும். உலக மேலாதிக்கப் பசிக்கு இரை தேடுவதே அமெரிக்க கழுகின் கைங்கரியமாகும்.

அமெரிக்காவின் அண்மைக்கால நடத்தைகளை உற்று நோக்கும் எவரும் அதன் பயங்கரப் பக்கங்களைக் கண்டு கொள்வார்கள். முற்று முழுதாக அமெரிக்கா இலங்கையின் பேரினவாத பெரு முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தின் பக்கத்தில் தான் இருந்து வருகின்றது என்பதில் சந்தேகம் கொள்ள முடியாது. நகர்வுகள் நடப்புகள் அதனைத் தெளிவாக்கி வருகின்றன.

அதேவேளை புலிகள் இயக்கத்தை அமெரிக்கா தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து விட்டதா? என்ற கேள்வி பலமானதொன்றாக எழுந்து நிற்கின்றது. அன்று நோர்வேயின் அனுசரனையை அலட்சியத்துடன் பார்ந்து நின்ற அமெரிக்கா இன்று அதற்கு வழிகாட்டும் நிலைக்கு மாறி நிற்கிறது. அது மட்டுமன்றி மிகவும் வேகமாகக் காய்கள் நகர்த்தப்படுவதையும் புலிகள் இயக்கம் தனது தந்திரோபாயங்களை மாற்றிக் கொண்டு சிலவற்றை அடக்கி வாசித்து வருவதையும் நோக்கும் போதே மேற்றபடி கேள்வி மேலெழும்புவதற்கு தேவை ஏற்படுகிறது.

அமெரிக்கா இவ்விடயத்தில் கடந்த ஒரு வருடகாலமாக அதிக அக்கறை காட்டி வந்துள்ளதுடன் அதற்குரிய நிகழ்ச்சி நிரல் ஏற்கனவே தயாரிக்கப்பட்டதையும் சம்பங்கள் எடுத்துக் காட்டி வருகின்றன. கடந்த வருடம் மார்ச் மாதத்தில் யாழ்ப்பாணம் சென்ற அமெரிக்கத் தூதுவர் அங்கு யாழ் பொதுசன நூலகத்தில் ஆற்றிய உரையில் அமெரிக்கா எடுத்துள்ள முடிவைச் சூசகமாகத் தெரியப் படுத்தினார். தமிழீழம், பிரிவினை சுய நிர்ணய உரிமை எதுவும் சாத்தியப் படாது என்று கூறியதுடன் அதனை புலிகள் இயக்கத்திடம் சென்று இங்குள்ள யாராவது சொல்லுங்கள் என்றும் கூறியிருந்தார். அந்த உரையானது அமெரிக்கத் தலையீட்டின் முதலாவது பிரகடனம் என்பதாக எடுத்துக் கொள்ளலாம்.





தேர்தலுக்குப் பின்னான அண்மைக் காலங்களில் அமெரிக்கத் தூதுவர் ஆஷ்லி வில்ஸ் வடக்கு கிழக்கிற்கு குறிப்பான பயணங்களை மேற்கொண்டு வந்துள்ளனர். சென்று இடமெல்லாம் அமெரிக்காவின் அதிகரித்த அக்கறை யை வெளிப்படுத்தி தமது தலையீட்டின் அவசியத்தை உணர்த்தியும் கொண்டார். அத்துடன் புலிகள் இயக்கத்தை எச்சரிக்கை செய்யும் தோரணையில் அறிக்கை விடுத்துள்ள துடன் தாங்கள் முன்வைக்கும் தீர்வை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்ற வற்புறுத்தல் தொனியிலும் கூறியுள்ளார்.

அதேவேளை அண்மையில் இலங்கைக்கு வருகை தந்த அமெரிக் காவின் தென்னாசியப் பிராந்தியத்திற்கான ராஜாங்கச் செயலாளர் கிரிஸ்ரினா ரொக்கா, அமெரிக்க கடற் சமருக்கான கட்டளைத் தளபதி ஜெனரல் திமோதி கோர்ம்லி, இலங்கைக்கான தூதுவர் ஆஷ்லி வில்ஸ் ஆகியோர் பயண முன்னறிவிப்பு இன்றி யாழ்ப்பாணம் சென்றடைந்தனர். பிரதமரின் யாழ்ப்பாண விஜயம் இடம் பெற்ற வேளை இந்த அமெரிக்க முக்கியஸ்தர்கள் தமது ஹேக்குலிஸ் சி130 ரக சொந்த விமானத்தில் பலாலி சென்று இறங்கி இருக்கிறார்கள். இவர்களை அழைத்துச் சென்றவர் அமெரிக்காவின் நம்பிக்கைக்குரிய நபரும் அமைச்சருமான மிலிந்த மொரகொடவாகும். இவர்களுடன் தமிழர் கூட்டமைப்பின் தலைவர்களில் ஒருவரான வீ. ஆனந்த சங்கரியும் மிக உற்சாகமாகக் கலந்து கொண்டிருந்தார்.

இவ் அமெரிக்கத் தூதுக் குழுவினர் பலாலியில் பிரதமர் உட்பட ராணுவ உயர் தளபதிகள் அதிகாரிகளுடன் மிக முக்கிய விடயங்கள் பற்றி தனிமையில் கலந்து பேசியுள்ளதுடன் குடாநாட்டின் முக்கிய பகுதிகளுக்கும் சென்று பார்வையிட்டுத் திரும்பினர். இதனை தற்செயலானதாகவோ அன்றி சம்பிரதாய பூர்வமான ராஜதந்திரிகளின் பயணமாகவோ எடுத்து நோக்க முடியாது.

பலாலி ராணுவத்தளம் பார்வையிடப்பட்டு பிரதமர் உடன் இருக்கவே உயர் ராணுவ அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தை நடாத்தப்பட்டிருக்கிறது. ஏற்கனவே புத்தளம் மாவட்டத்தில் பல நூறு ஏக்கர் நிலத்தில் 'வொஸ் ஒவ் அமெரிக்கா' வின் ஒலிபரப்பு நிலையம் இருந்து வருகின்றது. அது வெறுமனே ஒலிபரப்பு நிலையம் மட்டுமல்ல. அதனை தென்னாசியாவிற்கான அமெரிக்காவின் உளவுத் தளமாகவே காணுதல் வேண்டும்.

இப்பொழுது அமெரிக்காவிற்கான படைத்தளம் தேவைப்படுகின்றது. புலிகளைப் பிடரியில் பிடித்து அமுக்குவதற்கு பலாலித்தளமே பொருத்தமானது என்ற அமெரிக்க வேண்டுதலை இலங்கை அரசாங்கம் எவ்வித மறுப்பும் இன்றி ஏற்றுக் கொள்ளவே செய்யும். ஏற்கனவே பலாலி படைத்தளத்தைச் சுற்றியுள்ள காணிகள், வீடுகள், விவசாய நிலங்கள் சுவீகரிக்கப்படுவதற்கு வர்த்தமானி அறிவித்தல்கள் ஐ.தே.க.ஆட்சியிலும் பின்னர் பொதுசன முன்னணி ஆட்சியிலும் விடுக்கப்பட்டன. இனிமேல் பலாலித்தளம் அமெரிக்காவின் நேரடித்தளமாக மாறுவதில் அரசாங்கத் தரப்பிலிருந்தோ அன்றித் தமிழர் தலைமைத்துவங்களில் இருந்தோ எவ்வித எதிர்ப்பும் எழப்போவதில்லை.

இலங்கை இனப்பிரச்சினை காரணமாக இரண்டாவது தடவையாக அந்நியத் தலையீடும் ராணுவப் பிரசன்னமும் ஏற்படப் போகிறது. முன்பு இந்தியா நடந்து கொண்ட அதேபாதையில் அதைவிடவும் மிக மோசமான வழிகளில் அமெரிக்கா இலங்கையில் தனது தலையீட்டை ஆரம்பித்திருக்கிறது. இது நேரடியான ராணுவப் படை நடத்தலாக அண்மைய பிலிப்பீன்ஸ் நாட்டிற்குள் அமெரிக்க ராணுவம் புகுந்துகொண்ட நடைமுறையாக வளர்ந்து கொள்ளும் என்பதில் இரண்டு பேச்சுக்கே இடமில்லை. இக்கட்டத்தில் தமிழர் சிங்களவர் முஸ்லீம்கள் மலையத் தமிழர் உள்ளிட்ட அனைவருக்கும் முன்னால் ஒரு பாரிய கேள்வி ஒன்று எழுந்து நிற்கின்றது. இலங்கையின் சுதந்திரம் சுயாதிபத்தியம் இறமை என்பனவற்றுக்கு என்ன நடக்கப் போகின்றது என்பதேயாகும். ஒவ்வொரு அரசியல் கட்சியும் என்ன நிலைப்பாட்டை எடுத்துக்கொள்ளப் போகின்றன என்பதை உன்னப்பாக அவதானிக்க வேண்டிய முக்கிய தருணம் வந்து விட்டது. விட்டுக்கொடுத்து அமெரிக்க ஏகாதிபத்தியம் முன்பாக அடிபணிந்து சரணடையப் போகிறார்களா? அல்லது ஏகாதிபத்திய எதிர்ப்பில் உறுதியுடன் எதிர்த்து நிற்கப் போகிறார்களா? ●

படிப்பகம்

www.padippakam.com



# தமிழ் ஊடகங்கள் பற்றி (2)

ச தமிழ் ஒலி-ஒளி பரப்புத் துறையின் றைபாடுகளைக் குறிப்பாக ஒளிபரப்புத் றையினது குறைபாடுகளைத், ாக்கு வசதியாகப் பாவித்துக் கொள்ள ாராஜா நிறுவனம் தயங்கவில்லை. லங்கை அரசாங்கத்தில் யார் பதவியி நந்தாலும் கட்சி வேறுபாடு இல்லாது ரியம் பார்க்கிற திறமை இந்த றுவனத்துக்கு நீண்ட காலமாகவே ருந்து வந்தது. தமிழ் முதலாளிக் டும்பமொன்றின் ஆதிக்கத்தில் ருந்தாலும், இந்த நிறுவனம் எந்தப் ரினவாத அரசாங்கத்துக்கும் ஏற்றபடி, வேண்டியதைத் தந்து பெற வண்டியதைத் பெறும் வலிமையுடைய ாக இருந்து வந்துள்ளது.

னியார் ஒளிபரப்புக்கு சட்டரீதியான னுமதி இருந்தாலும் எந்த அரசாங்க ம் எவருக்கும் அனுமதியை இலகுவில் ழங்காது. ஒளிபரப்புப் பற்றிய சில ட்டுப்பாடுகளுக்கும் மேலாக ஓரளவு ரிந்துணர்வு அங்கு தேவையாகிறது. ந்தவிதமான புரிந்துணர்வு நிரந்தர ானதல்ல. ஒரு ஒளிபரப்பு நிறுவனத் ால் அரசாங்க உதவியின்றி இயங்க டியும் என்ற போதிலும் அது அரசாங் த்தைப் பகைத்துக் கொள்வதில்லை. து தனது லாப நட்டக் கணக்குகளை னதிற் கொண்டே சில அரசியல் நிலைப்பாடுகளை மேற்கொள்கிறது. க்தியும் அதன் மூத்த சகோதர றுவனங்களான எம்.ரி.வி.யும் சிரசவும் ிரண்டு ஆண்டுகட்கு முன்பாக பீறுமிக்க சனநாயக பிரச்சாரங்களாகத் தோன்றியதற்கும் இன்று யூஎன்பி அரசாங்கத்தின் பிரசார அமைப்பாக் இருப்பதற்கும் ஒரே காரணம் தான் ண்டு என்பதை நான் விரிவாக

விளக்க அவசியமில்லை. சுருக்கமாகச் சொன்னால், நடுநிலை என்ற தோற்றப்பாட்டை போல மோசமான பக்கச்சாப்பு எதுவும் அரசியலில் இல்லை.

சக்தியின் அரசியல் ஒடுக்கப்பட்ட மக்களின் அரசியலாக என்றுமே இருந்ததில்லை. அதன் மொழி என்றுமே ஒடுக்கப்பட்ட மக்களின் மொழி அல்ல. அப்படி இருக்கவேண்டும் என்று நாம் எதிர்ப்பார்ப்பது தான் தவறு. எந்த முதலாளியத் தகவல் நிறுவனமும் செய்வதைச் சக்தி செய்கிறது. ஒவ்வொரு நிறுவனமும் தனக்குக் கைவந்த முறையில் தனது நலன் களையும் தனது வர்க்கத்தின் நலனை யுமே பேணுகிறது. என்றாலும் நிறுவனங் கள் நடுவே உள்ள வேறுபாடுகளை நாம் புறக்கணிக்க முடியாது. முதலாளியக் கண்ணோட்டத்தி் சமூக விழுமியங்கள் பற்றிய சில பார்வை வேறுபாடுகள் உள்ளன. இதுவே தேசப்பற்றுள்ள, சமூகச் சீர்திருத்தக் கண்ணோட்டம் கொண்ட முதலாளி களைச் சமூகச் சீரழிவுக்குக் காரண மாகும் முதலாளிகளையும் விதேசிய ஏகபோக முதலாளிகளுடைய தரகர்க ளாகவும் முகவர்களாகவும் இயங்குகிற முதலாளிகளையும் வேறுபடுத்துகிறது. இவ்விடயத்தில் சக்தி எங்கே நிற்கிறது?

## "சன்" டி.வி.யின் குப்பைகள் "சக்தி" மூலம் விலை போகிறது!

சக்தி ஒளிபரப்பு செயற்படுகிற ஒன்பது மணி நேரக் காலத்திற்குள் நமக்கு வழங்கப்படுவது என்ன? தமிழ் நாட்டின் பண்பாட்டுச் சீரழிவின் ஒரு சின்னமாக விளங்குகிற "சன் டி.வி" வழங்குகிற சின்னத்திரைக் குப்பைகளில் கடைந் தெடுத்த குப்பைகள் தாம் அதன் பெரும் பகுதியை அடைத்துக் கொண்டிருக் கின்றன. இது போதாமல் நிகழ்ச்சிக் கிடையிலான இடை வேளையை நிரப்பத் தமிழ் சினிமாவின் ஆபாசமான பாடல்களும் அவற்றைவிட ஆபாசமான ஆட்டமும் காண்பிக்கப்படுகின்றன. இவையும் போதாதென்று இவற்றுக் கான சிறப்பு நிகழ்ச்சிகளும் உள்ளன.

விலக்காகச் சில சின்னத்திரை நிகழ்ச்சிகள் வருகின்றன. அவற்றில் ஒரு சிறு பகுதி மட்டுமே தரமானது எனலாம். அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் தொடர்ந்து காட்டப்படுவது அருமை. உதாரணமாக, பாலு மகேந்திராவின் தயாரிப்பிலானவை.

## மட்டகரமான ரசனைக்கும் சமூக கலாச்சார சீரழிவுக்கும் "சக்தி"

சக்தி காண்பிக்கும் தொடர்பு நாடகங்கள் போல அபத்தமான தொடர் நாடகங் களைத் தமிழக எல்லைக்கு வெளியே இந்தியில் மட்டும் காண முடியுமாயிருக்க லாம். இத்தனைக்கும் பகுத்தறிவு பேசியே அரசியலில் முன்னேறிய கருணாநிதி - முரசொலிமாறன் கண்காணிப்பிலுள்ள "சன் டி.வி." தான் இந்தக் குப்பைகளை மற்ற நிறுவனங் களுடன் போட்டியிட்டுக் கொண்டு வழங்குகிறது.

ஐரோப்பியாவில், குறிப்பாக இங்கிலாந்தில், தொடர் நாடகப் பாரம் பரியம் ஒன்று உண்டு. அமெரிக்காவிலும் ஒன்று உண்டு. சிங்களத்திற்கூட ரூபவாஹினியில் "கோப்பிகடே" போன்ற தயாரிப்புக்கள் நீண்டகாலமாகத் தரமான முறையில் வழங்கப்பட்டுள்ளன. தமிழில் அது ஏன் இயலாமல் உள்ளது? இது இலங்கையில் மட்டும் உள்ள பிரச்சினை என்றால் வாய்ப்புக்கள் போதாமை போன்ற காரணங்களைச் சொல்லி நியாயப்படுத்தலாம். ஆனால் தமிழ்ப் பேசும் சமுதாயம் முழுவதும் ஏதோ வகையில் மட்டரகமான ரசனைக்குப் பழக்கப்படுத்தப்பட்டுள்ளது. இது தமிழகத்து வாரச் சஞ்சிகைகள், தமிழச் சினிமா, தமிழ்த்தொலைக்காட்சி என்பவற்றையும், ஏன் தமிழகத்து நாடக மேடையையும் பீடித்துள்ள நோய்.

மறுபுறம் இலங்கையில், தமிழ்ப் பேசும் சமூகங்களின் பண்பாட்டு அடையாளத் தை வலியுறுத்திச் செய்யப்பட்ட காரியங்கள் மூலம் இன்றுவரை நமது இலக்கியம், விமர்சனம், நாடகம் போன்ற துறைகளில் இந்த மண்ணின் அடை யாளமும் தனித்துவமும் வலிமையாகப் நிலைத்து நிற்பது எப்படி? இதற்குச் சமூக அளவிலான சில செயற்பாடுகள் முக்கியமானவை. முக்கியமான சில: மக்களின் ரசனையை உயர்த்துவது ஈழத்துப் படைப்பாளிகளை ஊக்கு விப்பது: தரமான ஈழத்துப் படைப்புக் களை மக்கள் நடுவே பரப்ப உதவுவது.

ரூபவாஹினியைப் பொறுத்தவரை, அரசாங்கத்தின் மாற்றாந்தாய் மனோ பாவமும் ரூபவாஹினியைக் குத்தகை க்கு எடுத்துள்ள சிலரது ஆதிக்கமும் மேற்கண்டவாறான செயற்பாடுகளை மட்டுப்படுத்துகின்றன. ரூபவாஹினியின் அசட்டையால் உருவான இடை வெளியைப் பயன்படுத்தித் தன் ஆதிக் கத்தை முழுமைப்படுத்திக் கொண்ட "சக்தி" செய்வது என்ன? எதை யெல்லாம் தவிர்ப்பது நல்லதோ அதையெல்லாம் ஒழுங்காக நாளும் நேரமும் தவறாமல் வழங்குகிறது. மறுபுறம் எதெல்லாம் நல்லதோ அதையெல்லாம் புறக்கணிக்கிறது.

"சக்தி" பிரமுகர்களுடன் சில நல்ல நிகழ்ச்சிகளை நடத்துவது பற்றி உரை யாடிய போது கிடைத்த முக்கியமான தகவல் ஏதெனில் 20,000 ரூபாவுக்கு இந்தியாவிலிருந்து அரைமணி நேரக் குப்பையை வாங்கலாம். உள்ளூரில் எதையும் தயாரிக்க அதிலும் அதிகம் செலவாகும் என்பதே. சென்ற ஆண்டு நடந்த சிறுவர் நாடக விழா நாடகங்களை "சக்தி" காட்டுவதற்கு முன்வந்தது பற்றி அறிந்தேன். அதாவது நாடகத் தயாரிப்பாளர்கள் மறுபடி அவற்றைத் தமது சொந்தச் செலவில் மேடையேற்றினால் "சக்தி" அதனைத் தனது செலவில் ஒளிபரப்புமாம்.

வருகிறேன். இரண்டையும் சேர்த்து ஊதி ஊதித் தின்னலாம்" என்கிற மாதிரி அல்லவா. பயனுள்ள ஒரு காரியத்தைச் செய்ய இவ்வளவு கஞ்சத்தனம் காட்டுகிற சக்தி இந்தியாவிலிருந்து சினிமாப் பாட்டுக்காரர்களைக் கொண்டுவந்து வருடத்துக்கு இரண்டு முறையாவது கும்மாளம் போடுவதில் தாராளமாகச் செலவிடுகிறது. இது ஏன்?

தாங்கள் உருவாக்கிய மட்டரகமான ரசனையை மூலதனமாக்கி, மேலும் சம்பாதிப்பதிற்கான ஒரு காரியமே அல்லாமல் இது வேறேதுவுமில்லை எனலாம். அதை விட முக்கியமான ஒரு நோக்கம் இருந்தால் அது மக்களைச் சிந்தனையோ செயலூக்கமோ இல்லாத மந்தைகளாக்குவது மட்டுமே. சக்தி இளைஞர்களை இந்த விடயத்தில் கவனமாக இலக்கு வைப்பதை யாரும் தவறவிட்டிருக்க முடியாது.

எதை எதை எல்லாம் முன்வைத்துப் போராடி ஒரு ஈழத்தமிழ்ப் பண்பாட்டு

தொடர்ச்சி 11ம் பக்கம்

---

# குடா நாட்டு மக்களை விழுங்கத் தயாராகும் சுரண்டல் முதலைகள்

நற்போதைய புரிந்துணர்வு ஒப்பந்த சூழலில் யாழ் குடா நாடு மெல்லத் தலையை உயர்த்திப் பார்க்கிறது. தன்னைச் சூழ உள்ள அழிவுகளையும் அவலங்களையும் பற்றி அழுது புலம்பிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை என்பதையும் உணர்கின்றது. ஆனால் இருபது வருடங்களுக்கு முந்திய நிலை மீண்டும் வருமா? என்ற ஏக்கப் பெரு மூச்சு இடையிடையே வந்து கொண்டு தான் இருக்கிறது. இருப்பினும் இது வரை மனித நம்பிக்கை என்ற பற்று றுதியுடன் வாழ்ந்து வந்த குடாநாட்டு மக்கள் இழந்தவைகளை மீட்டுக் கட்டியெழுப்ப முடியும் என்ற எதிர்ப்பார்ப் புடன் இருக்கின்றனர்.

யாழ்-வவுனியா நெடுஞ்சாலைத் திறப்புடன் போக்குவரத்து பழைய நிலைமைக்கு வந்தால் தமது விவசாய உற்பத்திப் பொருட்களையும் மீன் வளத்தையும் தெற்கிற்கு அனுப்பலாம் என எதிர்பார்க்கின்றனர். ஆனால் ராணுவச் சோதனைகள் ஒரு புறம் புலிகள் இயக்க சோதனைகள் மறுபுறமாகவும் போக்குவரத்தில் தாமதங்களும் தடங்கல்களும் ஏற்பட வாய்ப்பு இருப்பதையிட்டும் மக்கள் கவலை கொள்ளவே செய்கின்றனர்.

இப்போது யாழ்ப்பாணத்தில் ஒரு கிலோ வெங்காயம் இருபது ரூபா. வாழைப்பழம் பத்து ரூபா, என்றால் அவை கொழும்பில் முறையே அறுபது, நாற்பது ரூபாவாக விற்பனையாகின்றன. அவ்வாறே கொழும்பில் இருந்து கப்பல் மூலம் எடுத்துச் செல்லப்படும் சகல பொருட்களிலும் கொள்ளை இலாபம் வைத்து மக்கள் வதைக்கப்படுகிறார்கள். கேட்டால் கப்பல் கூலி, பொருட்கள் சேவைகள் வரி, பாதுகாப்பு வரி எனக் கணக்குக் காட்டுகிறார்கள். எனவே ஏ9 பாதை திறக்கப்பட்டாலும் ஏதாவது சாட்டுப் போக்குச் சொல்லி விலை ஏற்றத்தை இறங்கவிடாது பார்த்துக் கொள்வதற்கு கொள்ளைலாப வர்த்தகர்கள் வியாபாரிகளுக்கு இயலக் கூடியதாகும்.

இது பற்றி எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்று தமிழின் பெயரால் அரசியல் வாழ்வு நடத்துவோருக்கு இம்மியளவும் அக்கறை கிடையாது. ஏனெனில் அந்தக் கொள்ளை லாப வர்த்தகர்களும் வியாபாரிகளும் தான் இந்தத் தன் மானத் தமிழர் தலைமைகளுக்கு வலது கை கொடுப்பதை இடது கை அறியாத வாறு வாரி வழங்கும் புரவலர்கள் என்பது இரகசியமானதல்ல. எனவே தான் விலை உயர்வுகள் பற்றி தமிழர் தலைமைகள் பேசுவதில்லை.

இவை ஒரு புறமிருக்க யாழ் குடாநாட்டிற்குள் என்ன வகையான முதலீடுகளைக் கொண்டு செல்லலாம் என்பதை ஆய்வு செய்யப் பல தனியார் நிறுவனங்கள் அங்கு தமது மோப்பம் பிடிக்கும் வேலைகளைச் செய்து வருகின்றன. குடாநாட்டின் ஒரே ஒரு பெரும் தொழிற்சாலையான காங் கேசன் சீமெந்து ஆலையை யப்பானிய பல்தேசிய நிறுவனம் ஒன்று ஒட்டு மொத்தமாகப் பெற்றுக்கொள்ள முன் வந்திருக்கிறது. அவ்வாறே காங்கேசன் துறைமுகத்தையும் அபிவிருத்தி செய்வதற்கு வெளிநாட்டு நிறுவனத் துடன் பேசப்படுகின்றது. முன்பு கைவிடப் பட்ட சீநோர் நிறுவனமும் செயற்பட இருப்பதாக அறியப்படுகிறது.

இவை போன்று மேலும் உல்லாசப் பயணத்துறையுடன் ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள், சர்வதேச விளையாட்டு மைதானம், சர்வதேசப் பாடசாலைகள் வரஇருக்கின்றன. யாழ் போதனா வைத்தியசாலையையும் ஏனைய அரசாங்க வைத்தியசாலைகளின் அபிவிருத்தி விரிவாக்கம் என்பனவற்றை மட்டுப்படுத்திக் கொண்டு பெரிய அளவிலான தனியார் மருத்துவமனை களை நிர்மாணிக்க உள்ளூர் வெளி நாட்டு மூலதனக் காரர்கள் காத்து நிற்கன்றனர் என்றும் அறிய முடிகின்றது.

இவற்றில் மிகப் பெரும் தொழிற் சாலைகள் திறக்கப்படுவதிலும் பார்க்க நடுத்தரத் தொழிற்சாலைகளை தோற்றுவிப்பதில் இந்திய-மேற்கு நாடுகளின் மற்றும் யப்பான், நோர்வே முதலீட்டாளர்கள் திரை மறைவு வேலைகளில் ஈடுபட்டும் வருகின்றனர்.

ஏற்கனவே இருந்துவந்த சிறிய நடுத்தர தொழிற்சாலைகள் அனைத்தும் அழிந்து இருந்த இடம் தெரியாது போய்விட்டன. அவற்றுக்கு நஷ்டஈடும் மீள்ளமைப்புக்கு உரிய வசதிகளும் செய்து கொடுக்கப் படவேண்டும். ஆனால் அரசாங்கம் அதில் கவனம் செலுத்தப் போவதில்லை. அதன் நோக்கங்கள் பல்தேசியக் கம்பனிகளையும், தனக்கு விசுவாசமான பெரு முதலாளிகளையும் அங்கு முதலிட வைத்து உலக மயமாதலுடன் வடக்கு கிழக்கையும் இணைத்துக் கொள்வதே யாகும். இதனையே அமெரிக்க உதவி ராஜாங்க அமைச்சர் தனது யாழ்ப் பாணப் பயணத்தின் போது தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார்.

பொருளாதார ரீதியில் குடாநாடு விரைவில் தனியார் மயத்திற்கு உள்ளாக்கப்பட்டு மக்களின் உழைப்பும், உற்பத்திகளும் பல துறைகளிலும் பல்தேசியக் கம்பனிகளால் சுரண்டி உறுஞ்சப்படப் போகின்றன. அதே வேளை கலாச்சாரப் பண்பாட்டுச் சீரழிவுகள் குடாநாட்டிற்குள் கொண்டு செல்லப்படப் போகின்றன.

அண்மையில் பிரதமரது யாழ் விஜயத்தின் போது மேற்கூறியவற்றுக்கான ஆரம்ப புள்ளிகளை அவதானிக்க முடிந்தது. மகா ராஜா நிறுவனத்தின் சக்தி ஒலி-ஒளி பரப்புகள் விரைவில் அங்கு அனுப்பி வைக்க ஏற்பாடு நடை பெறுகிறது.

லொத்தர் சபையினர் நடாத்திவரும் சீட்டிழுப்பு நிகழ்ச்சி யாழ் இந்துக்கல்லூரி மைதானத்தில் சிங்கக் கொடியின் கீழ் விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. அதில் பிரதமர் அமைச்சர்கள் அமெரிக்க உதவி ராஜாங்க அமைச்சர், கடற்படை கட்டளைத் தளபதி, என்போர் சீட்டிழுப்பில் கலந்து கொண்டனர். அந்த மேடையில் தமிழர் கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவர் வீ. ஆனந்த சங்கரி பா.உ. மிகுந்த குதூகலத்துடன் காணப்பட்டார். அமைச்சர் மகேஸ்வரன் ஒரு பொத்தானை அமுக்கி நிற்க அடுத்த பொத்தானை ஆனந்தசங்கரி ஆனந்தத்துடன் அமுக்கினார். இதன் மூலம் குடா நாட்டிற்குள் சகல சுரண்டல் முதலைகளும் வருவதற்கான பச்சைக் கொடி காட்டப்பட்டதாகவே எண்ண முடிகிறது. மேற்படி மேடையில் பல முதலாளிகளின் பிரசன்னத்தையும் காணமுடிந்தது.

பிரதமரின் இரண்டு நாள் விஜயத்தின் போது ஆனந்தசங்கரி அவர்கள் உடனிருந்து சகலதையும் ஒரு அமைச்சர் போன்று கவனித்துக் கொண்டார். அதேவேளை நல்லதொரு நகைச்சுவையையும் அவர் வெளி யிட்டார். தங்களது பாரம்பரியம் எந்த அமைச்சர்களையும் யாழ்ப்பாணத்தில் வரவேற்பதில்லை என்றும் கூறிக் கொண்டார். அவரது கூற்று உண்மை க்கு மாறானதாகும். ஐக்கிய தேசியக் கட்சி தவிர்ந்த அமைச்சர்களைத் தான் வரவேற்பதில்லை என்றே கூறியிருக்க வேண்டும். 1965ம் ஆண்டில் தமிழரசுக் கட்சி-டட்லி சேனநாயக்கா தலைமையி லான அரசாங்கத்தில் அமைச்சர் பதவி பெற்று அங்கம் வகித்தது. தமிழ் காங்கிரஸ் ஆதரவு கொடுத்தது. யாழ்ப் பாணம் வந்த பிரதமர் டட்லியை மாலை மரியாதை மேளதாளத்துடன் கொட்டும் மழையின் மத்தியிலும் வரவேற்புக் கொடுத்தவர்கள் தமிழரசு-காங்கிரஸ் கட்சிகளின் கனவான்கள் என்பதை மறைப்பது ஏன்? அந்தப் பாரம்பரியத்தின் தொடர்ச்சியாகவே இப்போதும் ரணில் விக்கிரமசிங்காவை ஆரத்தழுவி வரவேற்றிருக்கிறார்கள்.

வவுனியா-யாழ் நெடுஞ்சாலை திறக்கப் பட்டதும் மக்களைக் கொள்ளையிட இருக்கும் சகல சுரண்டல் முதலை களும் குடாநாட்டிற்குள் புகுந்து கொள் வார்கள். சமாதானத்தின் பெயரால் மக்கள் பலவழிகளாலும் பிழிந்தெடுக்கப் படப்போகிறார்கள். வர்த்தகர்கள், வியாபாரிகள், பெரு முதலாளிகள் என்போர் அங்கு படையெடுப்பது மக்களுக்கு வாழ்வழிக்கவல்ல. "செட்டி நட்டம் ஊர்மேல்" என்னும் முதுமொழி க்கு இணங்கவே யுத்த காலத்தில் சம்பாதித்தவர்கள். இனிமேல் சமாதான காலத்தை சும்மாவா விடப் போகிறார்கள்.

சமாதான சூழல் எவ்வளவு காலத்திற்கு நீடிக்கப் போகிறது என்ற ஏக்கத்துட னான கேள்வி ஒரு புறம் இருக்க சுரண்டல் முதலைகள் எந்தெந்த வழிகளில் ஊடுருவி மக்களை உறுஞ்சப் போகின்றன என்ற அச்சம் மக்கள் மத்தியில் ஏற்படவே செய்கிறது.

~ நமன் ~

படிப்பகம்

www.padippakam.com



# இந்துத்துவ பயங்கரவாதம்

பாரதிய ஜனதா கட்சி மத வெறியர் களது நிறுவனங்களை அத்திவாரமாகக் கொண்டு கட்டியெழுப் பப்பட்ட ஒரு கட்சி. அது 1947ல் இந்து முஸ்லிம் மோதல் வெடித்தெழுந்து இலட்சக் கணக்கான உயிர்கள் பலியாகக் காரணமாக இருந்த ஜன சங்கம் என்ற மதவெறிக் கும்பலின் நேரடியான அரசியல் வாரிசு என்பதை இந்திய மாக்ஸிய அரசியல் ஆய்வாளர் கள் கடந்த இருபது வருடங்களாகப் பண்ணிப் பண்ணிச் சொல்லி வந்திருக்கி றார்கள். என்றாலும், சந்தர்ப்பவாத அரசியல் வாதிகள் அதற்குச் செவிசாய்க்க வில்லை.

காங்கிரஸ் பாரதிய ஜனதாவின் இந்து மதவெறிக்கு எதிராக நிமிர்ந்து நிற்கத் திராணியற்று வளைந்து கொடுக்கி றதன் மூலம் 'பெரும்பான்மையைப் பகைக்காமல் இருக்க வழி தேடியது. இதன் மூலம் மதவெறியர்கள் மேலும் வலிமை பெற்றனர். இதனாலேயே 1992ம் ஆண்டு பாபர் மசூதியை இடித்துத்தள்ளும் அளவுக்கு பாரதிய ஜனதாவின் தலைவர்களும் பிற மதவெறியர் கூட்டங்களும் துணிந்தனர். இதற்கான தீவிர பிரசாரம் இரண்டு ஆண்டுகளாக முடுக்கிவிடப்பட்டு இருந்தபோதும் அரசு போதிய பாதுகாப்பு முயற்சிகளை எடுக்கவில்லை.

மசூதி இடிக்கப்பட்ட பிறகு, பம்பாயில் முஸ்லிம்கள் கடுமையான கண்டனம் தெரிவித்து ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தினார்கள். அதை ஒரு மதப் பூசலாக்குவதற்கு பா.ஜ.கட்சியும் பம்பாய் நகராட்சியில் அதிகாரத்திலிருந்த சிவசேனை என்கிற மராத்திய தேசியவாத அமைப்பும் உடனடியாகவே களத்தில் இறங்கின. இந்து, முஸ்லிம் கலவரம் என்ப பேரிடப்பட்டாலும் கொல்லப்பட்ட 5000 பேரில் ஏகம் பெரும்பான்மையினர் முஸ்லிம்களே.

இந்தியச் செய்தி நிறுவனங்கள் எல்லாமே முஸ்லிம்கள் மீது அரைக்கரை வாசி அல்லது அதிலும் கூடிய பழியைப் போட முன்வந்தன. பிரச்சினையின் காரணமோ, கலவரத்துக்கு வித்திட்ட வர்கள் யார் என்பதோ, கலவரத்தின் போது நடவடிக்கை எடுக்கத் தவறிய அரச நிருவாகத்தின் திட்டமிட்ட செயலின்மையோ அவர்களது கவனத்தைப் பெறவில்லை. முஸ்லிம் தீவிரவாதம் பற்றிய ஒரு பயங்கரமான படிமம் உருவாக்கப்பட்டது. இந்துக்கள் எனப்பட்டோர் பொறுமையாக அரசாங்கத்திடம் பொறுப்பை விடுமாறு கேட்கப்பட்டனர்.

அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப் பட்டுப் பத்தாண்டுகள் நெருங்குகின்றன. என்றாலும் அதற்குப் பொறுப் பான ஒருவரான எல்.கே.அத்வானி இன்றும் அமைச்சராக இருக்கிறார். விசாரணை களின் முடிவு எப்படி அமைந்தாலும் பாரதிய ஜனதாவோ காங்கிரசோ ஆட்சியில் இருக்கும் வரை, அத்வானி க்கு எதுவும் நடவாது. இதை மிகவும் உறுதியுடன் கூறலாம். ஏனெனில், பம்பாய்க் கலவரத்தில் வன்முறையைக் கிளறிவிட்டதாக நீதிமன்றம் குற்றங் கண்ட சிவசேனைத் தலைவர் பால் தக்கரே இன்னமும் சுதந்திர மனிதராக பம்பாய் இந்து மத வெறியர்களுக்கும் மராத்திய இனவெறி யர்களுக்கும் முடி சூடா மன்னராகத் தொடர்கிறார்.

இந்த விதமான பின்னணியிலேயே இந்திய மண்ணில் இஸ்லாமிய தீவிரவாதக் குழுக்கள் உருவாகி வளர்ந்தன. இவர்களுடைய முக்கிய முஸ்லிம் வாலிபர்களை அணி திரட்டுவது எளிதாக இருந்தது. சர்வதேச அளவில் கம்யூனிஸ விரோத நோக்கத்துக்காக ஒன்று திரட்டப்பட்ட பல வேறு இஸ்லாமிய தீவிரவாத அமைப்புக்கள் இவர்களுக்கு வழிகாட்டியாகின.

கம்யூனிய எதிர்ப்பு, முதலாளிய எதிர்ப்பு இஸ்லாத்தின் மூலமே விடுதலை என்ற கொள்கைகள் உண்மையில் இடது சாரிகளைப் பலவீனப்படுத்த உதவிய அளவுக்கு மற்ற விடயங்களில் வெற்றி பெறவில்லை. இஸ்லாமிய தீவிரவாதம் எவ்வளவு துாரத்துக்கு முஸ்லிம்களின் விடுதலையை வென்றெடுக்கும் என்பதற்கான வரலாற்று அனுபவம்



மான குறையாடு ஏதெனில், இணையக் கூடிய. இணைய வேண்டிய நல்ல சக்திகளிடமிருந்து முஸ்லிம்களைத் தனிமைப்படுத்தும் ஒரு போக்காகும். முஸ்லிம்களுக்கு விரோதமான பாரபட்சமும் திட்டமிட்ட வன்முறையும் காரணமாக வெறுப்படைந்திருந்த புறக்கணிக்கப்பட்டது. தீவிரவாதிகள் சிலரது வன்செயல்களால் அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர். மறுபுறம், முஸ்லிம் தீவிரவாதத்தைக் காரணங் காட்டியே. முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறையை "இந்து" வணிகர்கள் கோவையில் ஐந்து ஆண்டுகள் முன்னம் கட்டவிழ்ந்து விட்டனர்.

மத வேறுபாடின்றி மக்கள் வாழ்ந்த பகுதிகளிலெல்லாம் மதப் பூசல்களைக் கிளறிவிட்டதன் மூலம் முன்னர் கால்வைக்க முடியாத இடங்களில் எல்லாம் பி.ஜே.பி. வேர் கொண்டது. இதற்குத் திராவிட இயக்கங்கள் தமிழகத்தில் உதவின. தெலுங்கு தேசம் கட்சியைத் தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்த சந்திரபாபு நாயுடு அங்கே பாரதிய ஜனதாவை வளர்க்க உதவினார். கேரளத்தில் காங்கிரஸ் – கம்யூனிஸ்ட் மோதலும் மாக்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்குள் இருந்த குறைபாடுகளும் தேர்தல் அரசியலும் மதவாதக் குண்டர் படைகள் வளர்வதைத் தடுக்க இயலாமற் செய்தன.

கடந்த பத்தாண்டுகட்குள், பி.ஜே.பி. ஒரு வலிய அரசியற் கட்சியாகி மூன்று முறை பாராளுமன்றத்தில் அதிகாரத்தைப் பிடித்து, மூன்றாவது முறை உறுதியான ஒரு ஆட்சியை நடத்துகிறது. இதற்கு அக்கட்சி தனது தீவிர மதவெறிக் கொள்கைகள் சிலவற்றைக் கைவிட்டது போல பாசாங்கு செய்ய நேர்ந்தது. ஏனெனில் பாராளுமன்றத்தில் ஒற்றைப் பெரும்பான்மையுடைய கட்சியாக பி.ஜே.பி. அமைவது இப்போதைக்கு இயலாது. எனவே அது 'இந்துத்துவக்' கொள்கையை ஏற்காத கட்சிகளையும் பயன்படுத்த வேண்டியுள்ளது.

அதே வேளை, இந்தத் தோழமைக் கட்சிகளின் இந்துத்துவ நிராகரிப்பு போலியான ஒன்று. வெளிவெளியாக மதவாதம் பேசாமல் பி.ஜே.பி. எதைச் செய்தாலும் பொறுத்துப் போக அவர்கள் ஆயத்தம். தமது மாநிலங்களில் தமது அதிகாரத்தை வலுப்படுத்த மத்தியில் தமக்கு ஒரு வலிய நண்பன் தே அது பி.ஜே.பி.யானாலென்ன, ஹி போல ஒரு பாஸிஸவாதியானாலெ எல்லாமே ஒன்று தான்.

இந்த விதமான சூழ்நிலையிலே பி.ஜே.பியின் உண்மையான எசமா களான விஸ்வ ஹிந்து பரி ஆர்.எஸ்.எஸ். எனப்படும் ராஷ்ட் ஸ்வம்சேவக் சங்கம், சங் பரிவ எனப்படும் சங்கப் பரிவாரம் பஜ்ரங் என்றவாறுள்ள பலவேறு அமைப்புக் தங்கள் செயல்களை விரிவுபடுத் கொண்டன. இந்த அமைப்புக்க கிடையிலும் அவற்றுக்கும் பி.ஜே.பிக் இடையிலும் கருத்து வேறுபாடு இருக்கலாம். ஆனாலும் நோக்கத் பொறுத்தவரை எல்லாமே ஒன்று தா அவை செயற்படுகிற களங்களும் அ செய்கிற காரியங்களின் தன்மை அவற்றின் நடைமுறைகளி வேறுபாடுகளைக் காட்டலாம். சி முரண்பாடுகளை உருவாக்கலா எனினும் இந்துத்துவம் எனப்படும் இ – இந்தி – சாதிய மேலாதிக்க இந்தியாவில் பூரணமான அதிகாரத் பிடிக்கிற வரையில், இவர்களிடை முரண்பாடுகளைவிட ஒற்றுமை மேலோங்கி நிற்கும். இந்த பின்னணியிலேயே இன்று பி.ஜே. ஆட்சியாளர்கட்கும் விஸ்வ ஹிந் பரிஷத்திற்கும் உள்ள பிணக்கை பார்க்க வேண்டும்.

இனி பெப்ரவரி மாத இறுதியில் நடந் தீவைப்புக்கு வருவோம். இதை செய்தவர்கள் முஸ்லிம் தீவிரவாதிக என்று சந்தேகிக்கப்படுகிறது. எனினு யார் இதற்குப் பொறுப்பு என்ப இன்னமும் நிச்சயமில்லை. அயோத்தியி கோயில் கட்ட முன்னேற்பாடுகள் விஸ் ஹிந்து பரிஷத் எனப்படும் சர்வதேச தொடர்புகளையுடைய சர்வதேச இந் மாமன்றத்தின் துாண்டுதலிலு தலைமையிலும் நடைபெற்றன. இவை பெப்ரவரி நடுப்பகுதி முதல் மும்முரமாகின. பெப்ரவரி இறுதிவாக்கில் இந்த அமைப்பின் கட்டுப்பாடுக்குள் உள்ள 'தொண்டர்கள்' திரும்பிச் சென்று கொண்டிருந்த 'சபர்மதி எக்ஸ்பிரஸ்' புகையிரத வண்டிக்கு. கோத்ரா என்ற ஊருக்கு அருகே.

தொடர்ச்சி 11ம் பக்கம்

# இசுலாமிய சர்வதேசியம் ஒரு மாயமான்



உலகெங்கும் பல்வேறு அமைப்புகள் நடத்தும் அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப் பாட்டங்களுக்கும் இஸ்லாமிய அமைப்பு கள் நடத்தும் ஆர்ப்பாட்டங்க ளுக்கும் அடிப்படையில் வேறுபாடு உண்டு.

ஆப்கான் எனும் ஏழைநாட்டின் மீதும் அதன் மக்கள் மீதும் அமெரிக்க வல்லரசு தொடுக்கும் அநீதியான ஆக்கிரமிப்பு யுத்தம் என்ற காரணத்திற்காகத்தான் கம்யூனிஸ்டுகளும் ஜனநாயகவாதிகளும் இந்தப் போரை எதிர்க்கின்றனர். கொல்லப்படும் மக்களின் மதம் என்ன என்று யாரும் கவலைப்படவில்லை.

அனால், முஸ்லிம் மதவாத அமைப்புகளோ, இஸ்லாத்துக்கெதிராக அமெரிக்கா தொடுத்திருக்கும் போர் என்றும், அதற்கெதிரான தமது புனிதப் போரில் உலக முஸ்லம்கள் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்றும் அறை கூவுகின்றனர்.

"முஸ்லிம்களே, ஜிகாத்துக்குத் தயாரா குங்கள்" என்ற டெல்லி ஜும்மா மசூதியின் இமாம் அறைகூவல் விட்ட போது அதை எதிர்த்துக் கண்டித்தார் நடிகை ஷபனா ஆஸ்மி. ஸ்டார் டி.வி. நடத்திய விவாதமொன்றில் ஷபனா ஆஸ்மியை 'கூத்தாடி – விபச்சாரி' என்ற பொருள்பட பகிரங்கமாக ஏசினார், இமாம்.

வரவேற்கத்தக்க நல்ல வசவுதான்! காசுக்காகத் தன் உடலை விற்பதுதான் விபச்சாரம் என்றால், டாலருக்காகத் தன்னையும் தன் நாட்டையும் சேர்த்து விற்றுக் கொண்ட தலிபான், பின் லாடன், சதாம், சவுதி ஷேக்குள் ஆகியோரைப் பற்றித்தான் நாம் முதலில் புலன் விசாரனை நடத்த வேண்டும்.

ஆனால் முஸ்லிம் அமைப்புகளோ, பின்லாடனையும் தாலிபானையும் இஸ்லாத்தைக் காக்க வந்த மாவீரர்களாகச் சித்தரிக்கின்றனர். வளைகுடாப் போரின்போது இந்த மாவீரன் பட்டத்தை சதாம் உசேனுக்கு வழங்கியிருந்தனர்.

திப்பு சுல்தான், பேகம் ஹசரத் மகல், இஷ்பதுல்லா கான், ஓமர் முக்தர் போன்ற எண்ணற்ற முஸ்லிம்களை மாவீரர்கள் என்று உலகமே கொண்ட ாடுகிறது. அவர்கள் முஸ்லிம்கள் என்பதனால் அல்ல, அவர்கள் அப்பழுக்கற்ற ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராளிகள் என்பதனால் நாம் போற்றுகிறோம். நம் வழிகாட்டிகளாக அவர்களை மதிக்கின்றோம்.

அனால், சதாமும் பின் லாடனும் தாலிபானும் எப்பேர்ப்பட்டவர்கள்? அமெரிக்க அடிவருடித்தனத்தில்' தான் இவர்களது அரசியல் வாழ்க்கையே தொடங்குகிறது.

நாடுகளை இஸ்லாம், கிறித்தவம் என்று மதத்தின் அடிப்படையில் பிரிப்பதே ஒரு மோசடியாகும். கொழுத்த பணக்கார நாடான சவூதியும் கஞ்சிக்கே வழியில்லாத வங்காள தேசமும் முஸ்லிம் நாடுகள், வல்லரசான ஜப்பானும் வறுமையால், விபச்சாரம் விடுதியாகிப் போன தாய்லாந்தும் பௌவுத்த நாடுகள், உலக மேலாதிக்கவாதி அமெரிக்காவும் அதனால் நசுக்கப்படும் நிகராகுவாவும் கிறித்தவ நாடுகள் என்று வகை பிரிக்க முடியுமா?

இவ்வாறு பிரிப்பது அமெரிக்காவைப் போன்ற ஏகாதிபத்திய நாடுகளுக்குத் தான் பெரிதும் பயன்படும் என்பதை சொல்லத் தேவையில்லை. பணக்காரன் ஏழையைப் பார்த்து நீயும் நானும் ஒரு சாதி என்பதும், முதலாளி தொழிலாளி யிடம் நீயும் நானும் ஒரு மதம் என்று சொல்வதும் சொத்தைப் பிரித்துக் கொடுப்பதற்கல்ல. பாதுகாத்துக் கொள்வதற்குத்தான். "நீயும் நானும் முசுலிம் நாடு" என்று பேசுவதும் இந்த ரகம்தான்.

இதற்கு மேலே ஒரு படி சென்று முஸ்லிம்களுக்கு தேசமில்லை என்கிறார்கள் மதவெறியர்கள். "காசுமீரி இனம், பண்பாடு என்று எதுவும் தனியாகக் கிடையாது என்றும் இஸ்லாமிய சர்வதேச இயக்கத்தின் அங்கம் என்ற முறையில் தலிபான்களை காஷ்மீருக்கு வரவேற்பதாகவும்" (இந்து– 28.10.2001) இஸ்லாமியப் பெண்கள் அமைப்பின் தலைவி அந்த்ரபி பேட்டியளிக்கிறார்.

சமீபத்தில் பாரதீய ஜனதா அரசால் தடை செய்யப்பட்டிருக்கும் சிமி (SIMI) என்ற அமைப்பு, "ஜனநாயகம், மதச்சார்பின்மை, தேசியம், பல கடவுள் வழிபாடு, சோசலிசம்" ஆகியவற்றை ஒழிப்பதுதான் எங்கள் கொள்கை என்று பகிரங்கமாகப் பிரகடனம் செய்கிறது. "இஸ்லாமிய ஆட்சி நடைபெறாத நாட்டில், இறைவனின் சட்டமின்றி வேறு சட்டத்திற்குப் பணிந்து வாழும் முஸ்லீம்கள் நரகத்திற்குச் செல்வார்கள்" என்று கூறும் குரான் வசனத்துடன் தொடங்குகிறது சிமியின் இணையத் தளம்.

சிமி மீதான தடையை ஜனநாயக வாதிகள் எவ்வாறு எதிர்ப்பது? "பஜ்ரங் தள் அமைப்பைத் தடைசெய்யாத போது சிமிக்கு மட்டும் ஏன் தடை? என்று இந்துத்துவ அரசைக் கண்டிக்க மட்டும்தான் முடியும்.

இத்தகைய மதவாத அமைப்புகள் தங்கள் நடவடிக்கை மூலம் சிறுபான்மை யினர் உரிமைக்குக் குரல் கொடுக்கும் மதசார்பற்ற, ஜனநாயக சக்திகளை இந்து பாசிஸ்டுகளிடம் காவு கொடுக்கிறார்கள். அமெரிக்க முதல் ஆஸ்திரேலியா வரை பல்வேறு உலக நாடுகளிலும் ஆப்கன் மக்களுக்காகக் குரல் கொடுக்கும் இஸ்லாமியரல்லாத மக்களையும், அவர்களது ஜனநாயக உணர்வையும் கொச்சைப்படுத்து கிறார்கள்.

இஸ்லாமிய சர்வதேசியம் பேசுவோர் ஒரு உண்மையைத் தெரிந்து கொள்ள ட்டும். உலக வர்த்தக மையமும் பென்ட கனும் தகர்க்கப்பட்ட நியூயார்க்கிலும் வாஷிங்டன்னிலும் போர் எதிர்ப்பு ஆர்ப் பாட்டங்கள் செப்டம்பர் 20ம் தேதியே துவங்கிவிட்டன. அதாவது இஸ்லாமிய சர்வதேசியம் விழித்துக் கொள்ளு முன்பே தொழிலாளி வர்க்க சர்வ தேசியம் விழித்துக் கொண்டு விட்டது. அமெரிக்க அரசின் போர் வெறிப் பிரச்சாரத்தையும் மீறி பல்லாயிரக் கணக்கில் திரண்டவர்கள் கம்யூனிஸ்டு கள், இடதுசாரிகள், ஜனநாயக வாதிகள்.

தலிபானின் மொழியில் இவர்களுடைய பெயர்கள் காஃபிர்கள். ஈரான் முதல் இந்தோனேசியா வரை பல்வேறு நாடுகளிலும் இஸ்லாமிய ஆட்சிகளால் வேட்டையாடியக் கொல்லப்பட்டவர் களின் வாரிசுகள்தான் போரை எதிர்த்துப் போராடுகிறார்கள்.

காஃபிர்கள் 'முசுலீம்களுக்காக'க் குரல் கொடுக்கத் தொடங்கிய பின்னும், ஆப்கன் குழந்தைகள் அமெரிக்க ஏவுகணைகளுக்குப் பலியாகி சிதறத் தொடங்கிய பின்னரும், இஸ்லாத்தின் பிறப்பிடத்திலிருந்து, இஸ்லாமிய சர்வதேசியத்தின் பிறப்பிடத்திலிருந்து ஒரு சத்தத்தையும் காணோம். இஸ்லாத்தை உலகெங்கும் பரப்ப ஆண்டுக்கு 5 பில்லியன் டாலர் செலவிடுகிறாராம் சவூதி அரசர். எப்படி இருக்கிறது இஸ்லாமிய சகோதரத துவம்?

இஸ்லாமிய அமைப்புகள் ஆத்திரப்பட்டுப் பயனில்லை. தங்கள் கோபத்தை அவர்கள் சவூதி அரச குடும்பத்தின் மீது காட்டட்டும். ஏழை முஸ்லீம்களை ஜமாத்தில் விசாரிப்பது போல சவூதி மன்னரையும் ஜமாத்தில் வைத்து விசாரிக்க முடியுமா என்று முயன்று பார்க்கட்டும். வர்க்க அரசியலின் உண்மை அப்போது விளங்கும்.

இப்படித்தான் 1987 இல் ஹஜ் யாத்திரை சென்ற ஈரானிய முஸ்லீம்கள் அங்கே எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் செய்தார்கள். நிராயுதபாணிகளான 400 யாத்திரீகர் உடனே சுட்டுக்கொல்லப் பட்டனர்.

இன்று சவூதி அரச குடும்பத்தை அமெரிக்க கைக் கூலிகள் என்று சாடும் பின்லாடனுக்கு அன்று நடந்த இந்தச் சம்பவம் தெரிந்திருக்காது போலும். அவர் அப்போது ஆப்கானில் அமெரிக்க காசில் புனிதப் போர் அல்லவா நடத்திக் கொண்டிருந்தார்.

• சூரியன

**நன்றி : புதிய கலாச்சாரம்**

படிப்பகம்

www.padippakam.com



# தமிழ்மாறன் யாருக்கு சேவகம் செய்கிறார்?

றன் என்றொரு சட்டக்கல்விய பற்றி மக்கள் நடவடிக்கை களுக்கு கவலை இருக்க து. பெற வேண்டிய பட்டங்களை வரை சமூக அக்கறை என்ப ாம் தேவையற்ற விடயங்களாக வோர் அவற்றை பெற்றப் பிறகு அங்கீகாரத்தை பெறாமல் டியாது என்பதற்காக மெல்ல அவர்களது 'மேதாவிலாசத்தை' படுத்தி தமது இருப்பை ாத்துக் கொள்ள முயற்சிப்பர்.

முன்னணிக்கும் விடுதலை புலிகள் கத்திற்கும் ஒரு சுமுகமான துணர்வு ஏற்படும் சூழ்நிலை பட்டதிலிருந்து தமிழ்மாறன் சாரிகள் தமிழ் மக்களின் உரிமைப் ாட்டத்திற்கு எவ்வித பங்களிப்பை சய்யவில்லை என்று குற்றம் சாட்டி கசரி பத்திரிகையில் எழுதத் டங்கினார். தமிழீழ விடுதலை ள் இயக்கமே தமிழ் மக்களின் பிரதிநிதி என்று எழுதினார். ார் தமிழர் விடுதலைக் கூட்டணி து ஒரு மிதவாத இயக்கமன்று றும் அதுவும் தீவிரவாத அமைப்பு என்றும் எழுதினார். இவை லாம் சில பிசகுகளை கொண்டி , போதும் தமிழீழத்திற்கு ஆதரவான லப்பாட்டிலிருந்து எழுதப்பட்ட வே வெளியிடப்பட்டன.

றைய சர்வதேச சூழ்நிலையில் குறிப் விடயங்களை விடுதலை புலிகள் க்கமும் ஏற்றுக்கொள்ள நிர்ப்பந்திக் ட்டுள்ளது என்ற தோரணையில் சில யங்களை வெளிப்படுத்தியுள்ளார். ன் வளர்ச்சியாக 'நிகரி' என்ற திரிகையில் 'சுயநிர்ணய உரிமை' றால் என்ன என்று எழுதிவரும் டர் கட்டுரைகளின் மூலம் அவர் ன்மையான சுயநிர்ணய உரிமைக்கு ரான கருத்துக்களை நாசூக்காக ளியிட்டுவருவது தெரிகிறது. னின் கூறியபடி சுயநிர்ணய உரிமை நக்க வேண்டுமென்பதில்லை. மெரிக்க ஜனாதிபதியாக இருந்த ரோ வில்சனின் கருத்துப்படியும் நியர்ணய உரிமை அமையலாம் ன்று அவர் கூறுகிறார்.

வரின் கருத்துப்படி "சுயநிர்ணய ரிமை எனபது ஒவ்வொரு அரசினதும் க்கள் குழுக்கள் தமது அரச அதிகாரி ளையும் அரசியல் தலைவர்களையும் தந்திரமாக தாமே தேர்ந்தெடுக்கும் ரிமையைக் கொண்டிருக்க வேண்டும் ன்பதாகும் அதாவது சுயநிர்ணய ரிமை என்றால் சுயஅரசாங்கம் (Self-overnment) என்று பொருள்படும்" ன்பதாகும். வில்சனின் கருத்தை டிப்படையாகக் கொண்டே மேற்படி றுகிறார்.

டுதலைப் புலிகள் இயக்கம் முதல் னைவரும் தமிழ் மக்களின் சுயநிர்ணய ரிமையை அடிப்படையாக கொண்ட அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் ன்று கூறுகின்ற வேளையில் யநிர்ணய உரிமை என்பதை மேற்படி கவும் கொச்சைப்படுத்தி விளங்கப் டுத்தும் தமிழ்மறானின் உள்நோக்கம் ன்ன என்பதை அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். இலங்கையி ழுள்ள அமெரிக்க தூதுவர் ஆஸ்லி வில்லிஸ்ஸும் இலங்கைக்கு வந்திருந்த அமெரிக்க பிரதி வெளிவிவகார அமைச்சர் கிறிஸ்டினா ரொக்காவும் தெரிவித்துள்ள கருத்துக்களின்படி மிகவும் தாழ்ந்த நிலைமையிலான தீர்வை இலங்கை அரசாங்கம் முன்வைத்தாலும் அதனை விடுதலை புலிகள் இயக்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை நிர்ப்பந்திப்பதாகவே அமைந்துள்ளன.

இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் மாக்சிஸ்ட்டுகள் முன்வைத்த சுயநிர்ணய கோட்பாட்டிற்கு மாறாக வில்சன் முன்வைத்த யோசனைகளை சுயநிர்ணய உரிமை என்று ஏற்றுக் கொள்ளலாம் எனக் கூறுவது அமெரிக்காவின் நிர்ப்பந்தத்தினால் ஏதாவது தீர்வு தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டால் அதனை வில்சனின் கூற்றுப்படி சுயநிர்ணய உரிமைதான் என்று திருப்திக்கொள்ள வேண்டும் என்ற எதிர்பார்ப்பினை தமிழமாறன் வெளிப்படுத்துவதாகவே இருக்கிறது. ...வது நன்கு ஸ்தாபிதமாகி யுள்ள பௌத்த சிங்கள பேரினவாத அரச கட்டமைப்பை எவ்வித கேள்விக் கும் ...படுத்தாது. அந்த அரசின் கீழ் இருக்கும் மக்கள் குழுவான தமிழ் மக்கள் அவர்களுக்கே சுய அரசாங்க மொன்றை ஏற்படுத்திக் கொள்ள இடமளிக்கப்பட்டால் போதுமானது என்பதாகும்.

தற்போதிருக்கும் மாகாணசபை அமைப்பின் கிழ் அதிகாரத்தை தாம் விரும்புவர்களிடம் ஒப்படைக்க தமிழ் மக்கள் உரித்துடையவர்கள். உள்ளூராட்சி சபை சட்டத்தின்படி வடக்கு கிழக்கு பிரதேச சபைகளின், நகர, மாநகர சபைகளின் அதிகாரமும் விரும்பியவர்களிடம் ஒப்படைக்க முடியும் அதன்படி பார்த்தால் தற்போதைய பிரதேச சபைகளை ஆழ்வதும் சுயநிர்ணய உரிமை ஆகுமா?

தமிழ் மக்கள் ஒரு தேசிய இனமேயன்றி பௌத்த சிங்கள பேரினவாத அரசின் கீழிருக்கும் வெறும் மக்கள் குழுவல்ல என்பதையும் தமிழ்மாறன் தனது வியாக்கியானம் மூலமாக மறந்து விட்டாரா?

அவரின் தீவிரவாத கட்சியான தமிழர் விடுதலை கூட்டணி 1980களில் தனிநாட்டிற்கு மாற்று தீர்வாக மாவட்ட அபிவிருத்தி சபையை ஏற்றுக் கொண்டது போன்று 'வில்சன்' கூறுகின்ற சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான தீர்வை தமிழ்மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என கொள்கை வகுத்துக் கொடுக்கிறாரா? அ... கூட்டமைப்பை இப்போது தமிழ்மாறன ஐ.தே.முன்னணிக்கு ஆற்றப்போகிறாரா?

முன்பு மாவட்ட சபையை ஏற்றுக் கொள்ளச் செய்வதற்கு ஜே.ஆர். செல்வநாயகத்தின் மருமகனான ஏ.ஜே.வில்சன் மூலம் அழுத்தம் கொடுத்ததை இவ்வேளை நினைவுபடுத்திக் கொள்ளல் வேண்டும்.

இலங்கை அரசாங்கங்களுக்கும் வெளிநாட்டு சக்திகளுக்கும் சேவை செய்யவென யாழ்ப்பாண பல்கலைக் கழக ஆசிரியர்கள் என்றபேரில் சில படித்த தமிழர்கள் இயங்கிய போதும் தமிழ் மக்கள் போராட்டம் தடுத்து நிறுத்தப் படவில்லை. அதேபோன்று தற்போது அமெரிக்காவின் தேவைக்கு

**அமெரிக்காவின் தேவைக்காக சுயநிர்ணய உரிமை பற்றி மொட்டை நியாயம் பேசுவது தமிழ் மக்களுக்குச் செய்யும் துரோகமாகும்.**

ஏற்ப உண்மைகளை மறைத்து, சுயநிர்ணய உரிமை, தீவிரவாதம் போன்றவற்றுக்கு புதுப்புது வரைவிலக் கணங்களை கொடுக்க சில அறிஞர்கள் திடீரென முளைத்தாலும் தமிழ் மக்கள் பின்வாங்கப் போவதில்லை என்பதை வரலாறு எடுத்துக் காட்டியுள்ளது.

நேற்று பெய்த சமாதான மழைக்கு முளைத்த தமிழ்மாறன் போன்ற தமிழ் புத்திவான்களின் பொய்யும் புரட்டும் எட்டு நாளைக்கு முன்பதாகவே அம்பலமாகிவிடும்.

சுயநிர்ணய உரிமை என்பது மாக்சிஸ்டுகள் முன்வைத்த கோட்பாடு என்பதால் அதை உச்சரிக்க விரும்பாத பழைமைவாத தமிழ் தலைவர்களுக்கு சளைத்தவரல்ல என்று பறைசாற்றுவது மட்டுமன்றி மாக்சிஸ்ட்டுகள் மட்டும் சுயநிர்ணய உரிமை பற்றிக் கூறவில்லை எகாதிபத்தியவாதியான அமெரிக்க முன்னாள் ஜனாதிபதியாகவிருந்த வூட்ரோ வில்சனும் சுயநிர்ணய உரிமை பற்றி கதைத்துள்ளார் என்று பொதுமைப்படுத்தி புதுக்கதை புனைந்து காட்டுகிறார் தமிழ்மாறன்.

வில்சன் அடிப்படையில் சுயநிர்ணய உரிமைக்கு எதிரானவர் மட்டுமல்ல முதலாம் உலக யுத்தத்தின் பிறகு தேசங்களின் வரைவிலக்கணம் பற்றி சர்வதேச ரீதியில் கவனம் செலுத்தப்பட்ட போது மாக்சிசவாதிகள் முன்வைத்து நடைமுறைப்படுத்திக் காட்டிய தேசங்களினது சுயநிர்ணய உரிமையை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்ளக் கூடாது என்பதற்காகவே வில்சன் பதிலீட்டு யோசனைகளை முன்வைத்திருந்தார். அவை அன்று ஏற்றுக்கொள்ளப்படவும் இல்லை. தேசங்களினதும் தேசிய இனங்களினதும் பிரிந்துபோகும் உரிமை உள்ளடங்கலான சுயநிர்ணய உரிமையை வில்சன் ஏற்றுக்கொண்டிருக்கவும் இல்லை. அரசுகளின் கட்டமைவில் எவ்வித மாற்றமும் ஏற்படாத சில உரிமைகளையே வில்சன் முன்வைத்தார், முதலாம் உலக

**இ. தம்பையா**
தேசிய அமைப்பாளர்
புதிய ஜனநாயக கட்சி

யுத்தத்தின் பின்னர் 'நாடுகளின் கட்டமைவை' குறியாகக் கொண்டு அவர் முன்வைத்த யோசனைகள் அப்போது நிராகரிக்கப்பட்டன. இரண்டாம் உலகயுத்தத்தை அடுத்து ஐ.நா.சபை மாக்சிஸ்ட்டுகள் முன்வைத்த சுயநிர்ணயத்தையே அடிப்படையாக ஏற்று அங்கீகரித்தது.

ஐக்கியப்பட்டு ஒரு நாட்டிற்குள் சுயநிர்ணய உரிமையை பிரயோகிப்பதற்கான அடிப்படையை ஸ்டாலினே முன்வைத்தார். அதாவது பிரிந்து போவதற்கான சுயநிர்ணய உரிமையை மிகவும் சுருக்க விளக்கமாகவே முன்வைத்தார். அது சீனாவில் வளர்த்தெடுக்கப்பட்டு பிரிவினை இல்லாது 'சமத்துவ அடிப்படையில் தேசிய இனங்களின் உரிமைகள் பாதுகாக்கப் பட்டிருக்கின்றன சோஷலிஸ நிக்கரகுவாவில் ஐக்கியப்பட்ட நாட்டிற்குள் தேசிய இனங்களின் உரிமைகள் உறுதி செய்யப்பட்டன. அந்த அடிப்படையை 1980களின் பிற்பகுதியில் ஐ.நா.சபை ஏற்று அங்கீகரித்துள்ளது.

ஆனால் தமிழ்மாறன் கூறும் ஏகாதிபத்திய வில்சனின் சுயநிர்ணய உரிமையின் உள்வாரிப் பரிமாணம் என்பது மேற்குறிப்பிட்டது போன்று உயர்வானதல்ல, அது வெறும் வாக்களித்தும் தேர்ந்தெடுக்கும் உரிமைக்கும் ஒப்பானது.

சுயநிர்ணய உரிமை என்பது முதலாளித்துவ அமைப்பிற்குள் தேசிய இனங்களுக்கு இருக்கும் ஜனநாயக உரிமை ஆகும். அந்த அடிப்படையி லேயே லெனின் சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டை முன்வைத்தார். 1917 ஆம் ஆண்டு புரட்சிக்கு பிறகு சோஷலிஸ ஆட்சிக்கு கீழ் தேசிய இனங்களின் உரிமைகள் பற்றி போல்ஷிவிக் கட்சி பாரிய கவனம் செலுத்தியது. ஆகவே முதலாளித்துவ அமைப்பிற்குள் சுயநிர்ணய உரிமையும் சோஷலிஸ அமைப்பிற்குள் சுயநிர்ணய உரிமை பற்றியும் மாக்சிஸ்ட்டுகள் விரிவாக பகுப்பாய்ந்துள்ளனர்.

லெனின் முன்வைத்த சுயநிர்ணய கோட்பாடு சோஷலிஸ அடிப்படையை கொண்டதென்று கூறுவதால் தமிழ்மாறன் முதலாளித்துவ அமைப்புக்கு வூட்ரோ வில்சனின் சுயநிர்ணயக் கோட்பாடு பொருத்தம் என்பதை அழுத்த முற்படுகிறார். அது முதலாளித்துவ சமூகத்தில் பிரயோகிக்கப்பட வேண்டும் என்றே லெனின் அதனை முன்வைத்தார். அதேபோன்று சோஷலிஸ அமைப்பில் அதன் விரிவாக்கம் பற்றியும் அவர் கவனம் செலுத்தினார். எனவே முதலாளித்துவ அமைப்பில் சுயநிர்ணயம் பற்றி முதலாளித்துவ வாதிகள் எவரும் முன்வைக்கவில்லை. வூட்ரோ வில்சன் முன்வைத்ததாகக் கூறுவது தற்போதைய ஏகாதிபத்திய எஜமானர்களுக்காக தமிழ்மாறன் செய்ய முயற்சிக்கும் புதிய புனைவாகும்.

அமெரிக்க ஏகாதிபத்தியம் சில இடங்களில் மட்டுமே சுயநிர்ணய உரிமையை பிரியோகிக்க அனுமதித்துள்ளது. அதற்கு சில இடங்களில் சமஷ்டி, சுயாட்சி போன்றன உறுதி செய்யப் படுவதில் கூட அமெரிக்காவிற்கு விருப்பமில்லை. அது அடக்குகின்ற அரசாங்கங்களின் பக்கம் நின்று சுயநிர்ணய உரிமை போராட்டத்தின் நியாயமான தன்மையை மறுத்தும் வருகிறது. அத்தகைய நிலைப்பாட்டிற்கு சேவகம் செய்யும் வகையில் தமிழ்மாறன் எழுதி வருகிறார். இரண்டு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டே அண்மைக்காலமாக அவர் எழுதிவருகிறார் என்பது தெரிகிறது. மாக்சியவாதிகளை விட முதலாளித்துவ வாதிகளும் சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டை முன்வைத்திருப்பதாக காட்டுவதும் முதலாளித்துவ சுயநிர்ணயம் மாக்சிச சுயநிர்ணயத்திலிருந்து வேறுபட்டதாகக் காட்டுவதும் ஒரு நோக்கமாகும். இரண்டாவது சுயநிர்ணயம் என்பதில் உள்ளடங்கும் அடிப்படை உரிமைகளை மறுத்து மேலோட்டமான வாக்குரிமை, அதிகார பரவலாக்கம் போன்ற நிலைக்கு சுயநிர்ணய உரிமையை மலினப்படுத் துவதாகும். அதற்காகவே அவர் சர்வதேச சட்டத்தையும் இன்டர்நெட் பாடங்களையும் ஆதாரமாகக் கொள் கிறார். மலசல கூடங்களை அமைக்கும் பிரதேச சபைகளுக்குரிய அதிகாரங் களையே சுயநிர்ணய உரிமை என்று கூறும் அளவிற்கு அவர... வாதங்கள் விரிவடைய இடமுண்டு. ஐக்கியப்பட்ட நாட்டிற்குள் தேசிய இனமொன்றின் உரிமை என்பதற்கு மத்தியில் அரசாங்கத்தை தீர்மானிக்கும் உரிமை மட்டுமல்ல ஏனைய இனங்களுடனான சமத்துவத்துடன் பிரதேசத்தில் சுயாட்சி (Self Rule)யும் அடிப்படையா கின்றது. இதற்கு குறைந்த எதுவும் ஒரு நாட்டினுள் சுயநிர்ணய உரிமையை பிரயோகிப்பதாகாது. இதில் சுயாட்சி என்பது மக்களிடம் அதிகாரங் கள் கொண்டு செல்லப்பட்டு மக்கள் தங்களை தாங்களே ஆளும் உரிமையை குறிக்குமேயன்றி அவர்களின் தலைவர்களையும் அதிகாரிகளையும் தேர்ந்தெடுக்கும் வாக்குரிமைக்கு மட்டும் வரையறுக்க முடியாது.

பிரிவினையுடன் கூடிய சுயநிர்ணயம் என்றாலும் சரி பிரிவினையில்லாத சுயநிர்ணயம் என்றாலும் சரி ஏகாதிபத்தியத்திற்கும் முதலாளியத்துவத்திற்கும் பெரும் அச்சுறுத்தலாகிவிட்டது. அதனால் மாக்சியவாதிகளால் முன்வைக்கப்பட்டு வளர்த்தெடுக்கப்பட்ட சுயநிர்ணய உரிமையை நிராகரித்து முதலாளித்துவம் ஏகாதிபத்தியம் என்பனவற்றை கேள்விக்குட்படுத்தாத போலியான சுயநிர்ணயத்தின் அவசியத்தை ஏகாதிபத்தியமும் முதலாளித்துவமும் பரப்புரை செய்ய முற்பட்டுள்ளது. அவற்றுக்கு துணைபோவதற்கு வூட்ரோ வில்சனை God father ஆக கொண்டு செயற்படுகிறார் தமிழ்மாறன். அதற்காக சுயநிர்ணயத்தின் அறிமுகம் வளர்ச்சி என்பன யாருக்கும் தெரியக் கூடாது என்பது அவருக்கு நியாயமாகப் பட்டாலும் அவை பற்றி எவருக்கம் தெரியாது என்று நினைப்பதுதான் அவரது அறியாமையாகும்.

இவ்வாறு அவரது தேவை என்ன என்பது இன்னும் சில மாதங்களில் இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வுக்கு அமெரிக்கா திணிக்கவிருக்கும் தீர்வுகள் பற்றி அறியவரும்போது தெளிவாகும். அமெரிக்கா அதன் உளவு ஸ்தானமான சி.ஐ.ஏ. என்பன பற்றிய நமது தொடர்ந்த எச்சரிக்கைகள் நிஜமாகும் காலம் வெகுதொலைவில் இல்லை என்பது அமெரிக்காவின் தற்போதைய நிலைப்பாடு தெளிவுபடுத்தி வருகிறது.

தமிழ் புத்திஜீவிகள் பலர் ஏற்கனவே ஏகாதிபத்தியத்திய அக்கறைகளுக்காக கத்தை கத்தையாக பெற்றுக்கொண்டு சோரம் போய்விட்டனர். தமிழீழமே உயிர் என்றவர்களும் தடம் மாறி அதற்கு எதிராகிவிட்டனர். மாக்சியவாதிகளாக அறிமுகமான சில பேராசியர்கள் கூட தேசியவாதச் சகதியில் வீழ்ந்து, மாக்சியத்தை மறந்து தேசியத்தை மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் திண்டாடுகின்றனர் சுயநிர்ணயம் பற்றி புதிய புரட்டல்களை செய்வோர்கள் எத்தனைகாலம் தான் ஏமாற்றுவார் என்று பார்ப்போம்.

இதை விட சுயநிர்ணய உரிமைப்பற்றி லெனினுக்கு முதல் ஸ்டாலின் எழுதியுள்ளாதகவும் புதிய கண்டுபிடிப்பை தமிழ்மாறன் செய்துள்ளார். தேசியம், தேசிய இனங்களின் உரிமை பற்றிய வளர்ச்சியே சுயநிர்ணயம். அதனை லெனினே முதலில் முன்வைத்தார். 1917 அக்டோபர் புரட்சிக்கு முன்பும் பின்பும் தேசிய இனங்களின் உரிமைகள் பற்றி ஆராய்ந்து கட்சியின் வேலைத்திட்டமொன்றை தயாரித்து வழங்கும் கட்சிக் குழுவிற்கு ஸ்டாலின் தலைமை தாங்கினார் என்பதுதான் உண்மையாகும்.

லெனின் அவர்களின் நூல்கள் பல அண்மையில் மலிவு விலையில் விற்கப்பட்டன. அவற்றை வாங்கிப் படித்திருந்தாலாவது தமிழ்மாறனுக்கு ஏதாவது விளங்கியிருக்கும். அது கூட அவருக்கு விளங்கிக்கொள்ள நியாயம் இல்லை தான். அவரது நோக்கம் வேறுதானே.

ஒரு கருத்திற்கு எப்போதுமே எதிராக எழுதுவது ஒருவகை. சிறிதுகாலம் ஒரு கருத்திற்கு ஆதரவாக எழுதிவிட்டு பின்பு அதற்கு எதிராக எழுதுவது இன்னொரு வகை. எப்போதுமே ஒரு கருத்திற்கு ஆதரவாக எழுதுவது போன்று எழுதிக்கொண்டு எதிரான கருத்துக்களை பரப்புவது இன்னொரு வகை. இதில் சட்டக்கல்வியாளர் தமிழ்மாறன் எந்தவகை என்பதை கண்டு கொள்வது அதிக சிரமத்திற்குரிய ஒன்றல்ல.

கார்ல் மாக்ஸ் உட்பட முக்கியமான மாக்சிய அறிஞர்கள் யூத இனத்தை சேர்ந்தவர்களாகையால் முஸ்லிம் மக்களை மாக்சிசத்திற்கு எதிராக சிந்திக்க வைக்கும் பிரசாரங்களை ஏகாதிபத்தியம் திட்டமிட்டு செய்தது. அதனடிப்படையில் மதத்தால் இஸ்லாமியர்களாக இருக்கும் சோஷலிஸ நாட்டு மக்களை சோஷலிஸ அமைப்பிற்கு எதிராக கிளர்தெழச் செய்யும் ஏகாதிபத்தியம் பெருமளவில் வெற்றயாக்கியது. அதனால் பலநாடுகளில் சோஷலிஸ் அமைப்பு குலைக்கப்பட்டது. மிஞ்சி, இருக்கும் சோஷலிஸ நாடுகளில் இஸ்லாமியர்களை கொண்டு எதிர் புரட்சிகளை செய்து வருகின்றது அமெரிக்கா சோஷலிஸ அமைப்புக்களுக்கு எதிராக கிளர்ந்தெழுந்த மக்களுக்கு பிரிந்து செல்லும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமை இருப்பதாக அமெரிக்க ஏகாதிபத்தியம் வற்புறுத்தியது.

அதன் தேவை நிறைவேற்றப்பட்டதும் இன்று 'இஸ்லாத்திற்கு' எதிராக உலகளவில் அமெரிக்க ஏகாதிபத்தியம் யுத்தத்தை நடத்துகிறது. இஸ்லாமிய புத்திஜீவிகளை கொண்டு சோஷலிஸ அமைப்பிற்கு எதிராக செயற்பட்டது போன்று அதே புத்தி ஜீவிகளை கொண்டு 'இஸ்லாமிய அடிப்படை வாதத்திற்கு' எதிராக செயற்படுகிறது.

அதேபோன்று தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு ஆதரவாக எழுதுவதாகப் 'பாவனை செய்து கொண்டு அதற்கு எதிராகச் செயற்படும் கைங்கரியங்களை செய்ய வல்லவர்களில் ஒருவராகத் தமிழ்மாறன் இருந்துவிட்டுப் போகட்டும். ஆனால் சுயநிர்ணய உரிமையின் வரலாற்று ரீதியான அடிப்படைகளைத் தெரிந்து கொள்ளும் எவரும் தமிழ்மாறன் போன்ற மெத்தப்படித்தவர்களிடம் ஏமாந்து கொள்ள மாட்டார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



புதியபூமி

# தமிழ்த் தேசியமும் குறுநலப் பித்தும் [3]

## தமிழ் மக்கள் என்போர் யார்? எவர்?

தமிழ்ப் பொது மக்கள் மூன்றாம் கட்ட ஈழப்போர் ஓய்வடைந்தமையையிட்டுக் குதூகலம் அடைந்துள்ளனர். இலங்கையில் உழைப்பில் ஈடுபட்டு, அந் உழைப்பிலேயே தமது ஊதியத்தைப் பெற்று வாழும் தொழிலாளர்கள், சொந்தமாகவோ குத்தகைக்கோ நிலத்தில் பயிரிட்டுத் தம் வயிற்றுக்குச் சோறிட்டு வாழும் விவசாயிகள், கடலில் மீன் பிடித்து வாழும் கடற்தொழிலாளர், அரச தனியார் ஊழியர்கள், எழுத்தாளர்கள் கலைஞர்கள் ஆகிய அனைத்துத் தரப்பினரும் அமைதியில் மகிழ்வுற்றுள்ளனர்.

1977களின் பின்னர் திறந்த பொருளாதாரம் இலங்கையில் அறிமுகமாகியது. அதன் அறுவடையாக இலங்கை ரூபாவின் மதிப்பு குறைந்தது. எனவே இந்நாட்டில் உழைப்பதன் மூலம் எவரும் மாதாந்த வரவு செலவைத் துண்டு விழாமல் நடத்த முடியாது. இதனால் ஈழப்போரைச் சாட்டாகக் கொண்டு வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்து அரசியல் அடைக்கலம் தேடிச்சென்று அங்கேயே வாழும் தமிழ் மக்கள் இன்னொரு புறம்.

இவ்வாறு புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் தயவில் தங்கியிருக்கும் இலங்கையில் வாழும் மக்கள் குடியினர் மறுபுறம்.

கட்டற்ற வெளிநாட்டுப் பொருள் இறக்குமதியால் உள்ளூர் உற்பத்தியாளரான விவசாயிகளும், கடல்வலயத் தடைச் சட்டங்களால் பாதிக்கப்பட்ட மீன்பிடித் தொழிலாளர்களும் யுத்த நடவடிக்கைகளால் உள்நாட்டிலேயே தமிழ்த் தேசியத்தால் புறக்கணிக்கப்பட்ட தொழிலாள - விவசாயிகள்! இடம் பெயர்ந்து வாழும் ஏனைய மக்கள் பிரிவினரும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் நிவாரணங்களிலேயே தங்கி வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

வடக்குக் கிழக்குக்கு வெளியே இடம் பெயர்ந்து வாழும் சாதாரணத் தமிழ்ப் பொதுமக்கள் சிங்களவர், முஸ்லிம்கள், மலையக மக்கள் ஆகிய பிரிவினருக்கு அடுத்த படியிலேயே போர்கால நிலவரங்களில் தம்மை வைத்துக்கொள்ளப் பழகிக்கொண்டனர். பொலீஸ் பதிவு முதல் தேடுதல் வேட்டைவரை அரச பாதுகாப்பப்படையினர் இவர்களை இவ்வாறே அடையாளப்படுத்தினர்.

அடையாள அட்டைப் பரிசீலனையின் போதும் பெயரிலும் பிறப்பிலும் உள்ள பதிவுகளின் அடிப்படையில் பாதுகாப்புப் படையினர் "பயங்கரவாதத் தமிழர்" என்பதை உறுதிசெய்து கொள்ள வழிவகுத்தது. பிறப்பில் யாழ்ப்பாணம் முதல் மட்டக்களப்பு வரையான வட கிழக்கிலுள்ள பிரதேசப் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் 'சந்தேகம்' நீடிப்பதே நிலபரமாகும். எனவே இவர்கள் நாலாந்தரப் பிரஜைகளாகவே கணிக்கப்பட்டனர்.

யுத்தகாலத்தில் இலங்கையின் சகல பகுதிகளுக்கும் இவர்கள் செல்ல முடியாதவாறு கட்டுப்பாடுகள் அரச பாஸ் நடைமுறை மூலமும் பல்வேறு பாரபட்சம், புறக்கணிப்புகள் வடிவிலும் நடைமுறைப்படுத்தப்பட்டன.

சிங்கள-முஸ்லிம் மலையக மக்கள் பிரிவினர் இலங்கைத் தமிழர்களுடன் உறவு வைத்துக் கொள்வதும் ஊடாடுவதும் ஆபத்தெனப் புரிந்து கொண்டே அச்சத்துடன் தொடப்புகளை மிக்க கவனமாகவே பேணிக் கொண்டனர்.

தமிழ்த் தேசியத்தைக் கட்டமைத்த தமிழ்த் தலைவர்கள் சிங்களவர்களை 'எதிரிகள்' என்றும், முஸ்லீம்களை 'துரோகிகள்' அல்லது 'காட்டிக் கொடுப்போர்' என்றும், மலையக மக்களை இந்தியர்கள் அல்லது தோட்டக்காட்டார் என்றும் வகைப்படுத்திக் கொண்டனர். இத்தகைய படிம வகைப்பாடுகள் தமிழ்த் தேசியத்தின் திட்டமிட்ட சூழ்ச்சியாகும். இதன் மூலம் வர்க்க ரீதியில் ஒன்றுபட வேண்டிய சாதாரண சிங்கள - முஸ்லீம் - மலையக - தமிழ் மக்களை பிரித்தே வைத்தனர்.

ஆயுத வியாபாரங்களிலும் மேற்குலக ஆயுத உற்பத்திக் கொம்பனிகளுடன் உறவும் நெருக்கமும் கொண்டிருந்தனர். திறந்த பொருளாதாரத்துக்கும் பூகோளமாக்கல் என்ற நவகொலனித்துவ நிகழ்ச்சி நிரலுக்கும் தம்மை விசுவாசப்படுத்திக் கொண்டனர்.

1977ல் திறந்த பொருளாதார ஒட்டகத்தை இலங்கையில் நுழைய விட்ட ஜே.ஆரின். திட்டங்களுக்கு தமிழ்த் தேசியத் தலைவர்கள் ஒத்தூதினர். நீலன் தீருச்செல்வம் முதல் சகல தமிழ்த் தலைவர்களும் இந்த ஒட்டகம் பற்றிய அக்கறையின்றி புனித தமிழர்களாகத் தமது கற்பைக் காத்துக் கொண்டனர். பொருளாதாரப் பிரச்சினைகள் என்பதும் பல்தேசியக் கொம்பனிகளுக்கு தனியார் மயமாக்கும் நடவடிக்கைகளும் இவர்களைப் பொறுத்தவரை தமிழர்களின் பிரச்சினைகளேயல்ல. அது சிங்களவர்களின் பிரச்சினையென்று ஒதுங்கிக் கொண்டனர்.

1970 முதல் 1977 வரை யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த விவசாயிகள் அன்றைய ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அரசாங்கத் தில் வெளிநாட்டுப் பொருட்களுக்கான இறக்குமதித் தடையால் உப உணவு உற்பத்தியில் இலங்கையிலேயே முன்னின்றனர். வெங்காயம், மிளகாய் உற்பத்தி செய்து பெரு முதலீட்டனர். காணி, நிலம் வேண்டி வீடுகள் கட்டிச் செல்வந்தராயினர்.

### செண்பகன்

வன்னி, கிளிநொச்சி, விஸ்வமடு, ஒட்டிசுட்டான் எனப் பெருநிலப்பரப் பொங்கும் நெல்லு மிளகாய் என விவசாயத்தில் பெருவளர்ச்சி பெற்றது. கிழக்கு மாகாணத்தில் அம்பாறை, மட்டக்களப்பில் நெல்லறுவடைகளும் உச்சத்தைத் தொட்டன. 'விவசாய மன்னர்கள்' தேர்ந்தெடுக்கப்பட்டனர். வடக்கில் இருந்த கூட்டுறவுச் சங்கள்கள் துணி உற்பத்தியில் முதலிடம் வகித்தன. வெளிநாட்டு ஆடைகளின் இறக்குமதி கட்டுப்படுத்தப்பட்டமையால் கைத்தறி நெசவாலைகள். மின்தறி நெசவாலைகள் விருத்தி பெற்று வளர்ச்சி பெற்றன. பண்டத்தரிப்பு. சங்கானை வல்லை நெசவாலைகள் இலங்கை முழுவதற்குமான துணிகளை உற்பத்தி செய்து விநியோகிப்பதற்கான முயற்சிகளை முன்னெடுக்கத் தொடங்கின.

சீவல் தொழிலாளர்கள். கள்ளு உற்பத்தியில் உயர் சமூகத்தினரின் தணிப்பட்ட தயவில் வாழும் நிர்பந்தம் நீக்கப்பட்டது. கூட்டுற அமைப்பு நிறுவப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட தொழில் துறையாக சீவல் தொழில் மாற்றம் கண்டது. பனம்பொருள் அபிவிருத்திச் சபை அமைக்கப்பட்டது. தெங்கு பனம் பொருள் அபிவிருத்தி காணப்பட்டது.

உணவுறபத்தி, நெசவுத் தொழில், பின்தங்கிய சமூகப்பிரிவினரின் தொழில் அங்கீகாரம் என்பன தேசிய பொருளாதாரம் என்ற முனைப்பில் முன்னெடுக்கப்பட்டன.

கூலி விவசாயிகளாக வயல் காணிகளைச் செய்துவந்த குத்தகை விவசாயிகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டு நெறிக்காணிச் சட்டத் திருத்தத்தின் கீழ் உழுபவனுக்குள்ள நிலத்தின் மீதான உரிமைகள் உறுதி செய்யப்பட்டன. வீடுகளுக்குச் சொந்தக்காரராய் இருப்போரிடமிருந்து வாடகை குடியிருப்பாள்ர் பாதுகாக்கப்பட்டனர்.

இவை யாவும் தமிழ் மக்களின் பொருளாதாரத்தை 'மணிஓடர் பொருளாதாரம்' என்ற நிலையிலிருந்து தமிழ்த் தேசியப் பொருளாதாரமாகக் கட்டமைக்க உதவின.

எனினும் தமிழ் விவசாயிகளுடைய அபிவிருத்தியை தமிழ் தேசியத் தலைவர்கள் கண்டுகொள்ள வில்லை. "சோறா. சுதந்திரமா" என்று தமிழர் நலன்பேண் தேசிய பொருளாதாரத்தை கிண்டல் செய்து 'தமிழ் எங்கள் உயிர்' என்று கோசமெழுப்பினர். இடதுசாரிகளின் பொருளதாரக் கோட்பாட்டை "பண்டித் தத்துவம்" என்ற பகிடி பண்ணினர்.

1981ல் ஜனாதிபதிக்கான தேர்தல் நடைபெற்றபோது தமிழர் விடுதலைக் கூட்டணியினர் பங்குபற்றாமல் "தமிழீழம் முடிந்த முடிவு' என்பதனால் 'ஸ்ரீ லங்கா' அரசின் தேர்தலை பகிஸ்கரிப்பதாக முழங்கினர். தேர்தல் முடிவு வெளியான போது யாழப்பாணத்தில் ஸ்ரீ லங்கா சுதந்திர்க் கட்சியின் வேட்பாளர் கொப்பேகடுவ கூடுதல் வாக்குகளைப் பெற்றிருந்தார். அப்போது தமிழர் கூட்டணிச் செயலாளர் நாயகம் "வெங்காயம் மிளகாய்க்குக் கிடைத்த வாக்குகள்" என்று கொச்சைப்படுத்தி கூறினார். இதன் சாராம்சம் என்னவெனில் தமிழ்த் தேசியத்தில் தமிழ் விவசாயிகள் உள்ளடக்கப்படவில்லை என்பதேயாகும்.

யாழ்ப்பாணத்தில் தொழிற்சங்கங்களை அமைப்பதில் இடதுசாரிகளே முன்னின்று பணியாற்றினர். மாநகர சபைத் தொழிலளார் சங்கம். பரந்தன் இராசயனத் தொழிற்சாலை ஊழியர் சங்கம், மில்க்வைற் தொழிலாளர் சங்கம் போன்ற பலவற்றை ஆரம்பித்து தொழிளாலர் உரிமைகளுக்காகப் போராடி வந்தனர். அப்போதெல்லாம் தொழிலாளர் நியாயமன்றுகளில் தொழிலாளர்கள் சார்பில் தே சண்முகதாசன். போன்ற தலை வாதாடிவர தமிழ் முதலாளிகளு தமிழ் தேசியத் தலைவர்களா ஆலாலசுந்தரம் போன்றோர் வ தோற்றமை வரலாறாகும்.

இவ்வாறாக தமிழ் விவசாயிகள தொழிலாளர்களைத் தேசிய அகராதியில் சுத்தமான தமிழர் தமிழ்த் தேசியத் தலைவர்கள் க தவறினர். இது தமிழ்த் தேசி உயர்வர்க்கக் குணாம்சமே வேறொன்றுமல்ல.

தமிழ் மக்களின் ஜனநாயக- உரிமைகள் தமிழ்த் தேசிய விடு போராட்ட சிங்காசனங்களின் ஒடுக்கப்பட்டன.

சமூக குறைபாடுகள் ஒழிப்புச் சட் கீழ் சமூக உரிமை கோரி அமைப்புத் தகரட்டும் சமத்துவ ஓங்கட்டும்' என்ற பதாகையின் நடத்தப்பட்ட வெகுஜனப் போரா களைப் பற்றி பாராளுமன்றத்தில் த தேசியத் தலைவர்கள் 'சங் போராட்டங்கள் தான் சங்கானை நடக்கிறதென்றும் கேலி பேசியத சிங்கள வழித் தோன்றல்களின் வாரிசுகள்தான் சாதிச் சண் செய்கின்றனர்' என்றும் குறிப் சமூகத்தினரைக் குறிப்பிட்டு கு சுமத்தினர்.

ஆலயப் பிரவேசப் போராட்டங்க புகழ் பெற்ற மாவிட்டபுரக் கோ போராட்டத்தில் தமிழீழப் பிதா மகர 'அடங்காத் தமிழன்' தமிழர்க உள்ளே செல்லவிடாமல் மறித்து நி தமிழ் தலைவராக விளங்கினார்.

'ஒடுக்கப்பட்ட மக்கள் சாதியின் பெய அடையாளப்படுத்தப்பட்டனரே த 'தமிழர்கள்' என இன்றுவ அடையாளப்படுத்துவதில் தமி தேசியத் தலைமைக்குத் தயக் இருந்து கொண்டே வருகின்றது.

தமிழ் விவசாயிகள். தொழிலாளர்க ஒடுக்கப்பட்ட பின்தங்கிய வகுப் ஆகியோரை பாராளுமன்றத்தி பேராலும் போராட்டத்தின் பேரா தங்கள் உரிமைகளைத் தியாக செய்யும்படி தமிழ்த் தேசியத் தலை களால் நிர்ப்பந்திக்கப்பட்டன அவர்களுடைய ஜனநாயக - மனி உரிமைகள் மதிக்கப்பட்டாமை போ அவர்கள் 'தமீழத் தேசிய' த்தினு அடக்கம் பெறாமலே அப்புறப்படுத்த பட்டு அந்தப்புரங்களிலே வைக்க பட்டனர். இத்தகைய வர்க்க பின்புலத்திலேயே தமிழ்த் தேசிய தன்னை ஆண்ட பரம்பரையின வாரிசுகளாக வார்த்தெடுத்துச கொண்டதில் வியப்பேதுமில்லை.

---

# செம்மணிக்கு கிடைத்த "நீதி" தான் நிமல்ராஜனுக்கும் கிடைக்குமா?

## கேள்விகளுக்கு பூமிதாசன் பதிலளிக்கிறார்

**கேள்வி :** இந்தியாவில் முஸ்லிம் பயங்கரவாதம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**க. சிவசங்கரன், றம்பொட.**

**பதில்:** இந்தியாவில் முஸ்லிம் தீவிரவாதம் உண்மையில் முஸ்லிம்களுக்கே அதிகம் கெடுதலானது. அது முஸ்லிம்களை அவர்களுடைய நண்பர்களிடமிருந்து விலக்கி வைக்கிறது. இந்தியப் பத்திரிகைகளில் முஸ்லிம் தீவிரவாதிகளது சில செயல்களுக்கு நிறைய விளம்பரம் தரப்படுகிறது. அதைவிடப் பெரிய அளவில் நாளாந்தம் நடைபெறுகிற இந்துத் தீவரவாதக் குழுக்களின் வேலைகளை நமக்கு யாரும் சொல்லுவதில்லை. இது இன்னும் முக்கியமான பயங்கரவாதம். குஜராத் கலவரத்தில் முஸ்லிம்களே பெரும் அளவில் கொல்லப்பட்டாலும், இந்து - முஸ்லிம் கலவரம் என்றல்லவா செய்தி வருகிறது.

**கேள்வி:** அமரர் குமார் பொன்னம்பலம் கொலை பற்றிய விவரங்களில் அவருடைய பாலியல் நடத்தை பற்றியும் தகவல்கள் வெளியாகியுள்ளனவே. இது விஷமமா?

**ஆர். யோகேஸ்வரன், கொழும்பு 14.**

**பதில்:** குமார் பொன்னம்பலம் குடும்பத்துக்கு நெருக்கமான ஒருவரது ஏடு சண்டே லீடர். அது இவ்வாறான விடயங்களுக்கு வழ்ங்குகிற முக்கியம் விஷமத்தை விடப் பரபரப்பை ஏற்படுத்துவதுதான். குமார் பொன்னம்பலம் கொலை செய்யப்பட்டதற்கு அரசியல் தான் காரணம். அதை யாரும் திசை திருப்ப அனுமதிக்கப்படக் கூடாது.

**கேள்வி :** பத்திரிகையாளர் நிமல்ராஜனின் கொலை பற்றிய தடயங்கள் கிடைத்ததாகச் சொன்னார்களே. என்ன ஆனது?

**எஸ். மரியதாஸ், மன்னார்.**

பதில் : நிமல்ராஜன் கொலையைத் துப்புத் துலக்காமலே செய்த போது நடந்து ஒரு கொலைக்கு உடந்தையானவர்களைத் தேடினால் சில முக்கிய அதிகாரிமாருக்குச் சங்கடமாகிவிடும். அரசாங்கங்களின் தேவை அதுவல்லவே. யார் ஆட்சிக்கு வந்தாலும். அரசியல் தீர்வு வந்தாலும் செம்மணியில் புதைப்பட்டவர்களுக்குக் கிடைத்த நீதிதான் நிமல்ராஜனுக்கும்.

**கேள்வி :** தமிழ்ப் பட்டதாரிகளுக்கு இனியாவது. வேலை வாய்ப்புக்கள் உண்டா?

**கே. சுதர்சன், யாழ்ப்பாணம்.**

**பதில் :** சிங்களப் பட்டதாரிகளுக்குக் கூட வேலையில்லை என்று ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது. பிரமதர் ரணில் தான் சொல்லி விட்டாரே எல்லாவற்றையும் ஒரேடியாகத்தீர்க்க முடியாது என்று. தமிழ்த் தலைவர்மாரும் அதை ஏற்றுக்கொண்டு விட்டார்கள். உங்களுக்கு வேலை கிடைக்குமோ தெரியாது. தமிழ்த் தலைர்களின் உறவுகட்கு கிடைக்கிற வாய்ப்பு மட்டும் உண்டு. பிரதமர் சொன்னமாதிரிப் பிரச்சினையில் ஒரு பகுதி இப்போதைக்கு தீர்ந்துவிடும்.

**கேள்வி :** இனி நமது விவசாயத் துறையிலும் அயலார் முதலிட வருவார்களாமே!

**பல்கலைக்கழக மாணவர், கொழும்பு.**

**பதில் :** ஏற்கனவே தோட்டங்களில் பெரிய பகுதி அயலாரிடம் பறிபோய் விட்டது. அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் முதல் பல அரச முதலீடுகள் பறிபோய்க்கொண்டே இருக்கின்றன. இனிமேல் மொட்டையடிக்க மிஞ்சியிருப்பவர்கள் நமது விவசாயிகள் தானே. அடுத்தபடியாக, மீனவர்களுக்கும் ஒரு திட்டம் வரும்.

**கேள்வி:** சமாதானமப் பேச்சுவார்த்தைகளுக்கு இந்தியா முட்டுக்கட்டை போடுமானால். தமிழ்த் தலைவர்கள் இந்தியாவை வற்புறுத்த முன் வருவார்களா?

**பி. சுபாஸ், வவுனியா.**

**பதில்:** இந்தியா செய்த எத்தனையோ காரியங்களைப் பற்றி இதுவரை ஒரு தமிழ்த் தலைவர் என்றாலும் எதுவும் பேசியது உண்டா? அவர்கள் அமெரிக்காவுக்கும் நல்ல பிள்ளைகள். இந்தியாவுக்கும் நல்ல பிள்ளைகள். அந்தப் பேரைக் கெடுத்துக் கொள்ள முடியுமா?

**கேள்வி :** பாராளுமன்றத் தேர்தலை நடத்தத் தடையாக இல்லாத போர்ச் சூழல் சிறிது தணிந்திருக்கிற போது உள்ளுராட்சித் தேர்தலை நடத்தாமல் தடுக்க போர்ச் சூழலைக் காரணம் காட்டுகிறார்களே தமிழ்த் தலைவர்கள். இது சரியா?

**கு. சிவகுமார், யாழ்ப்பாணம்.**

**பதில்:** போர்ச் சூழல் என்று. அவர்கள் சொல்லுவது. நீங்கள் நினைக்கிற போரை அல்ல. தமிழ்த் தலைவர்களிடையே நடக்கிற போர் பாராளுமன்றத் தேர்தலின் பிறகு இன்னும் மும்முரமாகி விட்டது.

**கேள்வி :** ஜே.வி.பி தற்போது சோர்ந்து போய் நிற்பது போல் தெரிகிறதே. காரணம் கூறுவீர்களா?

**வீ. அன்பழகன், ராகலை.**

**பதில் :** உள்ளுராட்சித் தேர்தலில் ஜே.வி.பிக்கு ஆசனங்கள் கூடியுள்ளது. ஆனால் வாக்கு வங்கியில் 50வீதம் சரிவு ஏற்பட்டுவிட்டது. அவர்கள் செய்த பேரினவாதப் பிரச்சாரத்திற்கு இப்படி ஒரு பதிலடி மக்களிடமிருந்து கிடைக்கும் என எதிர்பார்க்கவே இல்லை.

**கேள்வி :** ஜனாதிபதி சந்திரிகா மிக அடக்கமாக இருந்து வருகிறார், ஏன்?

**ஏ. எம். அஸ்வர், புத்தளம்.**

**பதில் :** ஓடும் மீன் ஓடி உறுமீன் வருவரை காத்திருக்குமாம் கொக்கு.

படிப்பகம்

www.padippakam.com



# ..ணாதிக்கமும் பெண்ணியமும்

..கரன். கீழைக்காற்று வெளியீட் ..10 அவுலியா காசிபு தெரு. ..ன 600 0002. 272 ப. இந்திய ..0.00.

..ருந்து வரும் சமர் பத்திரிகையின் ..ர்களுள் ஒருவரான ரயாகரன், .. காலமாக மாக்சியத்தைக் ..சைப்படுத்துகிற முயற்சிகட்கு ..த் தளராது போராடி வருகிறவ .. ஆணாதிக்கமும் பெண்ணியமும் .. இந்த நூல் பெண்ணுரிமைப் ..னையை வரலாற்று நோக்கிலும் ..ாசியச் சூழல் பற்றிய குறிப்பான ..த் துடன் உலகுதழுவிய ..லும் விரிவாக ஆராய்கிறது.

..ற் சமுதாயத்திற்கும் பெண்ணடி ..னத்துக்கும் உள்ள துண்டிக்க ..த உறவையும் மாக்சியம் ..று கையாளுகிறது என்பதையும் .. சமகாலப் பெண்ணியவாதப் ..தகளுடன் பொருத்திப் பார்த்து, ..ய விரோதப் பெண்ணியவாதிகள் ..வைக்கும் பொய்களையும் அவர் களது வர்க்க நிலைப்பாட்டையும் நிதர்சனமாகக் காட்டுகிறார்.

இடதுசாரி இயக்கங்கள் பெண் விடுதலையை தமது போராட்டச் செயற் பாட்டின் முக்கியமான ஒரு அம்சமாக முன்னெடுக்க வேண்டிய தேவை இந்த நூலின் மூலம் தெளிவாகின்றது. இந்த நூல் இன்றைய சூழலில் தமிழில் அவசியமான, பயனுள்ள, போற்றத்தக்க வரவாகும்.

நூலில் உள்ள சில தகவல்கள் பற்றிய கருத்து வேறுபாடுகள் இருப்பினும் நூலின் பலவீனம் அது சென்றடைய வேண்டியவர்கட்கு எளிதாக விளங்கக் கூடிய விதமாகப் பகுதிகளாகப் பிரிக்கப் பட்டுத் துணைத்தலைப்புக்களுடன் வழங்கப்படாமை எனலாம்.

கனதியான விடயங்களை வாசகர்கள் உள்வாங்குவதற்கு நீண்ட பந்திகளைக் கொண்ட நீண்ட அத்தியாயங்கள் தடையாகவே இருப்பதால் இது பற்றியும் ஆசிரியர் எதிர்காலத்தில் கூடிய கவனம் எடுப்பாரென எதிர்பார்க்கிறேன்.




இந்த நூல் பரவலான வாசிப்புக்குக் கிட்டாது போகும் வாய்ப்பு அதிகமாக இருப்பதற்கு வாசிப்புப் பழக்கத்தின் நலிவு ஒரு முக்கிய காரணமாகலாம். எனவே இந்த நூலின் முக்கியமான அத்தியாயங் களைத் தெரிந்து மாக்சியக் கல்வி வட்டங்களும் பெண்ணுரிமை ஆய்வு அமைப்புகளும் வாசித்து விவாதிப்பதன் மூலம் நூலாசிரியரின் கடும் உழைப்பின் பயனை முழுமைப் படுத்தலாம்.

# இப்படியும் மனிதர்கள்!

ஆசிரியர் புதிய பூமி
அன்புள்ள ஆசிரியருக்கு,

போராசிரியர் சிவத்தம்பி தன்னை ஒரு மார்க்சிசவாதி என்று அடையாளப் படுத்திக் கொண்ட ஒரு காலமும் இருந்தது. என்றைக்குத் தமிழ்த் தேசிய வாத அலை எழுந்ததோ, அன்றைக்கே அதனோடு பயணம் தொடங்கி விட்டார். அதிலும்கூட, ஒரு ஒழுங்கோ நேர்மையோ அவருக்கு இருக்கவில்லை. இடத்துக்குத் தக்கபடி பேசுவார். வலியர்கள் முன்பு வளைந்து குறுகுவார். மெலியவர்கள் மீது தனது மேதாவிலாசம் பற்றிய ஒரு மயக்கத்தைக் காட்டி மிரட்டுவார். அவருக்கு அரை நூற்றாண்டாகக் கை வந்த கலைகள் இவை..

நம் யாழ்ப்பாணத்தில் அவர் இருந்த காலத்தில், முதலில் ஒரு விடுதலை இயக்கத்துடன் இருந்தார். பிறகு வன்முறையால் வெற்றி பெற்ற இன்னொன்றுடனும் இருந்தார். முஸ்லீம்கள் விரட்டப்பட்ட போது, அதற்கும் நியாயங் கண்டுபிடித்தார். கொழும்புக்கு வந்து சேர்ந்த பிறகு 1997ஆம் ஆண்டு முஸ்லீம்கள் விரட்டப்பட்டதைக் கண்டித்து ஒரு அறிக்கையில் ஒப்பமிட்டார். மட்டக்களப்பில் பதவி பெற்றதும் அடுத்த வருடமே அதை மறுத்தார். பிறகு பின் நவீனத்துவம் பற்றிய ஒரு நிபுணர் போல பாசாங்கு செய்தார். பகிரங்கமாக அது பற்றிய சவால்கள் வந்ததும் பதுங்கி நழுவினார்.

கொஞ்சக் காலமாகவே, தமிழ்த் தேசியவாதிகள் காலில் விழாத குறையாகக் கெஞ்சி மன்றாடுவதும் முன்னாள் கம்யூனிஸ்ட் பிரமுகர் ஒருவரின் தயவில் தமிழின் பேரால் பிழைப்பதும், தமிழ் நாட்டில் தி.மு.க.ஆட்சியுடன் சமரசம் பண்ணிப் பரிசும் பட்டமும் பெறுவதுமாக அவரது திருவிளையாடல்கள் தொடர்ந்து வந்தன. அதே நேரம், தனக்குப் பாராட்டுக்களில் நம்பிக்கையில்லை என்று சொல்லிக் கொண்டே, தன்னைச் சிறிதும் மதிக்காத கம்பவாரித்தீயருடைய ஏற்பாட்டில் நடந்த விழாவில் கவுரவிப்புத் தேடியது வரையிலான எல்லாமும் இவர் எப்படியாக்கொத்த ஆள் என்று எங்களுக்குச் சொல்லித்தருகிறது.

இப்போது தமிழ்க் கட்சிக் கூட்டணியின் வெற்றிக்குப் பிறகு இது 'காலத்தின் தேவை' என்றும் தான் அதனுடைய சூத்திரதாரி என்ற விதமாகவும் பேசுகிறார். ஊர், சாதி, இனம், இடதுசாரி அரசியல், பழைய பாடசாலை இப்படி வசதியான எதையும் தனக்கு வாய்ப்பாகப் பாவிக்கிற சிவத்தம்பி பிழைக்கத் தெரிந்த ஒரு பேராசிரியர். அவருக்கு தன்னுடைய 'காலத்தின் தேவை' தெரியும். காலத்துக்கு ஏற்றபடி தன்னுடைய கதையை மாற்றவும் தெரியும்.

இடதுசாரிகளை அறவே வெறுக்கும் உதிரிகள் எல்லாம் இவரை நாடி நயப்பது ஏனென்று புரியும். இனம் இனத்தை நாடும் தானே!

அ. சுகுமாரன், கரவேட்டி மேற்கு.

## ..துத்துவ......

..க்க தொடர்ச்சி.

..ட்டப்பட்டது. அதில் ஐம்பது பேர் ..ல் இறந்தனர். அவர்களில் ..ம்பாலானவர்கள் பெண்களும் ..தைகளுமே. அப்பாவி களின் ..த்துக்குக் காரணமான வர்கள் ..மையாகக் கண்டிக்கப்படவும் ..டிக்கப்படவும் வேண்டியோர் ..தில் எந்த முஸ்லிமுக்கும் மறு ..தே இல்லை.

..ாலும், அடுத்த நாளே. குஜராத்தின் ..நகரமான அஹமதாபாத்தில் ..லிம்கட்கு எதிரான வன்முறை ..ங்கிவிட்டது. அதுவேமாகப் பரவி .. குஜராத்தையும் பற்றியது. ..லிம்களது சொத்துக்கள் சேதப் ..தி அழிக்கப்பட்டன. இதுவரை 700 .. அனேகமாக எல்லாருமே முஸ்லிம் .. கொல்லப்பட்டுள்ளனர். இதற்கு ..ராத் மாநில அரசு பொறுப்பேற்றாக ..ண்டும் ஆனால் அங்கே இருப்பது பாரதிய ஜனதா ஆட்சி. எனவே அதையிட்டு எதுவும் நடவாது.

குஜராத் வன்முறையை 1983ஆம் ஆண்டு இலங்கையில் நடந்ததுடன் ஒப்பிட்டால் பல பயங்கரமான ஒற்றுமை கள் தெரியும். முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறையைத் தடுக்க குஜராத் பொலிஸ் எதுவுமே செய்யவில்லை. குஜராத் அரசின் உதவியுடனேயே வன்முறை கிளறிவிடப்பட்டுள்ளது. வன் முறை நிகழ்வுகள் குஜராத் ஆட்சியாளர் களால் நியாயப்படுத்தப்பட்டு இந்துக் களின் நியாயமான கோபம் என்று அவ்வன்முறைக்குக் கௌரவம் வழங்கப் பட்டிருக்கிறது. இன்னமும் முஸ்லிம்கள் தம் உயிருக்கு உடைமைகளுக்கும் பாதுகாப்பில்லாமல் வாழுகிறார்கள்.

இந்து என்ற இடத்தில் சிங்கள என்றும் முஸ்லிம் என்ற இடத்தில் தமிழ் என்றும் வைத்து இந்த நிகழ்வுகளை ஆராய்ந் தால் தமிழ் மக்கள் குஜராத் முஸ்லிம்கட் காகச் கொதித்து எழவேண்டும். அப்படி நடக்குமா? நிச்சயமாக நடவாது.

ஏனென்றால் நியாய உணர்வு சிறிதும் இல்லாத "காரியம் பார்க்கிற" அரசியல் தான் தமிழ்த் தேசியவாதத்தைக் கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாக வழி நடத்தி வருகிறது.

அமெரிக்காவின் நரித்தனமான அரசியலை நம்புவதற்கும் இந்தியாவின் இரட்டை வேடத்தைக் கவனியாமல் விடுவதற்கும் தமிழர்களைத் தூண்டுகிற தலைமைகளும் தமிழ் ஏடுகளும் உள்ள வரையும் தமிழர்களை ஏய்ப்பது எந்த எதிரிக்கும் இலகுவாகவே இருக்கும்.

ஒன்றை மட்டும் நாம் மறக்கலாகாது பேரினவாதம், மதவெறி, சாதிவெறி, பிரதேசவெறி போன்றவை ஒரே விதமாகவே வேலைசெய்கின்றன. அவை ஒரே விதமான விளைவுகளையே உண்டாக்குகின்றன.

இந்த மண்ணில் இனப்பகைமை வேரூ ன்றக் காரணமாக இருந்த சிங்களப் பேரினவாதத்தைக் கண்டிக்காமல் 'பயங்கரவாதத்தை' யாரும் கண்டிப்பது எவ்வளவு நியாயமில்லாததோ, அவ் வளவுக்கு இந்துத்துவத்தைக் கண்டிக்க மாட்டாத எவரும் முஸ்லிம் தீவிரவாதத் தைக் கண்டிப்பது நியாயமில்லாதது.

இன்று இந்துத்துவக் காரர்களுக்கு அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் ஒரு புதிய நெருக்கம் ஏற்பட்டுள்ளது. அந்தத் தைரியத்தில் தான் பாக்சிஸ் முஸ்லிம்களுக்கு எதிராக அமெரிக்கா வில் கிளறிவிடப்பட்டுள்ள வெறியை இந்துத்துவம் தனக்கு வசதியாகப் பாவிக்க விரும்புகிறது. ஆனால் கணக்குகள் சில பிழையாகிள விட்டன. இன்று இந்த மதப்பூசல் காரணமாக இந்தியாவைச 'சர்வதேச அரங்கில் தனிமைப்படுத்தி அமெரிக்க அரசாங்க மள் தன்னுடைய மேலாதிக்கத்தைத் தென்னாசியாவில் நிறுவ மும்முரமாக உழைக்கிறது. இதில் ஒரு பகுதி இப்போது நோர்வேயைக் கூட முந்துவதற்கு அமெரிக்கா காட்டும் சமாதான ஆர்வம்.

மறுபுறம், பி.ஜே.பி. ஆட்சிக்கும் விஸ்வ ஹிந்து பரிஷத்தக்கும் காட்டப்பட்டு வரு கிறது. உண்மையில் அது ஒரு குடும்ப தகராறு மட்டுமே. ராமர் கோயில் கட்டு வதற்கு பி.ஜே.பி.யிடம் எந்த விதத் தயக்கமும் இல்லை. ஆனால் பழி தன் மேல் விழாதபடி நாடகம் ஆட வேண்டிய தேவை அதற்கு.

கோயில் கட்ட மட்டுமன்றி, அதற்கான தொடக்கப் பூசையையும் நடத்துவதற்கு இந்திய உயர் நீதிமன்றம் அனுமதி மறுத்தது ஒரு நலல் விடயம். ஆனால் இது முடிவான ஒரு விடயமல்ல.

ஏதாவது ஒரு வாய்ப்பான தருணத்தில் இடிபட்ட பாபர் மசூதி இருந்த மண்ணைத் தமதாக்குகிற இந்துத்துவத் திட்டம் சாம்பல் பூத்த நெருப்பாக பி.ஜே.பியிடம் உள்ளது. இந்திய வரலாற்றைத் திருத்தி எழுதுகிற காரியத்தில் மும்முரமாக உள்ள பி.ஜே.பி. தனது உண்மையான எசமானர்களை மீறுவது இயலாத காரியம் பி.ஜே.பி. இந்து மதவெறியின் பாராளுமன்ற முகம் மட்டுமே அதை வென்று இந்திய மண்ணெங்கும் வேரோடியுள்ள விஷப் பூண்டை அழிக்க முடியாது.

பாராளுமன்ற இடதுசாரிகளும், முதலாளியக் காங்கிரசும் பிற அரசியற் கட்சிகளும் பி.ஜே.பியைப் பாராளுமன்ற அரசியலில் பலவீனப்படுத்துவது பற்றி மட்டுமே கவனம் காட்டுகின்றனர். அதன் ஆதாரமான மதவாத அரசியலை அழிப்பதானால், வெகுசனப் போராட்டங் கள் மூலமும் மக்கள் அரசியல் மூலமுமே அது இயலும். இந்தியாவின் இதற்கான பயனுள்ள முயற்சிகள் மாக்ஸிய லெனினிசக் கட்சிகளாலும் குழுக்க ளாலும் முற்போக்கான வெகுசன இயக்கங்களாலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பெருமுதலாளியம் - ஏகாதிபத்தியம் என்ற புதிய கூட்டணி யை முறியடிப்பது ஒரே நாளில் நடக்காது. அது ஒரு நீண்டபயணம்.

இந்தியாவின் பாடங்களை நாமும் இங்கு கற்பது அவசியம். நம்மிடையே உள்ள மதவாத விஷ வேர்களை முற்றாகக் களைவதும் நம் ஜனநாயக முற்போக்குச் சக்திகளது முக்கியமான பணிகளில் ஒன்று.

..பக்க தொடர்ச்சி

## ..ழ் ஊடகங்கள் பற்றி

..டையாளம் வளர்க்கப்பட்டதோ ..தெல்லாம் முற்றாகவே அழிப்பது ..று கங்கணங்கட்டிக்கொண்டு ..ந்தி" செயற்படுவதற்கான அரசியல் ..க்கம் தெளிவானது.

..க்தி"யின் சொந்தக்காரர்கள் ..னாட்டு முதலாளியத்திடம் சரண ..ந்துள்ள தரகு முதலாளிகளும் ..ள்ளூர்ப் பெருமுதலாளிகளுமே. உலக ..மாதல் அவர்களுக்கு இனிப்பானது. ..னவே மேல்நாட்டு முதலாளிகளின் ..காள்ளையடிப்புக்கு வசதியான ..ாரியங்களை அவர்கள் கூசாமற் ..சய்கிறார்கள்.

..கர்வுக் கலாச்சாரத்தை வளர்ப்பதும் ..தசிய தொழில், பொருளாதார ..ளர்ச்சியை அயலாருக்கு அடமானம் ..வப்பதும் பண்பாடு சீரழிந்த ஒரு ..மூகத்தில் மட்டுமே லேசாக நடை ..பறுகிறது. எனவே பண்பாட்டுச் ..ரழிவில் "சக்தி" முனைப்பாக நிற்பதில் ..திசயம் என்ன?

..க்தியின் செய்திகளை வழங்கும் போது ..ண்பு கொட்டை எழுத்திலும் இப்போது ..ன்ன எழுத்திலும் "தகவல் எங்களுடை ..து. தீர்மானம் உங்களு டையது" ..ன்று போடுகிறார்கள். எந்தத் ..கவலைத் தருவது அதை எப்படித் ..ருவது எனத் தீர்மானிக்கிறவர்கள் ..ார்? அதன் பின் பார்வையாளர் ..ன்னுள்ள தெரிவு என்ன? தீர்மானம் ..ன்ன? இது போன்ற கீழ்த்தரமான ..மாசடி வெறேன்ன இருக்க முடியும்.

..ன்முறையை ஒரு பொழுது போக்காக் ..ப் பணம் குவிப்பது சில முதலாளிகளின் ..கெட்டித்தனம். இப்போது செய்தியைப் ..பொழுது போக்காக மாற்றிவிட்ட சக்தி ..போன்ற நிறுவனங்கள் வன்முறைச் ..ம்பவங் களை "ருசிகரமான" செய்தி ..ாகவும் அதே நேரம் பொழுது ..போக்காகவும் வழங்குகின்றன.

இங்கிலாந்தில் "கிறைம் வாட்ச்" நிகழ்ச்சி நீண்ட காலமாக தொலைக்காட்சியில் வருகிறது. அது பொலிஸ் அனுசரனை யுடன் நடப்பது. பொலிஸாருக்கு சில குற்றச் செயல்களைத் துப்புத் துலக்கப் பொதுமக்களுடைய உதவி தேவை என்றால். அவற்றை அந்த நிகழ்ச்சி மூலம் பொது மக்கள் அறியத் தக்க முறையில் கவனமாகத் தயாரித்து வழங்குவார்கள். குரூரமான காட்சிகள் அதிற் காட்டப்படுவதேயில்லை எனலாம். இது ஆபாச சினிமாவும் வன்செயலும் மக்களால் ஓரளவுக்கு ஏற்கப்பட்ட ஒரு பண்பாட்டுச் சூழலில் செய்தி தொடர்பான விடயங்களில் கடைப் பிடிக்கப்படும் கட்டுப்பாடு. எந்த நிகழ்ச்சியிலும் பாலுறவு, நிர்வாணக் காட்சி, கெட்ட வார்த்தைகள். வன்முறை, குரூரமான காட்சிகள் வருமானால் அது பற்றி முன்கூட்டியே எச்சரிக்கப்படுகிறது.

நமது மக்களுக்கு முன் செய்தி என்ற பேரில் அவிழ்ந்துவிடப்படுகிற குரூரமான வக்கிரங்கள் மக்கள் மனதில் எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தும் என்று எம்.ரி.வி. - சிரச - சக்தி தொலைக்காட்சித் தயாரிப்பாளர்களோ நிர்வாகிகளோ முதலாளிகளோ அறியாதவர்கள் என்று நம்ப இடமில்லை. அவர்கள் வேண்டு மென்றே செய்கிறார்கள் என்று எண்ண நிறையவே நியாயம் இருக்கிறது. இவையெல்லாம் திட்ட மிட்ட சமூகச் சீரழிவுச் செயல்கள் என்பதில் அதிகம் ஐயத்துக்கு இடம் இல்லை.

கவலைக்குரிய பல வேறு விடயங்களில் இன்னொன்று தமிழ் மொழிப் பிரயோகம். இலங்கை ஒலிபரப்புத் துறையில், குறிப்பாக வானொலியில் மிகவும் தரமான செய்தி அறிவிப்பாளர் களை நாம் கடந்த ஐம்பது ஆண்டுகட்கு மேலாக அறிந்திருக்கி றோம். இன்றும் ரூபவாஹினியில் செய்தி எவ்வளவு பொய்யாக இருந்தாலும் அது வாசிக்கப்படும் முறை பற்றி அதிகம் முறைப்பட இயலாதளவுக்கு செய்தி வாசிப்போர் பயிற்றப்பட்டுள்ளனர். தமிழை இலக்கணப் பிழையின்றியும், அதே சமயம், எளிமையாகவும் தெளி வாகவும் பேசுவது பற்றிய அக்கறை இன்னமும் தமிழ்ச் செய்தி அறிவிப்புப் பகுதியினரிடம் உள்ளது. இதற்கு எதிர் மாறான ஒரு போக்கை நாம் சக்தியில் தொடர்ந்தும் அனுபவித்து வருகிறோம்.

அறிவிப்பாளர்கள் ஒழுங்காகப் பேசவும் உச்சரிக்கவும் பயிற்றப்பட்டு முன்னரே செய்தி வாசிக்கப் பணிக்கப்படுகின்றனர். அவர்கள் முறையாகப் பேசுகிறார்களா என்பது பற்றிய அக்கறை கூட நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களுக்கு இருப்ப தாகத் தெரியவில்லை. அயற்பேர்களை மட்டுமன்றி உள்ளூர்ப் பேர்களைக் கூறுவதற்குக் கூட அறிவிப்பாளர்கள் முறையாகப் பயிற்றப்படுவதில்லை. செய்தி வாசிப்பதற்கும் ஒத்திகை கொஞ்சம் இருந்தால் ஆரம்பநிலை வாசிப்பாளர்கட்கு பயனிருக்கும் கேட்பவர்கட்கும் தொல்லை குறைவு. ஆனாலும் சக்தி நிர்வாகம் இந்த மாதிரிச் சின்ன விடயங்கள் பற்றி அக்கறைப்படுமா?

செய்தி அறிக்கைகளை எழுதுகிறவர் களுடைய சொற்பஞ்சம் நம்மைத் திணறடிக்கிறது. ஒன்று விட்டு ஒரு வசனம் 'குறிப்பிடத்தக்கது" என்று முடிவதும் "நானும் அவரும்" என்பதை நான் மற்றும் அவர்" என்று சொல்லாத குறையாக எல்லாவற்றுக்கும் "மற்றும்" போடுவதும் சினக்க வைக்கிறது. செய்திகளாகத் தொகுக்கப்படுவன பற்றி இவர்களுக்கு அதிகம் அதிகாரம் இல்லாமற் போகலாம். தமிழையாவது ஒழுங்காக எழுதலாமே. தமிழகத்துக் கோமாளித்தனத்தைப் பிரதி பண்ண வேண்டாமே.

சினிமாப்பாடல்கள் வந்து கும்மாளம் போடுவதற்கு வேண்டுமானால் ஒத்திகை பார்ப்பார்கள். ஏனென்றால் அங்கே பணம் புரளுகிறது. சிங்கள நிகழ்ச்சிகளைப் பார்ப்பவர்கள் முன் போதியளவு தெரிவு உள்ளது. ஓரிரு நல்ல நிகழ்ச்சிகளாவது நாளாந்தம் ஏதாவது ஒரு ஒளிபரப்புக் கம்பனியிடமிருந்து கிடைக்கும். தமிழர்கள்? ஒருபுறம் ரூபவாஹினியில் அசட்டை. மறுபுறம் சக்தியின் சாக்கடை நிகழ்ச்சிகள். தொலைக்காட்சியில் தமிழ் நிகழ்ச்சிகளே இல்லாவிட்டால் ஒருவேளை நன்றாக இருக்குமோ?

## தொழிற்சங்க..

2ம் பக்க தொடர்ச்சி

இன்றைய நிலைமையில் பத்து வீதத்திற்கும் மேற்படாத சம்பள உயர்வை மட்டுமே வழங்க தோட்டக் கம்பனிகள் தயாராக இருக்கின்றன என்ற செய்தி ஏமாற்றத்தை தருகிறது. வழமைபோல் தோட்டத் தொழிற் சங்கங்கள் எவ்வித தயார் நிலையில் இல்லாமல் இருப்பது இன்றும் ஏமாற்றத்தையே தருகிறது.

தோட்டத் தொழிற்சங்கங்கள் முன்னேற்பாட்டுடன் அறிபூர்வமான தர்க்கப்பூர்வமான சம்பள உயர்வு பற்றிய வரைவுடனேயே கூட்டு ஒப்பந்த பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும். அதுவே தொழிலாளர்களுக்கு ஆரோக்கியமானதாக கூட்டு ஒப்பந்தம் தொடர்பாக பகிரங்கமாக கலந்துரை யாடியும். நிபுணர்களுடன் ஆலோசித்தும் ஏற்றுக் கொள்ளக்கூடிய முடிவுக்கு வரவேண்டும். இல்லா விட்டால் வழமை போன்று தோட்டக் கம்பனி களிடம் தொழிற்சங்கங்கள் ஏமாற வேண்டி யிருக்கும் ஆனால் எப்பொழுதும் தொழிலாளர்களை தொழிற்சங்கங்கள் தொடர்ந்து ஏமாற்றக் கூடிய சூழ்நிலை தொடராது என்பதை தொழிற்சங்கத் தலைமைகள் உணரத்தவறக்கூடாது.

இந்நிலையில் தோட்டத் தொழிலாளர் களும், அவர்கள் மீது அக்கறை கொண் டுள்ள அமைப்புகளும், தனிநபர்களும் தொழிற்சங்கங்கள் சார்பில் நியாயமான கோரிக்கைகளை முன்வைக்க அழுத்தங்களை கொடுக்க வேண்டும். விரைவான கலந்துரை யாடல்களை செய்து நிதானமான கோரிக்கைகளை முன்வைக்க முயல வேண்டும். அதன்மூலம் நியாயமான சம்பள உயர்வுடன் கூடிய புதிய அம்சங்களைக் கொண்ட தொழிலாளர் களுக்கு நன்மை தரக்கூடிய புதிய கூட்டு ஒப்பந்தத்தை உருவாக்க முடியும்.

படிப்பகம்

www.padippakam.com



புதிய பூமி
புதිය පූමි
REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
PUTHIYA POOMI
சுற்று 09 ஏப்ரல் 2002 பக்கம் 12 விலை 10/- சுழற்சி 46




படித்தோம்
பெற்றோ
வேலையி
வீதியில்
நிற்கின்றோம்
செயலகம் மு
வேலையா
பட்டதாரிகள்
போராட்ட

# இஸ்ரேலிய அமெரிக்க கூட்டுச் சதியால் பலஸ்தீன மக்கள் கொன்றழிக்கப்படுகிறார்கள்.

யூதர்கள் ஒரு மதத்தின் அடையாளத்தைக் கொண்டவர்கள். அம் மதத்தைப் பின் பற்றுவோர் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் இருக்கிறார்கள். ஹிட்லரும் நாஜிக் கட்சியும் இவ்யூதர்களுக்கு எதிராக எண்ணற்ற கொடுமைகளைப்புரிந்தனர். அந்த அடக்கு முறைக்கு எதிராக எழுந்து தமக்கென ஒரு நாடு வேண்டும் என எழுந்த இயக்கமே ஸியோனிச இயக்கமாகும். அதன் காரணமாக இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின் மத்திய கிழக்கிலே அரபு நாடுகள் மத்தியில் தோற்றுவிக்கப் பட்டதே இஸ்ரேல் நாடாகும்.

ஹிட்லரிடம் வதைப்பட்ட யூதர்களின் வழித் தோன்றல்கள் இஸ்ரேல் நாட்டை உருவாக்கி விஸ்தரிக்க ஸியோனிச வழி நின்று பாலஸ்தீன மக்களின் தாயகப் பூமியைக் கபளீகரம் செய்து காலத்திற்குக் காலம் விஸ்தரித்துக் கொண்டனர். இதற்கு அமெரிக்கா முழுப்பக்க பலத்தையும் வழிகாட்டலையும் வழங்கியது.

பலஸ்தீன மக்கள் முப்பது லட்சத்திற்கும் மேற்பட்டோர் இஸ்ரேலின் கொலை வெறி யுத்தத்தில் அகதிகளாகி அண்டை அயல் அரபு நாடுகளில் தஞ்ச மடைந்து முகாம்களிலேயே அரை நூற்றாண்டாக வாழ்ந்து வருகின்றனர். ஐ.நா.சபையிலே பாலஸ்தீன மக்களின் வாழ்வுரிமை தாயகம் தனி அரசுரிமை பற்றி எவ்வளவோ பேசியும் தீர்மானம் நிறைவேற்றியும்



இஸ்ரேல் அதுபற்றி கவனத்தில் எடுக்கவில்லை. அதே வேளை உலக நாடுகள் இஸ்ரேலுக்கு எதிராக பாதுகாப்புச் சபையில் கொண்டு வந்த தீர்மானங்களை அமெரிக்கா தனது வீட்டோ அதிகாரத்தைப் பாவித்து செயலிழக்கச் செய்துள்ளது.

ஸியோனிசம் என்னும் மதத் தேசியத்தை எவ்வாறு அமெரிக்கா மத்திய கிழக்கில் தனது கருவியாகப் பயன்படுத்தி தனது எண்ணெய் வளங்கள் மீதான கொள்ளையிடலுக்கு இடம் தேடிக் கொண்டது என்பதை நாமும் ஒரு பாடமாகக் கொள்ளல் வேண்டும். இன மதத் தேசியங்களை இறுதியில் ஏகாதிபத்தியமே தனது பொருளாதார ராணுவ ஆதிக்கங்களுக்காகப் பயன்படுத்திக் கொள்ளும் என்பதற்கு இஸ்ரேல் கண்முன்னே உள்ள சான்றாகும்.

கடந்த மார்ச் மாதத்திலிருந்து பாலஸ்தீனத்தின் முக்கிய நகரங்கள் இஸ்ரேலிய ராணுவத்தால் டாங்கிகள் சகிதம் முற்றுகையிடப்பட்டிருக்கிறது. மக்கள் நீர் மின்சாரம் உணவு இன்றித் தவித்து வருகிறார்கள். சில இடங்களில் மக்களே ஆயுதம் கொண்டு இஸ்ரேலிய ராணுவத்துடன் மோதுகிறார்கள்.

பாலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத் பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைமையகத்தினுள் முடக்கப்பட்டிருக்கிறார். அவரை அடிபணியுமாறு இஸ்ரேலிய ஸியோனிச வெறியரான எரியல் ஷரோன் வற்புறுத்துகிறார். இஸ்ரேலின் இக்கேடுகெட்ட மனித நாகரீக விரோத முற்றுகைக்கு உலகவேட்டைக்காரரான அ ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ பு ஆதரவு வழங்கி நிற்கிறார். "வீ தியாக மரணடைவேனே சரணடைய மாட்டேன்" என அரபாத் சூளுரைத்து நிற்கின்ற

இந்நிலையில் இஸ்ரேலிய அ கூட்டுச் சதியையும் கொடு இஸ்ரேலிய முற்றுகை தாக்குத எதிர்த்து பாலஸ்தீன மக்க ஆதரவு தெரிவிப்பது நமது கடமை

## சமாதானப் பூதம்

என் பிள்ளை எங்குற்றான்
என்றேங்கித்
தன்பிள்ளை தான்தேடித்
தெருவெல்லாம் திரிகின்றேன்!

உன் பிள்ளை யார் என்று
உறுக்குவார் சிலர்!
இங்கெவரும் இல்லையென்பார்
பிடிக்கவில்லையென்பார் – பிடித்ததைப் பார்த்திருந்தால்
அப்போதே விட்டுவிட்டோமென்பார்!
காணாமல் போனோர் பட்டியலைப் பார் என்பார்!
விரும்பி வந்தான் போராடச் சேர்த்துவிட்டோம்
போவென்று அரும்பு மீசை முளைக்காதோர்
படலையைச் சாத்தென்பார்

புதையல் எடுக்கப் பூதமொன்றுக்குப் பலியாக்க
பிள்ளைகள் பிடிப்பாரென்றறிந்தேன் அந்நாளில்
கதையிது தொடராக காலமிது முடிவாக
பிள்ளையைப் பெற்றவள் தேடுகிறேன்
தடவுகிறேன் ஓடுகிறேன் வாடுகிறேன்
பாரெல்லாம் கேட்கத் தான்.

அரசடி ஆலடி புளியடி வேம்படியெனத்
தெருவெல்லாம் பிள்ளையொன்று பாலருகப்
பலரும் பார்த்திருக்கும் சேதிசொன்னார்
வேர்த்து விறுவிறுக்க மரத்தடியெல்லாம் தேடினேன்
ஆருக்குந் தெரியாமல் கல்லாய் கிடந்தான் என்பிள்ளை! தெருவெல்லாம்!

ஆனைப்பந்தியில்
முப்பதாண்டுகள் முன்பொருநாள்
என் பிள்ளையானின் அப்பனவன்
தென்னம்பிள்ளைப் பாளையில்
தான் பிறந்து நடம் புரிந்தான்!
இப்போது இங்கே பம்பலப்பிட்டி பெருவளவுடையான்
தப்பாது பெருங்கோயில் மதிலுடனும் தாவுடையான்
மூலஸ்தானத்து முழுப்பாதுகாப்பும் மிக்குடையான்
ஆனாலும் என்பிள்ளை
இப்போது பயந்து விட்டான்
சமாதானப் பூதமொன்றுக்கு பலியாக்கி விடுவரெனப்
பயந்து விட்டானென் பிள்ளை
அவனிப்போ தன் சொந்த இடம்விட்டு
மீண்டும் தென்னம் பிள்ளையின்
வட்டுப் பாளைக்குள் பதுங்கிவிட்டான்!
ஐயகோ என்பிள்ளை! என்பிள்ளையார் பாவம்!
தும்பிக் கையான் துணையெனச் சொல்லாதீர்!
விட்டுவிடும்!

– ஈழத்துத் தேவன் பூதனார் –

## ஐ.தே.கட்சி ...

1ம் பக்க தொடர்ச்சி

முழு மக்களையும் பாதிக்கும் வகையில் கொண்டு வரப்பட்டுள்ளது.

இவற்றின் காணரமாக அன்றாட அத்தியாவசி உணவுப் பொருட்களின் விலைகள் வேகமாக உயர்ந்து கொண்டே செல்கின்றன இதுவும் அரசாங்கத்தின் நூறு நாள் திட்டத்தில் உள்ளடங்கும் ஒன்றாக மாறியுள்ளது. இவ் விலைகள் உயர்வுக்கும் வாழ்க்கைச் செலவுகளின் அதிகரிப்புக்கும் ஏற்ற சம்பள உயர்வு பற்றி வாயே திறக்கப்படவில்லை.

அதேவேளை அந்நிய பல்தேசியக் கொம்பனிகளின் வருகைக்கு சகல வகைச் சலுகைகளும் வாய்ப்புகளும் வழங்கப்பட்டு தனியார்மயம் தாராளமாகச் செயல்படுத்தப்படுகிறது. உதாரணமாக வெளிநாட்டவர் இங்கு நிலம் வாங்குவதற்கு இருந்து வந்த நூறு வீத வரி முற்றாக ரத்து செய்யப் பட்டு அந்நிய சக்திகள் மகிழ்ச்சிப்படுத்தப் பட்டுள்ளது. பெற்றோலியக் கூட்டுத் தாபனம் உடன் தனியார் மயமாகின்றது. அதன்மூலம் எரிபொருட்களின் விலைகள் விரைவில் தாறுமாறாக உயர்த்தப்படவுள்ளன. மின்சார நெருக்கடியைக் காரணம் காட்டி மின்சார சபை தனியார் கைகளுக்கு ஒப்படைக்கப்பட உள்ளது. எஞ்சியுள்ள தபால். புகையிரதம். சுகாதாரம். கல்வி என்பனவும் தனியார் மயத்திற்குள் தள்ளப்படும் அபாயம் உண்டு.

இவை ஐக்கிய தேசியக் கட்சி 1977ல் ஆரம்பித்த ஆட்சி அதிகாரப் பயணத்தின் அடுத்த கட்டத்தையே வெளிக்காட்டி நிற்கிறது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா புதியவர் புனிதமானவர் உறுதியானவர், பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு 'மந்திரக் கோல்' வைத்திருப்பவர் என்று எண்ணும்படியான பிரமை ஊடகங்களால் பரப்புரை செய்யப்பட்டு வந்தது. கறைகள் படியாத Mr. Clean என்ற தோற்றத்தை பிரதமருக்கு வழங்க அவரது அதிகாரத்தை வலுப்படுத்த முனைகின்றனர்.

அதன் வழியிலேயே பிரதமர் ரணில் யாவற்றையும் அடக்கி வாசித்து வருகிறார். கண்டபடி வாயைத் திறக்காது இருந்த போதிலும் அவரது உள்ளக்கிடக்கைகள் யாவும் பெருமுதலாளித்துவ பேரினவாதத்தையே கெட்டியாகக் கொண்டிருப்பதை எந்தப் போர்வையாலும் மறைத்துவிட முடியாது. அதேவேளை அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அடிக்கடி ஊடகவியலாயர்கள் முன்பாக தோன்றி உளறி வருகின்றார். அவரது கருத்துக்களுக்கும் பிரதமரது எண்ணங்களுக்கும் தொடர்பு இல்லை என எவரும் பிரித்துப் பார்க்க இயலாது. இதே அமைச்சர் தான் முன்பு பொதுசன முன்னணியில் இருந்து கொண்டு முன் பின் முரணாக உளறி விடயங்களைக் குழப்பி வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

புரிந்துணர்வு ஒப்பந்தமும் அவற்றைத் தொடர்ந்த நடவடிக்கைகளும் மக்களுக்கு ஆறுதல் தருகின்ற அதேவேளை அதனைக் காட்டிக் கொண்டு மோசமான பொருளாதார செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதாவது முன்பு யுத்தத்தின் மறைவில் நடாத்தப்பட்ட அனைத்து மக்கள் விரோத பொருளாதார நடவடிக்கைகளும் இப்போது புரிந்துணர்வு ஒப்பந்தம் சமாதான முன்னெடுப்புகள் என்பதன் மறைவில் முன்னெடுக்கப்படுகின்றன.

எனவே ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் ஒட்டு மொத்தத்தில் தனது சுயரூபத்தை வெளிக்காட்ட ஆரம்பித்து விட்டது என்பதையே சம்பவங்கள் தெளிவுபடுத்தி வருகின்றன.

## அரசாங்கமும்....

1ம் பக்க தொடர்ச்சி..

மீனவர்கள், சிறு கைத் தொழிலாளர்கள், சுயதொழில் முயற்சியாளர்கள் எவ்வகையிலும் விமோசனம் பெற மாட்டார்கள்.

மேலும் புலிகள் இயக்கம் விட்டுக் கொடுக்காது போராடி வந்துள்ளமை பற்றி இரண்டு கருத்துக்கு இடமில்லை. ஆனால் அதுவே ஜனநாயக ரீதியான கருத்துக்களுக்கும், கட்சிகளின் சுதந்திரமான செயற்பாடுகளுக்கும் தடையாக இருந்து விடக் கூடாது. முன்னைய நாட்கள் போன்று அல்லாது, பேச்சு, எழுத்து, கூட்டம் கூடும் சுதந்திரங்கள் உட்பட தொழிற்சங்க ஜனநாயக உரிமைகளுக்கு பூரண மதிப்பளித்தல் வேண்டும். இவை திருப்தியான வகையில் ஊடகவயலாளர் சந்திப்பில் பிரதிபலிக்கவில்லை என்பது சுட்டிக் காட்டப்பட வேண்டியதாகும்.

மேலும் வடக்கு கிழக்கில் முஸ்லீம் மக்களின் உரிமைகள் பற்றி பேசுவது என்ற நிலை வரவேற்க வேண்டியதாகும். அவ்வாறே சிங்கள சாதாரண மக்கள் பற்றியும் சாதகமான முடிவுக்கு வருதல் வேண்டும்.

எனவே புரிந்துணர்வு ஒப்பந்தம், யுத்த நிறுத்தம், தாய்லாந்து பேச்சுவார்த்தை, இவற்றைத் தொடர்ந்து அமைய உள்ள இடைக்கால சபை போன்ற சகலவற்றிலும் அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட பாதையிலேயே பயணம் செய்ய வேண்டியுள்ளது. அந்தப் பாதை எது? என்பத மிக மிக முக்கியாமானதாகும். அதில் வடக்கு கிழக்கு மக்களுக்கும் அவர்களது இருபது வருடகால அழிவுகள் இழப்புகள் யாவற்றுக்கும் உரிய நிவாரணமும் புனரமைப்பும் புனர்வாழ்வும் கிடைக்குமா? அல்லது பெரு முதலாளிகள், அந்நிய பல்தேசியக் கம்பனிகள், என்போருக்கும் அவர்களது வடக்கு கிழக்கு முகவர்களுக்கும் பயன் பெற வாய்ப்பு ஏற்படுமா?

அரசாங்கமும் புலிகள் இயக்கமும் பயணம் செய்யப்போகும் பாதையில் தத்தமது உள்ளார்ந்த இலக்குகளையும் நோக்கங்களையும் அடைந்து கொள்வதற்கு முயற்சிக்கக் கூடாது. பதிலாக வடக்கு கிழக்கு மக்களை மீட்டெடுத்து சுதந்திரம் சுபீட்சம் நிம்தி என்பனவற்றின் ஊடான இயல்பு வாழ்க்கைக்கு அப்பாதையின் வழியாக அழைத்துச் செல்ல அனைத்து முயற்சிகளையும் இரு தரப்பினரும் செய்ய வேண்டும். இதனையே வடக்கு கிழக்கு மக்கள் உட்பட ஜனநாயக சுதந்திர மனித உரிமைகளை நேசிக்கும் அனைத்து மக்களும் விரும்புகிறார்கள். மக்களது இவ் விருப்பம் எந்தளவுக்கு நிறைவேறும் என்பதைச் சிறிது பொறுத்திருந்து பார்ப்போம்.

## மலையக மக்கள்

1ம் பக்க தொடர்ச்சி

அதைவிடுத்து பிறபடுத்தப்பட்ட மக்களுக்கென்று இந்தியாவில் சாதி சமூக ரீதியாக வழங்கப்படும் சலுகைகளுக்கு ஒத்த வகையான சலுகைகளை பெறுவதற்கான ஏற்பாடுகளை அரசியலமைப்பில் மலையகத் தமிழ் மக்களுக்கு உறுதிசெய்ய வேண்டும் என்று கேட்பது மிகவும் தாழ்ந்தநிலைக் கோரிக்கையாகும்.

மலையகத் தமிழ் மக்களை ஒரு தேசிய இனமான அங்கீகரித்து தேசிய இனத்திற்குரிய உரிமைகளை உறுதிசெய்து, பிறகு ஏனைய தேசிய இனங்களின் வளர்ச்சிக்கு அவர்களை உயர்த்துவதற்காக ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு விஷேட ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். இதுவே அடக்கப் படுகின்ற ஒரு தேசிய இனத்தின் விடுதலைக்கான முன்நோக்கிய நகர்வாக இருக்கும்.

தேசிய இன அடக்குமுறையிலிருந்து விடுபடுவதற்கு அரசியலமைப்பில் பெயரளவிலான சில சலுகைகளை உறுதிசெய்வது தீர்வாகாது. மாறாக தேசிய இன அடையாளத்தை மறுத்து மலையகத் தமிழ் மக்கள் ஒரு தேசிய இனமெயல்ல என்ற நிலைமைக்கே விஷேட சலுகைகளுக்காக கோரிக்கை வழி சமைக்கும்.

மலையகத் தமிழ் மக்களுக்கு பிற்படுத்தப்பட்ட சலுகைகளை கேட்பதுடன் மட்டுமன்றி மலையகத் தமிழ் மக்கள் என்று அழைக்கப்படுவது கட்டாயமல்ல என்று அபிப்பிராயத்தையும் சந்திரசேகரம் வெளியிட்டிருந்தார். மலையகத் தமிழ் மக்கள் என்று அழைப்பதா இந்தியத் தமிழர் என்று அழைப்பதா என்ற விவாதத்திற்கு தற்போது போகத் தேவை இல்லை என்றும் அவர் கூறியுள்ளார். இந்தியத் தமிழர் என்றழைப்பதே அவரின் உள் விருப்பமாகும்.

இந்தியப் பெரும் வர்த்தகர்களுடன் ஒருவராகத் தன்னை இணைத்துக் கொள்ளும் அவரின் விருப்பம் அவருக்கு நியாயமாதாக இருக்கலாம். அவரின் கட்சிக்கு கிடைத்த தேசியபட்டியல் எம்.பிப் பதவியையும் அவர் கொழும்பு வாழ் வர்த்தகர் ஒருவருக்கு வழங்கியது அவருக்கு நியாயமானதாக இருக்கலாம். அவரை பாராளுமன்றத்துக்கு அனுப்பிய வைத்த தோட்டத் தொழிலாளர்களுக்கும், மலையகத் தமிழ் மக்களுக்கும் அவை நியாயமாக இருக்க முடியாது. இந்திய வர்த்தக சமூகத்தின் நலன்களையும் ஆதிக்கத்தையும் ஏற்றுக் கொண்டு மலையகத் தமிழ் மக்கள் தங்களது வர்க்க, தேசிய இனத்துவ அடையாளத்தை தாரைவார்க்கத் தயாரில்லை.

வெளியிடுபவர் : இ. தம்பையா, இல. 47, 3ம் மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு யூகே. பிரின்டஸ் 98A, விவேகானந்தா மேடு, கொழும்பு 13.

படிப்பகம்